
இதழ் 235

# மண்

ஜேர்மனி / 2026

தை - மாசி / Jan - Feb















இலங்கையில் 2025 கார்த்திகை-மார்கழியில் இடம்பெற்ற

மிகப்பெரும் பேரழிவு

புயல், மழைவெள்ளம் - மண்சரிவு - 2025

## மண் சஞ்சிகையினரின் நிவாரணப் பணிகள்



மலையகம் - மஸ்கேலியா தோட்டம் - கொட்டகலை பிரதேசம்



மலையகம் - வேவண்டன் தோட்டம் - இறம்பொடை



மலையகம் - ஹற்றன் பிரதேச தோட்டம்

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** mann.sivarajah@gmail.com


**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

## அனைவருக்கும் வணககம்!...

## 36 வது ஆண்டு நிறைவில் மண் சஞ்சிகை - யேர்மனி

36வது ஆண்டை நிறைசெய்யும் யேர்மனி ”மண்”கல்வி,கலை,இலக்கிய,சமூக சஞ்சிகை.. (1990 - 2026 தை வரை) 235 இதழ்கள் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளமை மகிழ்ச்சி!.. 1990ம்ஆண்டு தைப்பொங்கல் அன்று (14.01.1990) யேர்மனி-டியுஸ்பேர்க் நகரில் வெளிவர ஆரப்பித்த ”மண்” என்ற பெயருடன் கல்வி, கலை, இலக்கிய,சமூக சஞ்சிகை (14.01.2026) முப்பத்தாறாவது (36) ஆண்டை நிறைவுசெய்து 37வது ஆண்டில் காலடி பதிக்கின்றது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

1990ல் கையெழுத்துப்பிரதியாக வெளிவர ஆரம்பித்து, தட்டச்சுக்கு மாறிப் பின்னர் கணனி வடிவாகி இன்றுவரை 235 இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. தொடர்ந்து வெளிவர அனைவரின் ஆதரவுகளை அன்புடன் எதிர்பார்க்கிறோம்.

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடு ஒன்றில் (யேர்மனி) சிறிய ஒரு தமிழ் சஞ்சிகை 36 வருடங்களாகத் தொடர்ந்து வெளிவந்த வரலாற்றுப் பதிவின் சாதனை மண்சஞ்சிகைக்கே உண்டு. இச்சஞ்சிகையால் பல நூற்றுக்கணக்கான தமிழ்ச்சிறார்கள் எழுதி வளர்ந்திருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான எழுத்தாளர்கள் எழுதி உயர்ந்திருக்கிறார்கள். பல ஆயிரம் வாசகர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்.

புலம்பெயர் தேசம் ஒன்றில் இருந்து சிறிய சஞ்சிகை ஒன்று பல கோடிக்கணக்கான நிதி உதவிகளை தாயகத்தின் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிவரும் முதலாவது தமிழ்ச் சஞ்சிகையாக தமிழுலகில் சாதனை படைத்து வெளிவந்து கொண்டிருப்பதற்கு வாசக உள்ளங்களின் மனிதநேயமே முக்கிய காரணமாக அமைந்தது என்றால் அது பெருமைக்குரிய விடையமாகும். அனைவருக்கும் பெரு நன்றிகள்..

தொடரும் தமிழ், இலக்கிய, எழுத்துப் பணிகளுடன் தாயக அகதிகள்,ஆதரவற்றோர், முதியோர், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு உதவும் நீண்டகாலப் பணிகள் தொடர உங்கள் ஆதரவுக்கரங்களை எதிர்பார்க்கிறோம். மனித நேய உதவிகளை வழங்கிவரும் நல்லுள்ளங்களுக்கும் எழுத்தாளப் பெருமக்களுக்கும் வாசக அன்புள்ளங்களுக்கும் பெரு நன்றிகள். வாசகர்கள், எழுத்தாளர்கள், நலன்விரும்பிகள், நட்புகள் அனைவருக்கும் தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துகள்!..

பிரதம ஆசிரியர் - மண் சஞ்சிகை - யேர்மனி - 14.01.2026

# இலங்கை மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சியை சந்திக்குமா?

இலங்கையில் "திட்வா" புயல் மழைவெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கி ஆயிரம்பேர்வரை பலியாகியிருப்பதுடன், இலட்சக்கக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்துள்ளனர். பேரனர்த்தத்தினால் ஏற்பட்ட பௌதிக ரீதியான நேரடிப் பாதிப்புகளின் பெறுமதி 4.1 பில்லியன் அமெரிக்க டாலராக் கணிப்பிடப்பட்டது.

இது ஒருபுறம் மனித துயரத்தை வெளிப்படுத்தியிருக்கும் அதே வேளையில் மறுபுறம் தொடர்ச்சியான காலநிலை அதிர்ச்சிகளைத் தாங்கும் அளவுக்கு இலங்கையிடம் போதிய நிதி வசதி இல்லை எனவும், இத்தகைய தீவிர வானிலை மாற்றங்கள் 2022 பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னர் எட்டப்பட்ட முன்னேற்றங்களைத் தலைகீழாக மாற்றக்கூடும் எனவும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில் இலங்கை அரசாங்கத்தின் உதவியுடன் உலக நாடுகளைச் சேர்ந்த அனர்த்த முகாமைத்துவ தொழில்நுட்ப நிபுணர்கள் ஊடாக இப்பேரனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் உலக வங்கி மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு வருகின்றது. அம்மதிப்பீட்டின் ஊடாகக் கண்டறியப்பட்ட ஆரம்பகட்டத் தகவல்களை உள்ளடக்கிய பூர்வாங்க அறிக்கை வெளியிடப்பட்டது. பேரனர்த்தத்தினால் 4.1 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான பாதிப்பு

இதனால் ஏற்பட்ட மறைமுகப் பாதிப்புகளின் பெறுமதி மற்றும் மீளக்கட்டியெழுப்பல் செலவினங்கள் என்பன கணிப்பிடப்பட்டதன் பின்னர் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட மொத்தப் பாதிப்பின் அளவு மேலும் உயர்வடையக்கூடும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தம் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தையே பறித்துள்ளது. இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மத்திய மலைநாட்டினபிரதேசங்களில் மிகவும் கடினமாக உழைக்கும் மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தை நாசமாக்கியுள்ள நிலை யில் அவற்றை மீட்டெடுக்கும் செயற்பாடுகள் மிகவும் கடினமான ஒன்றாக மாறியுள்ளது.

இருந்தபோதிலும்தற்போதய அரசின் செயற்பாடுகள் திறம்பட அமைந்ததால் பல வெளிநாடுகள், உலகவங்கி, நாணயநிதியம் , ஐரோப்பிய யூனியன், ஐக்கிநாடுகள்சபை போன்ற அமைப்புக்களும் பெரும் நிதி உதவிகளை யும் பொருள் ஆளணி உதவிகளையும் வழங்கி வருகின்றன. 2004 சுனாமிப் பேரனர்த்தத்தைவிட மூன்று மடங்கு பாதிப்புகள் ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

உலகம்வாழ் இலங்கை மக்களும் பெரும் உதவிகளை வழங்கி மனிதநேயத்தை வெளிப்படுத்திவருவது சிறப்பான விடயமாகும். மடிந்த மக்களுக்கு அஞ்சலிகள்... இருப்போரைக் காப்பாற்றுவோம்!.. **- ஆசிரியர் -**

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### தானது விரும்பு...

தானம் என்றால் உங்களுக்குத் தெரியும் வறுமையில் வாடுபவர்களுக்குத் தானம் கொடுத்து உதவுவதேயாகும். அதாவது பிறருக்குக் கொடுத்தல், கொடைத்தன்மை இப்படித் தானம் செய்வதில் தன்னிகரற்று விளங்கியவன் கர்ணன், சிபிச்சக்கரவர்த்தி, இவர்கள் கதை எல்லாம் உங்களுக்குத் தெரியும்.. இக்குணத்தினால் இவர்கள் பெற்ற உயர்வு பற்றியும் அறிவீர்கள். தானங்களில் எத்தனையோ வகையுண்டு அன்னதானம், கோ (பசு) தானம், வஸ்திரதானம், திரவியதானம் இப்படிப் பலப்பல. இவ்வாறு தானங்களைச் செய்யும் போது நல்ல ஒழுக்கமுடையவர்களுக்கே தகுதியானவர்களுக்கே செய்ய வேண்டும். அப்படித் தானம் செய்தால் நமது பாவம் போகும் என்பார்கள். ஆகவே தானம் செய்யும் போதும் தகுதியுடையவர்களுக்கே தானம் செய் என்கிறார் ஔவைப்பாட்டி.

### திருமாலுக்கு அடிமைசெய்...

ஒவ்வொருவரும் அவரவர் விருப்பப்படி கடவுளை வணங்குவார்கள். கடவுள் எல்லா உயிர்களையும் காப்பாற்றுகிறார். அத்தகைய கடவுளை வணங்கித் தொண்டு செய்தால் அவர் நம் கஸ்டங்களைப் போக்கிச் சுகமளிப்பார். நம் இந்து சாஸ்த்திரங்களின்படி பல கடவுளர்கள் உண்டு. ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு கடவுளை உருவாக்கியிருக்கிறார்கள். உருவாக்குவதற்குப் பிரம்மா காத்தல் கடவுள் திருமால் அழித்தலுக்குச் சிவன் இப்படியே பல்வேறு காரியங்களுக்குப் பல கடவுள்கள். ஔவைப்பாட்டி திருமாலை வணங்குபவர். இவ்வுலகில் துன்பமின்றி வாழ, காக்கும் கடவுளான திருமாலுக்குத் தொண்டு செய்து வழிபடு என்கிறார்.

# நல்நெறிபற்றி........

- வி நந்தகுமார் -

## திருத்தமாக வாழ் தினந்தோறும் திருநாளாகும்...

தவறுகள் தவிர்ப்பது தனிப்பெரும் திறமை.
தவறான வார்த்தைகளால் துயரங்கள் தோன்றுகிறது.
தவறுகள் தவிர்ப்பவர்கள் தவத்துடன் வாழ்கிறார்கள்.
தவறுகள் வராமல் தடுத்தல் தூய்மையின் தோற்றம்.
தவறான எண்ணங்களை தவிர்த்து வாழக் கற்றுக்கொள்.
தவறுகள் செய்யும்போது பல துன்பங்களுக்குள் தள்ளப்படுகிறாய்.
தவறுகள் புரிந்தவர்கள் தலைகுனிந்து தவிப்பது தவிர்க்க முடியாதது.
தவறுகள் தவிர்த்து வாழ்ந்தால், தெய்வீகத்தன்மை தோன்ற வழியுண்டு.
தவறுகள் தலைக்குமேல் வருமுன் தெளிவைத் தேடக் கற்றுக்கொள்.
தவறுகள் செய்யும்போது உன் சக்தி உன்னைவிட்டு விலகிச் செல்லும்.
தவறுகளும் தப்புக்களும் தானாக வருவதில்லை, தெரிந்து செய்தே தவிக்கிறோம்.
தப்பாப் போனபின், அப்பா என்று அலறி என்ன பிரயோசனம்.
தகப்பனையும் தாயையும் உதடுகளால் அல்ல உள்ளத்தால்வணங்கு.
தாய்ப்பேச்சைத் தாண்டும்போது, தவறுகள் தலைதூக்கத் தொடங்குகிறது.
திறமையும் சாமர்த்தியமும் வெற்றிப்பாதைகளை வழிநடத்திச் செல்லும்.
திருந்துபவர்கள் வருந்துவார்கள், வருந்துபவர்கள் திருந்துவார்கள்.
திருந்துங்கள், தீயவர்களும் கூட திருந்தி நல் மனம் பெறுவர்.
திருத்தமில்லாத தீயசொற்கள் தீபோல்பரவி தாங்கமுடியாத துயரம் தரும்.
தியாகம் செய்யும்போதுதான், திருப்தியான மகிழ்ச்சியைப் பெறுகிறோம்.
தீயதைப் பாராதே, தீயதைக் கேளாதே, தீயதைப் பேசாதே.
தீமையான சிந்தனை உடையவர்கள் சீக்கிரம் சிதறுகிறார்கள்.
தீமைகளை விட்டு விலகும்போது, உனக்குள் நன்மைகள் புகுந்து கொள்கிறது.
தீமைகளை விலக்கி, நல்லவைகளை நாடுங்கள் நன்மை அடைவீர்கள்.
துட்டர்கள் நீதிமான்களின் வாசற்படிகளில் கூனிக்குறுகி நிற்பர்.
தூய்மையான வார்த்தைகள் துன்பங்களைத் தவிர்த்துச் செல்லும்.
தெய்வீகம் எங்கிருக்கிறதோ, அங்கே பகை இருக்காது.
தெய்வீகத்தில் இருந்து புனிதமும் தூய்மையும் புறப்படுகிறது.
தெய்வீகத்தை இதயத்தில் நிறுத்திவிட்டால், விரோதத்திற்கு இடமில்லை.
தெய்வீகப் பார்வையில் தெய்வீகத் தன்மையுடன் வாழக்கற்றுக்கொள்.
தேவவார்த்தைகள் ஒவ்வொன்றின் மூலமும் மனிதன் பிழைப்பான்.
தைரியத்தை தேடிப்பிடித்து தலைநிமிர்ந்து நடக்கப்பாடுபடு.
தொடர்ந்து அன்பிலே இயங்கிக்கொள், அன்பில்லையேல் எதுவும் இல்லை.
தோல்வியில் கற்ற பாடம்தான் வெற்றிக்கும் வழிவகுக்கிறது.

# தைப்பொங்கல்....

புராதான காலத்தில் விழாக்கள் எல்லாம் மதம் சம்பந்தமானவையாக இருந்தன. ஆனால் தமிழர்கள் நீண்ட காலமாக மதம், கடவுள் சார்பின்றி உழவையும் உழவரையும் உழவுக்கு உறுதுணையாக இருந்த கால்நடைகளையும் மையமாக வைத்து பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வந்தனர். சூரியனையும் மழையையும் மற்றும் பூமித்தாயையும் நினைத்துப் பார்த்து நன்றி தெரிவிக்கும் விழாவாக இருக்கின்றது. உணவு கொடுத்து உயர் காக்கும் உழவுத்தொழிலே முதன்மையான தொழில் என திருவள்ளுவரும் கூறியுள்ளார்.

உழவர்கள் வியர்வை சிந்தி பட்டினி கிடந்து எவ்வளவுதான் உழைத்தாலும் வறுமை அவர்களை வாட்டி வதைக்கின்றது. கஸ்டப்பட்டு, கடன்பட்டு வயல்களில் தானியங்களை விதைத்தால் கடும்வெய்யில், மழைவெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தம் மற்றும் விலை ஏற்றம் காரணமாக பலன் கிடைக்காமல் போகின்றது. இதனால் விவசாயிகள் கடன்தொல்லைகள் மீறி சொத்துக்கள் இழந்து பற்பல தொல்லைகள் அதிகரிக்கவே தற்கொலை முடிவுகளை எடுக்கிறார்கள்..

இந்தியாவில் இச்சம்பவங்கள் அதிகரித்து வருவது வருந்தத்தக்க விடையமாகும். உழவனின் கால் சேற்றில் புதையாவிடின் சாதரண மக்களின் வயிற்றுப் பசியைப் போக்க முடியாது. பொங்கலும் பொங்கி உண்டு களிக்கமுடியாது உலக மக்களின் அன்றாடப் பசியை நீக்கிட நல்லதையும் வளத்தையும் வாரிவழங்கிய விவசாயிகளின் வாழ்வு வறண்ட நிலமாகப்போகின்றது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று தமிழர் பெருமையாகப் பொங்கலைக் கொண்டாடி மகிழ முதலில் விவசாயிகளின் வாழ்வு பொங்க வேண்டும். அத்தினத்தில் அதிகாலை எழுந்து குளித்து நீராடி, முற்றத்தைப் பெருக்கிக் கோலமிட்டு, புதுப்பானை வைத்து, இஞ்சி மாவிலைத் தோரணம்கட்டி, எல்லோரும் புத்தாடை அணிந்து, பட்டாசு கொழுத்தி, பச்சை அரிசி, பயறு சர்க்கரைபோட்டுப் பொங்கிப் பழங்கள், கரும்பு என்பவற்றோடு கதிரவனுக்குப் படைத்து அயலவர், உறவுகளுக்குப் பகிர்ந்தளித்து உண்டு மகிழ்வார்கள். இதுவே தமிழர்களின் சிறப்பான பண்டிகையாக விளங்குகின்றது.

புலம்பெயர் நாடுகளில் முற்றமில்லை அடுப்பு, சாணம், பொங்குவதற்று நிலம் எதுவுமே இல்லை. தை மாதம் குளிர் பனி கூடிய காலம் என்றபடியால் ஒன்றுமே செய்யமுடியாது. ஆனால் வீடுகளுக்குள் வைத்துச் சிலர் எளிமையாகவும் கொண்டாடி மகிழ்வார்கள். காலநிலை மாற்றம் வேலைப்பழு, வீட்டுச்சுழல் காரணமாக இங்கு சிறந்தமுறையில் கொண்டாடமுடியாது. கை கயிலே பணம் இருந்தாலும் உள்ளத்திலே இன்பம் பொங்கவில்லை.

இருந்தும் புலம்பெயர் தேசங்களில் பல தமிழ்ப்பாடசாலைகள், கோவில்கள், மன்றங்கள், சங்கங்கள், ஊடகங்கள் இவ்விழாவைச் சிறப்பாபக் கொண்டாடி, அடுத்த தலைமுறையினருக்குப் பொங்கலின் மகிமையை எடுத்துரைப்பது சிறப்பாகவே கருதுவோம். வாழ்விலே பொங்கல் பொங்கி நிறைந்திட அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள் கூறி மகிழ்வோம்!..




# முல்லாவின் கதை

## பதிலுக்குப் பதில்....

ஒரு நாள் முல்லா ஒரு துணிக் கடைக்குச் சென்றார். அங்கு தலைப்பாகைகளும் விற்கப்பட்டன. தமக்கு ஒரு தலைப்பாகை வாங்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் முல்லா அங்கு சென்றார். அழகான ஒரு தலைப்பாகையைத் தேர்ந்தெடுத்து விலை பேசினார். பிறகு தலைப்பாகையைத் தலையில் அணிந்து கொண்டார்.

அந்தக் கடையில் அழகான சால்வைகளும் விற்கப்படுவதை முல்லா கண்டார். தலைப்பாகைக்கு பதிலாக சால்வையை வாங்கி விடலாம் என்று அவருக்குத் தோன்றியது. அதனால் அவர் கடைக்காரனைப் பார்த்து இந்தப் தலைப்பாகைக்குப் பதிலாக சால்வையை வாங்கிக் கொள்கிறேன். இரண்டின் விலையும் ஒன்றாகத்தானே இருக்கிறது? என்றார்.

உங்கள் விருப்பம்போல எதை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள் என்றார் கடைக்காரர். முல்லா தலைப்பாகையை கழற்றிக் கொடுத்து விட்டு சால்வையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். ஐயா, நீங்கள் வாங்கிய சால்வைக்குப் பணம் கொடுக்கவில்லையே என்று கடைக்காரர் கேட்டார். நான் ஏன் பணம் கொடுக்க வேண்டும். தலைப்பாகைக்குப் பதிலாகத்தானே சால்வையை வாங்கிக் கொண்டேன் என்றார் முல்லா.

அப்படியானால் தலைபாகைக்கு பணம் கொடுங்கள் என்றார் கடைக்காரர். தலைப்பாகைக்கு ஏன் பணம் தரவேண்டும்? அதைத்தான் உங்களிடம் திருப்பி கொடுத்துவிட்டேனே? என்று கூறிவாறு கடையை விட்டுக் கம்பீரமாக வெளியே நடந்தார். கடைக்காரருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவருடைய மூளை குழம்பி விட்டது.

# திருக்குறள் பற்றிய அறியாத தகவல்கள்..

-திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.

- ” உள்ள மொத்த எழுத்துகள் - 42.194
- ” இடம்பெறாத தமிழ் எழுத்துகள் - 37
- ” இடம்பெறும் இரு மலர்கள் -அனிச்சம், குவளை
- ” இடம்பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்
- ” இடம்பெறும் ஒரே விதை - குன்றிமணி
- ” பயன்படுத்தப்படாத ஒரே உயிர் எழுத்து - ஔ
- ” இடம்பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்
- ” அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து - னி (1705 தடவைகள்)
- ” ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துகள் - ளீ, ங
- ” இடம்பெறாத ஒரே எண் - ஒன்பது (9)
- ” உயிர் எழுத்துகள் 3074
  ஆயுத எழுத்துகள் 50
  மெய் எழுத்துகள் 12729
  உயிர்-மெய் எழுத்துகள் 25047 ---மொத்தம் 40.900 எழுத்துகள்
- ” உயிரெழுத்துகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது ”அ” 202 தடவைகள் இடம்பெற்றன.
- ” உயிரெழுத்துகள் குறைவாக”ஐ” 16 ”
- ” பயன்படுத்தாத எழுத்து ”ஔ” இதற்குப் பதிலாக ஆ, யு பாவிக்கப்பட்டது.
- ” மெய் எழுத்துக்கள் அதிகமாக வந்தது ”ன்” - 2062 முறை வந்துள்ளது.
- ” எழுத்துகளில் குறைவாக வந்த எழுத்து ”யு” - 37 முறை வந்துள்ளது.
- ” மிகநீண்ட குறள் - 957வது குறள் இது 39 எழுத்துகளைக் கொண்டுள்ளது.

# கூட்டத்தைக் குறிக்கும்

## மரபுச் சொற்கள்......

01- அறிஞர் - அவை
02- நடிகர் - குழு
03- ஆசிரியர் - குழாம்
04- சனம் - கும்பல், திரள்
05- மக்கள் - தொகுதி, கூட்டம்
06- மான் - கூட்டம்
07- எறும்பு - கூட்டம்
08- பசு - நிரை
09- மா - சோலை
10- திறப்பு, சாவி கொத்து
11- பூ - கொத்து, மஞ்சரி
12- தென்னை - தோப்பு
13- கல் - குவியல்
14- சேனை - திரள்
15- பாடகர் - குழு
16- தீவு - கூட்டம்
17- சுருட்டு - கட்டு
18- ஆடு - மந்தை
19- படை - அணி
20- ஆனை - பந்தி
21- நாடகம் - குழு, கோஷ்டி
22- புத்தகம் - அடுக்கு
23- மலை - தொடர்
24- கள்வர் - கூட்டம்
25- புல் - கற்றை
26- வைக்கோல் - கற்றை
27- நெல் - குவியல்
28- புகையிலை - சிப்பம்
29- பல் - வரிசை
30- தூண் - வரிசை
31- மாணவர் - குழாம்

# உங்களுக்குத் தெரியுமா?..

01- கி.பி 350ம் ஆண்டில்தான் இயேசுநாதரின் பிறந்தநாள் டிசம்பர் 25 என்று அறிவிக்கப்பட்டது. அப்போதிலிருந்துதான் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகின்றது.

2- மணிக்கு 100 கி.மீ வேகத்தில் நீந்தக்கூடிய மீன் செயில் ∴பிஸ் (Sail Fish)

3- மெக்ஸிக்கோ நாட்டில் அலமஸ் என்னும் இடத்தில் ஒரு தண்டனைக் கைதி தப்பி விட்டால் அங்கு காவலுக்கு இருந்தவரே மிகுதித் தண்டனைக் காலத்தை அனுபவிக்க வேண்டும் என்று விதி உள்ளது.

4- சொந்த மொழியே இல்லாத நாடு பிரேசில். அங்கு போத்துக்கீச மொழியே பேசப்படுகின்றது.

5- கிறீஸ்லாந்தில் பெண்களின் வயதை அவர்களுக்குத் திருமணம் ஆகும் நாளிலிருந்து கணக்கிடுகிறார்கள்.

6-இந்தியாவில் தயாரான முதல் பேசும் திரைப்படம் ”ஆலம் ஆரா” என்ற ஹிந்திப்படம் இது 1932ம் ஆண்டு வெளியாகியது.

# பழமொழிகள்...

01. அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமுமா?
(இன்று பலரும் இப்படித்தானே இருக்கிறார்கள்?)
02. ஆனை இருந்து அரசாண்ட இடத்தில் பூனை இருந்து புலம்பி அழுகிறது..
(எல்லாம் காலத்தின் கோலம்.)
03. அறப்படித்தவன் அங்காடிக்குப் போனால் விற்கவும் மாட்டான், வாங்கவும் மாட்டான். (அதிகமாய் படித்தவர்கள் பலரும் இப்படித்தான்).
04. எடுப்பது பிசசை. ஏறுவது பல்லாக்கு.
(பலருடைய போக்கு இப்படித்தான் இருக்கிறது)
05. எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?
(எட்டி பழுத்தாலும் அதன் கசப்பால் சாப்பிட உதவாது. கஞ்சனுக்கு எத்தனை செல்வம் வந்தாலும் அதில் யாரும் பலன் அடைய முடியாது).
06. விசாரம் முற்றினால் வியாதி.
(கவலை அதிகமானால் வியாதியில் தான் முடியும்).
07. காற்றில்லாமல் தூசி பறக்காது. (நெருப்பில்லாமல் புகையாது என்ற பழமொழிக்கு இணையான இன்னொரு பழமொழி)
08. பண்ணின புண்ணியம் பலனில் தெரியும்.
(நாம் அனுபவிக்கும் பலன்களைப் பார்த்தாலே சேர்த்திருக்கும் புண்ணியம் எவ்வளவு என்பது தெரிந்து விடும்).

## மருவிய பழமொழி...

**பழம் நழுவிப் பாகில் விழுந்தது**

**மருவியது:- பழம் நழுவிப் பாலில் விழுந்தது.**

**சரியானது:- பழம் நழுவிப் பாகில் விழுந்தது..**

**பொழிப்பு:-** பொதுவாகப் பழங்கள் சுவை கொண்டவை. அவற்றை உண்ணும்போது கையிலிருந்து தவறுப்பட்டு கீழேயுள்ள வாய் அகன்ற பாத்திரத்தினுள் ஆற வைத்திருக்கும் வெல்லப் "பாகில்" விழுந்துவிட்டால் வெல்லப்பாகு பால் போல நீர்த்தன்மையற்றது. வெளியே தெறிக்காது. மாறாக பழம் வெல்லப்பாகிற்குள் மூழ்கிவிடும். இப்படி மூழ்கிய பழத்தில் வெல்லப்பாகு ஒட்டியிருக்கும். இதை எடுத்துச் சாப்பிட்டால் சுவையைச் சொல்லவும் வேண்டுமா?....தேவர்களின் இரசம் போல தித்திக்கும். மேலும் இந்த வெல்லப் பாகிற்குள் பழங்களை ஊற விட்டால் சில நாட்கள் கெடாது இருக்கும். சுவையும் அதிகரிக்கும் என்பதே.

'வெல்லப்பாகின் மகிமையை அடியொற்றியே இப்பழமொழி" ஆக்கப்பட்டது. "பாகில்" என்பது பிறழ்ந்து "பாலில்" எனத்தவறாகப் பேசப்படுகிறது.

## பாட்டுப் பாடுவேன்...

இனிக்கும் பாட்டுப்பாடுவேன் - காலை
எழுச்சிப்பாட்டுப் பாடுவேன்
கனி பிழிந்த சாற்றைப் போல
காதில் இனிக்கப் பாடுவேன்....

குயிலைப் போல பாடுவேன்
குருவி போல பாடுவேன்
அயலில் ஓடும் ஆற்றைப் போல
அகம் மகிழ்ந்து பாடுவேன்...

வண்டு போல பாடுவேன் - தேன்
வண்டு போல பாடுவேன்
உண்டு உறங்கிக் கண்விழித்து
உடன் எழுந்து பாடுவேன்....

தந்தையைவாழ்த்திப்பாடுவேன் - ஈன்ற
தாயை வாழ்த்திப் பாடுவேன்
எந்த நாளும் தமிழை வாழ்த்தி
இனிக்க இனிக்கப் பாடுவேன்...

## தமிழில் மூன்று..

01- **முத்தமிழ்** - இயல், இசை, நாடகம்

02- **முச்சங்கம்** - முதல்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்


03- **முப்பொருள்** - அறம், பொருள், இன்பம்

04- **முக்கனி** , மா, பலா, வாழை

05- **முற்காலம்** - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்

06- **மூவிடம்** - தன்மை, முன்னிலை, படர்க்கை

07- **மூவினம்** - வல்லினம், மெல்லினம், இடையினம்




இந்த வட்டத்திலுள்ள எழுத்தக்களைப் பயன்படுத்தி பல தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிக்கலாம்.

எனவே சொற்களைக் கண்டுபிடித்து அனுப்பி வையுங்கள். ஆகக்கூடுதலாகக் கண்டு பிடிப்பவர்களில் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுப் பரிசு வழங்கப்படும். முடிவுதிகதி

15.02.2026

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 53

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | 3 | | | | |
| | | | | 7 | 4 | | 5 | |
| | | | | | | | | |
| | | 4 | | | 6 | | | 8 |
| 2 | | | | 8 | | | | 9 |
| | 6 | | 1 | | 2 | 4 | | |
| | | 5 | 7 | | | 9 | | 3 |
| 9 | 8 | | | | | | | 5 |
| | | 1 | | 6 | 5 | | | 4 |

## ிறுவர் குறுக்கெழுத்துப் போடி 146
## ( தை - மாசி 2026 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-04 வருடத்தில் இவர்களுக்கும் ஒரு திருநாள்.
05-07 இந்தப் பூமி இதனால் சூழப்பட்டுள்ளது.
13-14 வானத்தில் தோன்றுவது.
வ-இ
11-09 தைரியம் என்று பொருள்படும்.
16-15 கொடிய மிருகம்.
கீ-மே
11-07 மனித உறுப்புகளில் ஒன்று.
16-04 அகிம்சை போதித்த பெருமான்.
மே-கீ
01-09 ஒற்றுமைக்குப் பெயர் போன பறவை.
05-13 வீடு கட்டவும் பயன்படும்..

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள்

## அயற்சொற்கள் - தமிழ்ச்சொற்கள்...

01- அசல் - முதல்
02- அபாயம் - பேரிடர்
03- அனுபவம் - பட்டறிவு
04- ஆயுள் - வாழ்நாள்
05- உபாத்தியார் - ஆசிரியர்
06- கர்வம் - செருக்கு
07- கிராமம் - சிற்றுார்.
08- கைதி - சிறையாளி
09- சபை - அவை
10- சாதம் - சோறு
11- சிபாரிசு - பரிந்துரை
12- சேவை - தொண்டு
13- ஜாக்கிரதை - விழிப்பு
14- தகவல் - செய்தி
15- தினம் - நாள்
16- நிபுணர் - வல்லுநர்
17- பத்திரிகை - செய்தித்தாள்
18- பூஜை - வழிபாடு
19- பேட்டி - நேர்காணல்
20- விபூதி - திருநீறு

## அறுசுவைகள்..

1-இனிப்பு - தசையைவளர்க்கும் - சீனி, இனிப்பு

2-புளிப்பு - தேவையான கொழுப்பைத் தரும் - தேசிக்காய் , மாங்காய்

3-உவர்ப்பு - தேவையான உமிழ்நீரை சுரக்க வைக்கும் - உப்பு

4- கார்ப்பு - எலும்புகளை வலுவாக்கும்-மிளகு, மிளகாய்.

5- கசப்பு - நரம்புகளை வலுப் படுத்தும் - பாவற்காய், வெந்தயம்6-

6- துவர்ப்பு - இரத்தத்தைச் சுத்தம் செய்யும் - நெல்லிக்காய், வாழைப்பூ

## இருக்க வேண்டியதும் இருக்கக் கூடாதவயும்

1-சந்தோசம் இருக்க வேண்டும்

2-சந்தேகம் இருக்கக்கூடாது

3-அன்பு இருக்க வேண்டும்

4-ஆணவம் இருக்கக்கூடாது

5-கண்டிப்பு இருக்க வேண்டும்

6-கட்டாயம் இருக்கக்கூடாது

7-விருப்பம் இருக்க வேண்டும்

8-வெறுப்பு இருக்கக்கூடாது

9-நம்பிக்கை இருக்க வேண்டும்

10-நடிப்பு இருக்கக்கூடாது

11-உண்மை இருக்க வேண்டும்

12-பொய்மை இருக்கக்கூடாது..

## தெரிந்திருக்க வேண்டிய முக்கியமான பத்து..

-சாதிப்பவன் பேசுவதில்லை
-பேசுபவன் சாதிப்பதில்லை.
-படிக்காதவனுக்குப் புகழுமில்லை
-பணமில்லாதவனுக்கு மதிப்புமில்லை
-உழைக்காதவன்உயர்வதுமில்லை.
-உண்மை யில்லாதவன் நம்பப் படுவதுமில்லை.
-நாவடக்கம் இல்லாதவன் நல்லானது மில்லை
-தற்பெருமை காட்டுபவன்மதிக்கப் படுவதுமில்லை-
-பொறாமைப்படுபவன்முன்னேறு வதுமில்லை
-சபிப்பவன் நல்லாய் வாழ்வது மில்லை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொ | க் | கு | க | ளி | ழு |
| யி | சே | றா | ல் | வ | சே |
| னா | மை | கோ | பு | ஆ | யி |
| ளி | ழி | கா | க | ந் | ல் |
| ம் | கி | ழு | க | தை | யி |
| கு | கு | ல் | கு | ம் | ம |

## தமிழுக்கு நிகருண்டோ!..

**சிறு பெட்டிக்குள் இத்தனை**

**தமிழ்ச் சொற்களா...**

**கண்டுபடியுங்கள் போட்டி முடிவு சென்ற இதழ்(பக்கம்.63,இதழ்.234)**

**இங்கு காணப்படும் பெட்டிக்குள் இருந்த எழுத்தைக்கொண்டு 47 சொற்களைக் கண்டுபிடித்து அனுப்பிய எசன் நகரைச்சேர்ந்த செல்வி சாமினா சிவதாசன் அவர்களுக்குப் பாராட்டுகள். இவருக்குரிய பரிசு விரைவில் அனுப்பி வைக்கப்படும்...**

1. கொக்கு
2. களி
3. களி
4. கழி
5. கைதி
6. ஆந்தை
7. மயி
8. புறா
9. தை (மாதம்)
10 தை (தைத்தல்)
11. கோழி
12. மை
13. கழுகு
14. ஆவளி
15. சேவல்
16. கல்
17. புல்
18. ஆமை
19. காகம்
20. குயில்
21. கழுதை
22. குழு
23. கோதை
24. கோயில்
25. காளி
26. கும்மல்
27. குழி
28. குளி
29. கோல்
30. கால்
31. குக்கல்
32. வளி (காற்று)
33. புளி
34. கந்தை
35. ஆல்
36. கோபு
37. ஆளி (செடி)
38. ஆக (எனேவ)
39. ஆக்கம்
40. ஆகமம் (இந்துத்துணை வேதங்கள்)
41. ஆம் (ஏற்றுக் கொள்ளல்)
42. கம்பு
43. கோ (பசு)
44. வைகை
45 வகை
46. வகு (வகுத்தல்)
47. குழுமம்

**செல்வி சாமினா சிவதாசன் (எசன்–ஜேர்மனி)**

## நம் வாழ்க்கையைக் கெடுக்கும் மூன்று..

1- உன் கூடவே இருக்கும் துரோகி.

2- தூரத்தில் இருந்தாலும் நம்மைப் பற்றி புறங்கூடும் உறவு.

3- இடம், பொருள் தெரியாமல் மனதில் பட்டதை சட்டென்று கூறிவிடும் நம் வாய்..

# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை - (ஐரோப்பா)

## (இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய)

## Tamilische Bildungsverei Deutschland - (Europa)

**"கேடில் விழுச்செல்வம் கல்வி, ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"**

---

பொதுப்பரீட்சை - 2025 / 2026
தமிழ்மொழி
-----------

யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் ஐரோப்பா தழுவிய முறையில் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப்பரீட்சையானது, எழுத்துப்பரீட்சை, வாய்மொழிப்பரீட்சை என இருபகுதிகளாக நடைபெறவுள்ளன. இரண்டு பரீட்சைகளிலும் தோற்றும் மாணவர்களுக்கே முழுப்புள்ளிகள் வழங்கப்பட்டு, முடிபுகள் தெரிவிக்கப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும். இதுபற்றிய விடயங்கள் முன்பே அறியத் தந்துள்ளோம்.

எதிர்வரும் 2026ஆம் ஆண்டு சித்திரை மாதம் 18ஆம் திகதி (18.04.2025) எழுத்துப் பரீட்சை நடைபெறும். பங்குனி - சித்திரை (Match – April) மாதங்களில் பலபகுதிகளிலும் வாய்மொழிப் பரீட்சை நடைபெறும். சகல மாணவர்களும் இப்பரீட்சைகளில் தோற்றித் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திச் சான்றிதழ்களையும், பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பாடசாலைப் பரீட்சார்த்திகளாயின், ஆசிரியரின் உதவியுடன் பாடசாலை மூலமும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளாயின், பெற்றோரின் உதவியுடன் தனிப்பட்ட முறையிலும் விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

பரீட்சைக்கான செலவுக் கட்டணமாக பாடசாலைப் பரீட்சார்த்திகள் 15 ஒயிறோவும் (15,-€) தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 20 ஒயிறோவும் (20,-€) அனுப்புதல் வேண்டும். பரீட்சைகள் ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு நடைபெறும். விண்ணப்பங்கள் 2026.01.31ந் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆண்டு 12, 13 தரங்களுக்கான பரீட்சைகள் ஆனி (June) மாதம் நடைபெறும். திகதி அறியத்தரப்படும்.

முகவரி:-

Tamilischer Bildungsverein Deutschland e.V. Europa
P.Srijeevaghan
Gladbecker Str. 265, 45326 Essen

பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:-

Tamilischer Bildungsverein Deutschland e.V.Europa
Städtische Sparkasse UnnaKamen. Deutschland
IBAN: DE91 4435 0060 0005 0533 35
Verwendungszweck: Prüfung

மேலதிக தொடர்புகட்கு:-

P. Srijeevaghan ( Vorsitzender )
Gladbecker Str. 265, 45326 Essen
Tel: 0201 46932106 Mobile: 015757565305
e-Mail: jeevaghan@web.de

இங்ஙனம்
யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை - ஐரோப்பா

## நாடுகளைப் பற்றி அறிவோம்...

01- சாம்பியா - உலகின் மிகப்பெரியது விக்டோரியா நீர்வீழ்ச்சி உள்ளது.
02- நியூசிலாந்து - பெண்களுக்கு முதல் வாக்குரிமை வழங்கிய நாடு.
03- நியூசிலாந்து - இரண்டு தேசயகீதங்கள் உள்ள நாடு.
04- பிலிப்பைன்ஸ் - ஆசியாவில் நுழைவாயில் என்று அழைக்கப்படும் நாடு.
05- நோர்வே - நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு.
06- பார்படோஸ் - பறக்கும் மீன்கள் வசிக்கும் நாடு.
07- பேலாரஸ் - வெள்ளை ரஷ்ஷியா என்று அழைக்கப்படும் நாடு.
08- லாவோஸ் - ஆயிரம் யானைகளின் நாடு என அழைக்கப்படும்.

## அறிந்துகொள்வோம்...

01- பூமி முழுக்க ஒரே நேரத்தில் மின்னல் வடியும் இடங்கள் சுமார் 100 க்கும் மேல்..
02- சூரிய ஒளி பூமியை அடைய8 நிமிடம் 20 விநாடியாகும்
03- பூமியில் அதிக ஆக்ஸிஜன் உற்பத்தி செய்வது காடுகள் இல்லை கடலில் இருக்கும் பைட்டோபிளாங்க்டன்
04- விண்வெளியில் ஒலி பயணம் செய்யாது அதனால்தான் அங்கு முழு அமைதி.





## சிரி...சிரி...சிரிப்பு!...

ஒருவர்:- தலைவா ஏன்?..குழம்பிப்போய் கிடக்கிறார்.
மற்றவர்:- கட்சியின் வாக்காளர்களைவிட வேட்பாளர்கள் அதிகமாக இருக்கிறார்களாம்?...

ராம்:- நம்ம தலைவருக்கு உடனடியாக இரத்தம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்
டாக்டர்..ஆனால் அவர் குறூப்பில் இரத்தம் கிடைக்கவில்லையாம்.
குகன்:- அவரின் இரத்தம் என்ன குறூப்?..
ராம்:- ஊழல் குறூப்?...

கமல்:- பசியில பத்து ரூபா திருடினால் குற்றமா?..
விமல்:- ஆனால் பதவியால் பல கோடி திருடினால் அவன் அரசியல்வாதி?..





## உலக சனத்தொகையில் முன்னணி வகிக்கும் நாடுகள்.. (05.06.2025 திகதியின் புள்ளிவிபரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01- | 1.462.941.381 | - | இந்தியா | (146 கோடி ) |
| 02- | 1.416.325.412 | - | சீனா | (141 கோடி ) |
| 03- | 347.143.859 | - | அமெரிக்கா | ( 34 கோடி ) |
| 04- | 285.561.701 | - | ந்தோனிஷியா | ( 28 கோடி ) |
| 05- | 254.936.339 | - | பாக்கிஸ்தான் | ( 25 கோடி ) |
| 06- | 237.179.390 | - | நைஜீரியா | ( 23 கோடி ) |
| 07- | 212.754.384 | - | பிறேசில் | ( 21 கோடி ) |
| 08- | 175.534.836 | - | வங்களதேஷ் | ( 17 கோடி ) |
| 09- | 144.055.811 | - | ருஷ்ஷியா | ( 14 கோடி ) |
| 10- | 135.226.309 | - | எந்தியோப்பியா | ( 13 கோடி ) |
| 11- | 131.869.321 | - | மெக்ஸிக்கோ | ( 13 கோடி ) |
| 12- | 123.149.595 | - | யப்பான் | ( 12 கோடி ) |
| 13- | 118.234.984 | - | எகிப்து | ( 11 கோடி ) |
| 14- | 116.719.577 | - | பிலிப்பைன்ஸ் | ( 11 கோடி ) |
| 15- | 112.575.613 | - | கொங்கோ குடியரசு | ( 11 கோடி ) |

# குறளும் பொருளும்...



## நட்பாராய்தல்...

791 - நாடாது நட்டலீற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

792 - ஆய்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

793 - குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வின்னு மறிந்தியாக்க நட்பு.

794 - குடிபிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

795 - அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.

796 - கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

797 - ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்.

798 - உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணாற்றறுப்பார் நட்பு.

799 - கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்.

800 - மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வோப்பிலார் நட்பு.

# குறளும் பொருளும்...

## நண்பரை ஆராய்ந்து அறிதல்...

791- நட்பினை விரும்பி ஒருவனோடு நட்புக்கொண்டபின் அவனை விடுதல் உண்டாகாது. ஆகையால் ஆராயாது நட்புச் செய்தல் போலக் கேடு தருவது பிறிதில்லை.

792- பலகாலும் பலவகையாலும் ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவன் முடிவில் தான் சாதற்குக் காரணமான துன்பத்தைத் தானே உண்டாக்கிக் கொள்வான்.

793- ஒருவனது குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் அவனது சுற்றத்தையும் அறிந்து நட்புக்கொள்ள வேண்டும்.

794- உயர்ந்த குடியில் பிறந்து தனக்கு வரும் பழிக்கு அஞ்சுபவனிடம் பொருள் கொடுத்தாவது நட்புக் கொள்ளல் வேண்டும்.

795- உலக வழக்கத்திற்கு மாறுபடச் செய்வதை விலக்கியும் மீண்டும் செய்தால் நெருக்கியும் திருத்தும் வலிமையுள்ளவரை ஆராய்ந்து நட்புக் கொள்க.

796- கேட்டிலும் நல்லறிவு உண்டாகும் அக்கேடு நண்பரின் இயல்புகளை நீட்டி அளந்து பார்க்கும் அளவுகோல் ஆகும்.

797- அறிவில்லாருடன் கொண்ட நட்பை விலக்கிக்கொள்வதே ஒருவனுக்குச் சிறந்த ஊதியமாகும்.

798- ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயலை விலக்கிவிட வேண்டும:. துன்பக் காலத்தில் கைவிடும் நட்பை விட்டுவிட வேண்டும்.

799- கேடு வருங்காலத்தில் விட்டுவிட்டுச் சென்ற நட்பை எமன் கொல்லும் நேரத்தில் நினைத்தாலும் நெஞ்சம் சுடும்.

800- குற்றமற்றவர் நட்பைத் தழுவிக்கொள்ள வேண்டும். ஒப்பில்லாதவர் நட்பை ஒன்று கொடுத்தாகிலும் விட்டுவிட வேண்டும்..

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## நிறைவு..

நகைக்கடைக் கண்ணாடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தினக் கல்லைப் பார்த்துத் தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது. ”எனக்கு ஏன் மதிப்பில்லை” நானும் ஒரு கல்தானே என்று ஓலமிட்டது. தெருவில் கிடந்த கடப்பாரை கூறியது...ஏ குறுணி!..காலம் முழுவதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக்கொண்டு பலரும் பார்க்க தெருவில் கிடக்கிறாய் ஆனால் இரத்தினக்கல் அப்படியா?.. நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும்வரை வெளியில் தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டிருந்தது.. அப்படியென்றால்?...என்று இழுத்தது குறுணிக்கல்... கடப்பாரை சொன்னது...

**” நிறைவாகும்வரை மறைவாக இரு”**

## குனிவு..

குனிந்த தலை குனிந்தபடியே மூட்டை சுமந்து செல்லும் கழுதையை வேம்பில் இருந்த காக்கைகள் கவனித்து வந்தன. ஒரு நாள் காக்கைகளில் ஒன்று மற்றதைப் பார்த்து ”இந்தக் கழுதைமேல் உனக்கு இரக்கம் வரவில்லையா?..எப்போது பார்த்தாலும் மூட்டை சுமந்து துன்பப்படுகிறதே!.. என்று சொல்லிப் பெருமூச்சு விட்டது. ”நாம் என்ன செய்ய முடியும்?.. கழுதைதான் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும்”..என்றது மற்றக் காக்கை. ”ஏன் அப்படிச் சொல்கிறாய்?.. இறக்கைகளைக் கோதிக்கொண்டே இரண்டாம் காக்கை சொன்னது...

**” குனிந்துகொண்டே இருப்பவன் சுமந்துகொண்டே இருப்பான்”**

# குறுக்கெழுத்துப்போட்டி - 209
## ( தை - மாசி 2026)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-06 டிசம்பர் 2025ல் இலங்கையில் இடம்பெற்ற பேரனர்த்தம்.
08-10 வீட்டில் ஒருத்தி.
15-17 கள்ளன் இச்சொல்லுக்கு எதிர்பாற்சொல்.
29-31 இலங்கையின் பிரபல நகரம் இது.
33-35 ஆடுகள் தங்குமிடம்.
வ-இ
13-11 இசைக்கருவி ஒன்று..
19-17 சமையல் அறை உணவுப்பொருள்.
28-24 இருபக்கத்தால் வாசித்தாலும் ஒரே சொல்.
41-39 இனிப்பான பலகாரம்.
49-47 சத்தான கீரை வகை ஒன்று
கீ.மே
27-06 சண்டை, யுத்தம் எனப்பொருள்படும்
28-07 வட்டத்தின் பாதி.
45-31 வீட்டு சமையல் அறைப் பாத்திரம்.
49-35 சிலர் இது வேண்டியும் பணம் சம்பாதிப்பார்கள்..
மே-கீ
03-17 நாட்களில் ஒன்று.
15-43 மருத்துவ குணமுடைய உணவுப்பொருள்.
23-44 மலையக மக்களின் வாழ்வு எப்போதும் இப்படித்தான்.
25-46 சிலர் இது எழுதுவதில் வல்லவர்கள்..

**(விடைகளைக்கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)**

## தை தைமாசம்......

தைபிறக்குதென்று தையலும்
சந்தோசப்பட்டாள் தையும்
பிறந்தது சங்கடங்கள் தீரவில்லை
சாத்திரம் கேட்க கர்மவினை
என்றார்கள் பாத்திரமின்றி
பட்டினியான கதைதான்
உழுதவயல் உக்கிரத்தால்
அழிய பெய்தமழையும்
பெருவெள்ளமாய் பாய அழுத
உழவன் ஆற்றாமை தானடைய
எழுதிய எழுத்தோ எழும்பி
நின்று குதித்தது முடிந்தது
நத்தார் கொண்டாட்டம் மூக்கு
முட்டக் குடித்து கொண்டாடினர்
நாட்டிலே நிற்கதியானோரை
நினைக்கவேயில்லை நலன்
விரும்பி சேவைசெய்ய ஒருசிலரே
உள்ளனர் வந்த வெள்ளம்
வாரியே சென்றது நின்ற வெள்ளம்
நோயினைக் கொடுத்தது வீடின்றி
வாசலின்றி வெந்த உள்ளங்கள்
வேதனையில் துடித்து வெம்பியே
வெடித்தது வடிகாலாய் வருகிறது
தைமாசம்தான் வாழ்விலே
தந்திடுமாம் வசந்தமும்தான்
சோடிகள் இணைவதும் தை
மாசந்தான் சோடித்து மகிழ்வதும்
தையில்தான் தமிழர் வசந்தம்
எங்கே வாழ்த்துங்கள் தமிழர்
வருடப் பிறப்பு தைமாசம் தமிழர்
திருநாளாம் தைப் பொங்கல்
ஒன்றாய்ச் சேர்ந்து சுற்றம் சூழ
சூரியனுக்கு படையலிட்டு நன்றி
கூறி தையை தைமாசத்தில்
பொங்கலை கொண்டாடுங்கள்!

**கெங்கா ஸ்ரான்லி**
**யேர்மனி**

## வருவாய் புத்தாண்டே!..

நடந்தவை கடந்தவையாக
நடப்பவை சிறந்தவையாக
நெஞ்சத்து நன்றிகளை
நிறைவாய்ப் பகர்ந்திட்டேன்
நித்தியமும் வெற்றிகளாய்
நிலைக்கட்டும் வாழ்க்கை
திடங்கொண்ட தித்திப்பினைத்
திரட்டிவா புத்தாண்டே!

நம்பிக்கை நாற்றை
நறுமலராய்த் தூவுகிறேன்
பொங்கும் பூம்புனலாகப்
பூமியெங்கும் நிறையட்டும்
திங்களெல்லாம் ஒளியாகித்
திசையெங்கும் ஒளிரட்டும்
மங்கலப் புத்தாண்டாய்
மண்மகளை அணைக்கவா!

வானவில் கோலமென
வண்ணமுறும் பட்டாசு
வாசலெங்கும் வரவேற்பு
வலிமை எதிர்பார்ப்பு
காலமெல்லாம் கனிவாகக்
களிப்பினைத் தாங்கியுமே
ஞாலத்தின் இன்மகளாய்
நீவருவாய் புத்தாண்டே!

**கீத்தா பரமானந்தன்**
**யேர்மனி**

# பேரிடர்...

பேரிடர் எனும் பெருந்துயரே
போரிடரிலே நிர்க்கதியாகிய
மானிடர் உயிரில் நீர்த்தாகமா

நூறிடர் வருமெனக் கூறிடர்
எவரோ அவர் சாபமோ என
ஊறிடும் கார்த்திகைப்பூவில்
உறிஞ்சிடும் மழைநீர் போகமா

உதிரம் கரைந்த கல்லறைப்
பாக்களில் மண் அரிஞ்சிடும்
கண்ணீர்த்துளியின் வேகமா
கார்கால விண் மேகங்களே
மானிடரில் ஏனிந்த மோகம்

ஒவ்வோர் வருடம் புதுப் பெயர்
இவ்வருடம் தீட்வாவோ தீவிரம்
ஊரெல்லாமோ அல்லோலமே

வேரறுந்த மரம் அலங்கோலம்
இடைமுறிந்த வாழை ஊர்கோலம்
மண் சரிந்த புதைகுழியில் பிணம்
பலிகோலமாக இயற்கைப் பசியே
இன்னுமின்னும் தீரவில்லையா
உன் அகோரப் பொருந்தாகம்?

**ராணி சம்பந்தன்**
**யேர்மனி**

# உள்ளமே உதவும் கரமாயிரு...

இயற்கையின் அனர்த்தம்
இலங்கையிலும்
இன்னலைத் தந்தது இமயமாய்
துயரில் துன்பத்தில் தவிப்போர்க்கு
தயவுகாட்டி கரைசேர்க்க
இணைந்திடுவோம்
பயத்திலும் பீதியிலும்
உறைந்த சிறார்கட்கு
பாதிப்பின் பயம்போக்கி
மீளவைப்போம்வயல்களை
வாழ்வாதாரத்தை இழந்தோர்க்கு
வாழவழிவகுத்துகரையேற்றுவோம்...

பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறதே
பாவிகள் பசிதீர்ப்பது
நம் கடமையன்றோ
வஞ்சமறியா மலையக உறவுகள்
வாழ்ந்த வீட்டிலே
வாழ்வை இழந்தனரே
நெஞ்சை வாட்டும்
அவர்களின் பிரிவு
நேராது இனி என்று
தோள் கொடுப்போம்
தஞ்சமாய் மிஞ்சிய
இரத்த உறவுகட்கு
தாமே உதவும் கரமாய் இருப்போம

**கலைவாணி ஏகானந்தராசா**
**யேர்மனி**

# மீண்டும் இடி மழை....

**வே. புவிராஜ்**
**நோர்வே**

அடுத்து வருகுதாம்
ஆகாய கங்கை ஒன்று. கடலைக்
கடையுதாம் கரையேற போகுதாம்.
கடலோர நிலமெல்லாம்
களவாடப் போகுதாம்

வங்கக்கடல்
நடு திசையில்
புயல் ஒன்று கூடுதாம். தென் திசை
நிலம் நோக்கி
எம் மண் பார்த்து வருகிறதாம்
நம் நாட்டு குடிகளை
பந்தாட போகுதாம்.

புயலை தடுக்கவும் மழைமேகம்
விரட்டவும் இது காலம் எவருக்கும்
வல்லமை இல்லை. இறைவா....
ஏன் கைவிட்டாய் எம்மை.
இராவணன் பூமிக்கு
வந்ததென்ன சோகம்.
இராப்பகலா இங்கு தூங்க வில்லை
யாரும்.

அன்னை கடலே...
ஆழி அலை சுருட்டி மிரட்டுகிறாய்
உன் ஆத்திரம்
என்ன ஏன் எம்மை
வருத்துகிறாய்.

வறுமையிலும்
வாழ்வு தந்தவள்
அலை மடியில்
தூங்க வைத்தவள்
தவித்த பொழுதெல்லாம்
தாயாக நின்றவள்.
சீறி சினக்கலாமோ
தாயே...
உன் தாய்மை இதுதானோ.

சோழன் உனை
ஆண்ட கோபமோ? கரிகாலன்
அடக்கி
வைத்த சீற்றமோ?
யாரும்
இல்லையென்று ஆணவப்படுகிறாய்.
ஆணவம் கொண்டர்க்கு
அடங்கி நீ போகிறாய்.

கூடவே நின்றவர்கள்
குழி பறித்து நிற்கிறார். பாடையை
சுமக்க வைத்தோர் பல்லாக்கை
தூக்குறார்.
யாரை நம்புவது
எவர் பின்னே
செல்லுவது .
நம்பிக்கெடுவதாய்
எம் இருப்பு ஆனது.

நீயும் அறிந்தா
மோசம் செய்கிறாய். ஐயோ...
இயலாது
ஒரு குடியாய்
கொன்று விடு.
சோகம் தெரியாமல் ஊரடங்கிப்
போகட்டும்.

கண்ணீரும்
கம்மலுமாய்
எத்தனை நாள்
வாழ்வது
அனுதாபப்
பட்டவராய்
அலைந்துலைந்து
போவது.
மானம் பெரிதென்று மரணித்து
போனவர் பின்
நாமும் போயிருந்தால்
இழிநிலை கிடையாது

இயற்கையே வா
எம்மை கொன்றுவிடு.
உனக்கும் பொறுக்கவில்லை என்றால்.
எம் மேல் இவ்வளவு கோபம் என்றால்.
உண்மையாய்
செத்து விடுகிறோம்.
இனி ஏனும்
அமைதி கொள்.
ஆணவக்
கொலை செய்யும் இயற்கை
அன்னையே உன்னை எந்த
நீதிமன்றில் ஏற்றுவது....
.

# சூழல் பாதுகாப்பு...

சூழல் பாதுகாப்பு
மகாநாட்டிற்கு வந்த
கட்சித் தலைவரை
வெடி கொளுத்தி
வரவேற்றனர் தொண்டர்கள்...
தலைவரின்
வாகனத்திற்கு
வழிவிடுவதற்காகப்
பாதையோரம் நின்ற
மரத்தினை வெட்டிய
தொண்டர்களை
மெச்சிய தலைவர்
வீட்டுக்கொரு
மரம் வளர்ப்போம்
என முழங்கினார்...
கூட்டத்தில் அலறிய
ஒலிபெருக்கிச் சத்தத்தில்
வெருண்டு பறந்த குருவிகள்
தலைவரின் நஞ்சடிக்கப்பட்ட
வயலில் இறங்கி
ஓய்வெடுத்தன....
கூட்ட முடிவில்
சிதறிக் கிடந்த
பொலித்தீன் பைகளைத்
தின்று அசை போட்டது
இயற்கை வேளாண்
ஆலோசகரின்
அவிட்டு விடப்பட்ட மாடு...
வீட்டில் கிடந்த
எருவைத் தெருவில்
எறிந்து விட்டு அதிக
விளைச்சல் வேண்டி
யூரியா வாங்க
அவசரமாய் ஓடினார்
கூட்டத்தில் கலந்து கொண்ட
விவசாயக் கந்தோர்
ஓர்கானிக் புறமோசன்
ஓவ்பீசர்...
உலாவி மேயத் தெரியா
கூட்டத் தலைவரின்
ஊர்க் கோழி செயற்கைத்
தீவனத்திற்காய்
கொக்கரித்தபடி
கூட்டிற்குள் படுத்திருந்தது
இந்திய றோலரின்
மடி வலையில் சிக்கிய
எங்கள் கடல்
மீன் குஞ்சுகளைப் போல....

**கந்தையா பத்மானந்தன்**
**இலங்கை**



# புயலும் மழையும்...

எழுசீர் விருத்தம்
விளம் மா விளம் மா
விளம் விளம் மா
எண்ணிலா மக்கள் ஏதிலி யானார் !
எழுந்ததே வீறுடன் புயலும்
மண்ணது சரிந்தது!மலையகம்தகர்ந்தது!
மாநதி போலவே வெள்ளம்
மண்ணிலே யோட மக்களு மதிலே
மயங்கிய நிலையிலே வீழ்ந்தே ,
விண்ணகம் சென்றார்! விதியதுதானோ?
வெறுமையில் மற்றவர் சாய்ந்தார் !

பொழிந்திடும்மழையால்புவியதுசெழிக்கும்!
பொழிந்ததே பெருமழை˙ புவியும்
அழிவினில் மூழ்க அனர்த்தமே தொடர
அழுகுரல் வானதை முட்ட
விழுந்தவர் தம்மை விழுங்கியநிலத்தில்
வெள்ளமும் பெருகியே வழிய
எழுந்தவர் போக இறந்தவர் பல்லோர்
இருவிழி கொண்டதே ஈரம் .

புயலது வீசப் புதைந்தன மனைகள்
புதைகுழி யானது பூமி !
உயிருடன்புதைத்தேஉடமையைப்பறித்தே
ஊதியே புயலது நகரப்
புயலொடு சேர்ந்தே பெருமழைபொழியப்
பூமியே கரைந்திடும் காட்சி !
துயரொடு மக்கள்! தோன்றினாரெங்கும்!
தொல்புவி கலங்கிய நாட்கள்...

**இரா சம்பந்தன்**
**யோர்மனி**

# பால்...

இறப்பர் மரத்தின் பால்
நாட்டின் தேசிய வருமானம்
தேம்பி அழும் பிள்ளைக்கு
பால் ஊட்டமுடியாத
மலையகத்தாய்....

# மலையகத் தமிழர்...

காலையிலும் மாலையிலும்
குளிரிலும் மழையிலும்
ஆலையில் இரத்தக் கசிவிலும்
வேலையில் அட்டைக்கடியிலும்
ஓலையிலும் படுத்துறங்கும்
மலையகத் தமிழ்ச்சமூகம்...

# மலையிலிருந்து...

தேயிலைக் கூடையுடன் அம்மா
மலைகளில் ஏறுகையில்
அரை வயிறுப் பசியுடன் -
நான் புத்தகப்பையோடு
மலையிலிருந்து
கீழே செல்கிறேன்!..

**சிவா - யோர்மனி**

## உழவர் திருநாள்

### தைப்பொங்கல்!...

பொங்கலோ பொங்கல்
நன்றியால் பொங்குக
இறைவன் தந்த இயற்கையை
எண்ணிவிதம் விதமாய் நிலம்
தந்த விளவை எண்ணி
உழவர் திருநாளை மனம்
மகிழ பொங்குவோம்
இறைவனும் சூரியனும்
வணங்க பொங்குவோம்
பச்சை அரிசி குத்தி எடுத்து
பழவகை கரும்பு முற்றத்தில்
பரப்பிமங்களம் பொருகளோடு
மூன்று அடுப்பில் மண்பானை
வைத்துபொங்கல் வைப்போம்
தோறளங்கள் தொங்க விட்டு
முற்றம் மெழுகி கோலம் போட்டு
ஆயத்தப் படுத்துவோம்
அறு சுவையோடு பொங்கல்
பொங்குவோம்வெடி கொழுத்தி
உவகை பொங்க பொங்குவோம்
உற்றார் உறவினர் உள்ளம்
மகிழப் பொங்குவோம்
மனதும் வீடும் நாடும் மலர
பொங்கி மகிழ்வோம்!....

**- ஜெயா நடேசன் -**
**யேர்மனி**



## தாயக அனர்த்தம்!...

இயற்கையும் மாற்றமாய்
வெள்ளமும் சுழன்று
அடித்த சூறாவளியாய்
தொடர்ந்து பெரும் மழையாய்
தாயகமே வெள்ளப பெருக்கின்
அழிவாய்
இடம்பெயர் சூழலாய் சுனாமியாய்
வீடுகள வாகனங்கள் சேதமாய்
வீதிகள் தோறும் மரங்கள
வீழ்ச்சியாய்பெரும் வெள்ளத்தில்
ஆடு மாடு கோழிகள் விலங்குகள்
அடித்து செல்லப:பட்டதாய்
மலையகத்தில் மண் சரிவில்
புதையுண்டவர்களாய்
காணாமற் போனவர்கள பலதுமாய்
பசி பட்டினி கொடுமைகளாய்
சிவப்பு எச்சரிக்கையில் முடங்கினரே
தமிழ் மக்களின் துக்க நாளாய்
வந்ததே பெரும் அவலம்
அயல் நாடு இந்தியா உதவிக
கரங்களாய்மற்றும் எழுபத்திமூன்று
நாடுகள் பக்க பலமாய்
விமானி கடற்படை வீர்ர்கள்
உதவிய நிலைமையாய்
இறப்பை ஏற்று பணியில:
இறந்தவர்களாய்
அழிவுகளும் இழப்புகளும:
மனதிற்கு கனத்ததாய்
இயற்கையின் தாண்டவ
கோலத்திலேஅவசரகால
நிலைமையும் பிரகடமானதே
நல்லதொரு நிலைமை நாட்டிற்கு
கிடைக்க பிறக்க இருக்கும் இயேசு
பாலனிடம் வேண்டுவோம்
எம் உறவுகளுக்கு கரம்
கொடுத்து உதவிடுவோம்!..

# இதழ்:234- மண் சஞ்சிகை அட்டைப்படக் கவிதை:




பரிச்சயமான முகங்களைப் பக்கங்களில் நிரப்பிடாது
பரிசில்கள் பெற்றவரைப் பாராட்டியே - நோபலின்
பெயரினால் வழங்கிடும் பெருமதிப்பைப் பெற்றவர்களை
உயர்த்திடு மனதில் உந்தி..!

புரிந்திடும் பணிகளால் பூவுலகினை மேம்படுத்திடத்
தெரிவானவரை ஆய்ந்திட்ட தேர்வுக்குழு - நோபலின்
விருப்பினில் வழங்கிடும் வெகுமதியால் ஒளிர்பவரைக்
கருத்தினிற் போற்றிக் களி..!

பரிந்துரைக்கப் பட்டவருள் பன்னிருவரைப் பகுத்தாய்ந்த
தெரிவுக்குழுவோ முடிவினில் தெளிந்து - நோபலின்
இந்தமுறையின் வெற்றியாளராய் இயம்பிய யாவர்க்கும்
செந்தமிழாய் வாழ்த்தினைச் செப்பு..!

மரியாளின் மைந்தனாய் மண்ணுலகினில் உதித்திட்ட
பரிசுத்த தேவமகனின் பற்றினாலே - நோபல்
வழங்கிடும் பெருமதிப்பை வாழ்த்திடும் "மண்" மலரும்
வளமுடனே என்றும் வாழி..!

**- அம்பலவன்புவனேந்திரன் -**

# முடிவென்பது விடியல்தானோ...

முத்தமிட்ட கார்த்திகையே மொத்தமழை யானதுவோ
முன்னில்லா வரலாறாய் முழுதேசமும் அமிழ்வதுவோ
தத்தளித்து உயிர்களெல்லாம் தண்ணீரில் மிதப்பதுவோ
தப்பிப்பிழைக்க வழியுமின்றிக் கண்ணீரில் துதிப்பதுவோ
மத்தியிலே மலைநாடும் மண்சரிவினிற் புதைவதுவோ
மரித்தவுயிர் எண்ணிக்கை மலைபோல உயர்வதுவோ

வித்தாகப் புதைந்தவரின் வேள்வித்தீயும் அணையலையே
வேட்டுகளில் மடிந்தவர்களின் வேதனைகள் ஆறலையே
கத்தும்கடல் காவுகொண்டது கண்ணைவிட்டு மாறலையே
காலத்தினைக் கணித்திடும் கடவுளருமிங்கு வரவில்லையே
மொத்தமாகவே நிம்மதியும் முற்றாய் இங்கே தாங்கலையே
முழுவுலக உதவிகளின் முட்டுக்கட்டையும் நீங்கவில்லையே

இத்தனைக்கும் புத்தர்சிலை இழுபறிகள் நீங்கலையே
இடம்பெயர்வும் இழிநிலையும் இன்றுவரைத் தீரலையே
கத்துகின்ற காவிகளின் காரியங்களும் நிற்கலையே
கண்மூடிய நீதிதேவதை கணித்ததீர்ப்பும் வரவில்லையே
மத்தளமாய் அடிவாங்கும் மக்களின்னும் மீளவில்லையே
மண்ணிலே அமைதிவருமென்ற மார்க்கமும் தெரியலையே

கர்த்தரின் பிறப்பென்பதெமது கண்ணீரிலே துஞ்சிடுமோ
கால்நூற்றாண்டுப் பதிவில் காவுகொண்டவை கொஞ்சமோ
புத்தாண்டும் பொங்கலுமாய்ப் புலர்வினிலே ஒளிவருமோ
புத்தாடை இனிப்புகளாற் போனவுயிர்கள் துளிர்த்திடுமோ
இத்தரையில் ”டித்வா”வுடன் இனிமையெங்ஙனம் பூத்திடுமோ
இலங்கைத் தீவினையிறை இடர்களிலிருந்தே காத்டுமோ.?

**- அம்பலவன்புவனேந்திரன் -**

# டித்வா புயல்

வங்களாவிரிகுடாவில் உதயமாகி
வளர்ந்து விரிந்து புயலாகி
காற்று வேகம் கொள்ளக் கொள்ளக்
கடல் அலைகள் கொந்தளிக்க
வானம் மழை பொழியப் பொழிய
வாய்க்கால்கள் பெருக்கெடுக்க
நெல்பவயல்கள் நீர் நிரம்ப
நெற்பயிர்கள் சேதமுற
ஆறுகள் பெருக்கெடுத்து
அணைக்கட்டுகளைத் தகர்த்துவிட
மடை திறந்த வெள்ளமாய்
மழை நீர் நிலமெங்கும் பரவி
காட்டாற்று வெள்ளமாய்
கரைபுரண்டு ஓடி
வீதிகளைச் சிதைத்து
வீடுகளைச் சேதமாக்கி
பாலங்களை உடைத்து
பணிமனைகளைச் செயல்நிறுத்தி
ஊர்மனைகக்குள் உட்புகுந்து
ஊரவரை அவலமாக்கி
வீட்டைவிட்டு வெளியேற்றி
வீதிக்குத் துரத்திவிட
வீதியிலும் பெரு வெள்ளம்
எங்கே போவதென
எதுவும் புரியாமல்
ஏதிலி நிலையில்
ஏக்கத்துடன் மக்கள் நிற்க
நீர்மட்டமும் உயர்ந்து
நீர்த்தேக்கங்களும் உடைப்பெடுத்து
ஆடுமாடுகள் கோழிகள் குஞ்சுகள்
அனைத்தையும் அள்ளிக்கொண்டு
அசுர வேகத்தில்
அடித்துச் செல்லும்
அடங்காப் பெருவெள்ளம்
மலையை அரித்து
மண்சரிவை ஏற்படுத்த அதில்
தாண்டு போனவர்கள் கொஞ்சம்
தப்பியவர்கள் கொஞ்சம்
சொந்தங்களை இழந்து
சொத்துக்களை இழந்து
தாழமுடியாத சோகத்தில்
தத்தளித்து நிற்கும் நிலையில்
வாகன ஓடுபாதைகளில்
வள்ளங்கள் உட்புகுந்து
ஆபத்திலிருந்தவர்களை
அணைத்து மீட்டெடுக்க
டித்வா புயலின் கொடூரத் தாண்டவமும்
கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய
வெள்ளமும் மெல்ல மெல்ல வடிய
வீடுகளைத் தேடிச்
சொந்தங்களைத் தேடிச்
சொத்துக்களைத் தேடிய
கூட்டம் கூட்டமாய் மக்கள்
அங்குமிங்குமாய்
அலைந்து திரிந்தனர்....

**சு மணியம்**
**யேர்மனி**

## தைத்திருநாள்...

உவகை நிறைகின்ற உளத்தின்பொங்கல்
உலகை ஆளும் ஆதவன் நன்றிப்பொங்கல்
இல்லம் தளிர்த்திருக்கும் இனிய பொங்கல்
உழவுத் தொழிலின் உழைப்பின் விதைப்பில்
அகிலம் மகிழும் அறுவடைப் பொங்கல்
ஆதவன் பணிக்கு அர்ப்பணப் பொங்கல்
விடியல் விதைக்கும் தையின் பொங்கல்
வீரத்தமிழினம் வெற்றிப் பொங்கல்
புத்தாடை பூண்டு மத்தாப்பு வெடியுடன்
முற்றத்தை மெழுகிட்டு மூவர்ணக்
கோலமிட்டு புதுப்பானை தன்னில்
புத்தரிசியிட்டு பொங்கலோ பொங்கலென்று
பொங்கிடும் பொங்கல்
நன்றிதனை பகிரும் நம்முரிமைப் பொங்கல்
உறவுகளை இணைக்கும் உன்னதப்
பொங்கல்ஆவினத்தைப் போற்றும்
அடுத்தநாள் பொங்கல் நன்றிக்கு
உரித்தான நம்தமிழர் பொங்கல்
கனடா தேசத்தில் அங்கீகாரம் பெற்றிட்ட
மரபுத்திங்கள் தையென மதித்திடும்
பொங்கல்உலகமெங்கும் தமிழினம்உதிக்கும்
பரிதியை வணங்கிடும் உயர்வு நாளே
தைப்பொங்கல்நன்றிப் பெருநாள்
தைப்பொங்கல்நானிலம் போற்றும்
தைப்பொங்கல்வானுயர் வாகையின்
வரலாற்றுப் பொங்கல்.!

**வசந்தா ஜெகதீசன்**
**யேர்மனி**

## ஹைகூ கவிகள்...

**(துளிக்கவிகள்)**

**இறை சிந்தனை**

இறை சிந்தனை
இதயத்தில்இருந்துவிட்டால்
மறைந்திடும்
மனதின் கறைகள்!..

**அன்பு**

உண்மை அன்பும்
கருணை உள்ளமும்
திடமான நம்பிக்கையும்
இறை அன்பு வேண்டும்!..

**பக்தி**

பயமும் பக்தியும்
கலந்த இறைசிந்தையில்
நயமும் நலமும்
என்றும் கிடைத்திடும்!...

**பொறாமை**

பொறாமை கொண்டு
ஆற்றும் காரியம்
என்றும் தோல்விதான்!..

**சந்தேகம்**

சந்தேகம் குடிகொண்ட
மனித மனங்களில்
எந்நாளும் நிம்மதியற்ற
வாழ்வுதான் எஞ்சும்!..

**இராஜேஸ்வரி சிவராசா**
**யேர்மனி**

# காத்திருப்பு... (சிறுகதை)

மங்கை அரசி - யேர்மனி

நீதிபதி சத்தியமூர்த்தி கலங்கினார் அவர், நீதித்துறைக்கு வந்து இருபது வருடங்கள் கழிந்துவிட்டன. இதுவரை இப்படி ஒரு வழக்கை சந்தித்தது இல்லை. அவருக்கு நீதி சொல்லத் தெரியவில்லை. வழக்காளிக்கு சார்பாக தீர்ப்பு கூறுவதா? அது நியாயமான செயலாகுமா? இல்லையெனில் வாதிக்கு எதிராக தீர்ப்பு கூறுவதா? இந்த வழக்கில் எதிரி யார்? அந்த ஆண்டவனா?

இரவு முழுதும் நீதிபதி நித்திரை இன்றி தவித்தார். இன்று அவர் கூறப்போகும் தீர்ப்பை மாற்றுவதற்கு பல வழிகளில் முயன்றார். எல்லா வழிகளும் அடைபட்டுக்கிடந்தன. கண்ணுக்குத் தெரியாத எதிரியை கொண்டு இந்த வழக்கை வழக்காளி தொடுத்திருந்தார். வழக்கின் சாராம்சம் இதுதான்: திருமணம் செய்து பன்னிரண்டு வருடங்களாக, குழந்தையற்றிருந்த தம்பதிகளான ஆனந்தன் மற்றும் குமாரி ஆகியவர்களிற்கு, நீண்ட இடைவெளியின் பின் ஒரு பெண் குழந்தை பிறந்தது. "செல்வி" என பெயரிட்டு அக்குழந்தையை கண்ணும் கருத்துமாக வளர்த்தனர்.

தாயின் வயிற்றில் செல்வி இருந்த காலத்தில், மாதம் தவறாமல் மருத்துவ சோதனை செய்தனர். தாய்க்குரிய தடுப்பூசிகள், விட்டமின் மருந்துகள் என எல்லாவற்றையும் மருத்துவ ஆலோசனையுடன் தவறாமல் எடுத்திருந்தனர். குழந்தை பிறந்த பின்பும், தகுந்த மருத்துவப் பராமரிப்பும் குழந்தைக்கான நோய்த் தடுப்பூசிகளும், சொட்டு மருந்து முதலிய தேவையான எல்லா பராமரிப்பும் செய்திருந்தனர். ஆனால் குழந்தைக்கு வலிப்பு நோய் அடிக்கடி வந்த வண்ணம் இருந்தது. பெரிய பெரிய மருத்துவர்களிடம் எல்லாம் காட்டிப் பார்த்தனர். நோய்க்கான காரணத்தை மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

காலங்கள் ஓடிக் கடந்தன, குழந்தைக்கு பத்து வயது ஆன போதும், குழந்தையால் எழுந்து நிற்கவோ, இருக்கவோ முடியவில்லை. தலை கூட நேராக நிமிர்த்த முடியவில்லை. பிள்ளையால் வாய் பேச முடியவில்லை. தொடர்ந்து படுத்துக்கொண்டே இருந்தாள். அடிக்கடி வலிப்பு நோய் வந்த வண்ணம் இருந்தது. மூளை வளர்ச்சி அடையாது, உடம்பு மட்டும் வயதுக்கு ஏற்ப வளர்ந்து, நோய் வாய்ப்பட்ட உயிருள்ள பொம்மை போல் இருந்தாள் பிள்ளை.

வளர வளர பெற்றோர்களுக்கு பெரும் சிரமமாக இருந்தது. வலிப்பு வரும்போது, தோளில் தூக்கி போட்டுக் கொண்டு வைத்தியரிடம் ஓட முடியவில்லை. மருந்து விலைகளும் கூடுதலாக இருந்தது. செல்விக்கு சுற்றிவர என்ன நடக்கின்றது என்பதும் தெரியவில்லை. பசித்தால் அழும். சாப்பாடு கொடுக்க பிந்தினால், அழும். சாப்பாட்டை மசித்து சிறிது சிறிதாக

ஊட்ட வேண்டும். சாப்பிட்டு முடிக்க குறைந்தது ஒரு மணித்தியாலங்களாவது எடுக்கும். இப்படி கொடுக்காவிட்டால் அஜீரணம் ஏற்பட்டு, அதற்கான மருந்து மாத்திரைகளுக்குப் பணம் செலவு செய்ய வேண்டியதாகிவிடும். அவள் பக்கத்தில் ஒருவர் எந்நேரமும் இருக்க வேண்டியது அவசியமாக இருந்தது. யாரும் பக்கத்தில் இருக்காவிட்டால், ஊர்ந்து ஊர்ந்து போய் சுவற்றில் முட்டி மோதி உடலெல்லாம் காயங்கள் ஏற்பட்டுவிடும். அந்த காயங்களை ஆற்றுவதற்கு பெரும் பிரயத்தனபட வேண்டி வரும்.

பிள்ளைக்கு டயப்பர் வாங்குவதிலும் பெரும் செலவு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அவர்களிடம் இருந்த நகைகள் எல்லாம் விற்று விட்டார்கள். குடியிருந்த வீட்டை அடமானம் வைத்து விட்டார்கள். தந்தையால் ஒழுங்காக வேலைக்கு கூட செல்ல முடிவதில்லை. பணத்தேவை பெரிதாகி விட்டது. இதனால் பிள்ளையை கருணைக் கொலை செய்ய அனுமதி கேட்டு நீதிபதி யிடம் அந்தப் பெற்றோர் மன்றாடினர்.

முதலில் நீதிபதி உயர்மட்ட மருத்துவக் குழுவிடம் செல்வியை பரிசோதிக்கும் படி பரிந்துரை செய்தார்! அவர்களும் முயற்சித்த பின் முடியவில்லை என கை விரித்து விட்டனர். பிள்ளையை வைத்து பராமரிக்க அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என நீதிபதி கேட்டிருந்தார். ஆனால் அங்கும் சரியான பதில் கிடைக்கவில்லை.

பொது நிறுவனங்கள், உதவும் தொண்டர் அமைப்புகள், செல்வந்தர்கள் எல்லோரும் மருத்துவ செலவுக்கான பணம் கொடுக்கவும் ஆயத்தமாய் இருந்தனர். ஆனால் எதுவும் பிரயோசனப்படாது என மருத்துவர்கள் கைவிட்டு விட்டனர்.

எதுவும் செய்ய முடியாத கையறு நிலையில் நீதிபதி சத்தியமூர்த்தி அவர்கள் தன் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்த வண்ணம் கனத்த இதயத்துடன் வழக்காளியின் வேண்டுகோளை நிறைவேற்ற கையெழுத்திடும் கணத்தில், அரச சட்டத்தரணி, இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய மருத்துவ சாதனையை எடுத்துக் கொண்டு வந்து சபையில் நீட்டினார்.

பாரிய நோய் உள்ளவர்கள், மரணித்தால் அவர்களின் உடலை பழுதடையாமல் சரியான தட்பவெப்பநிலையில் வைத்திருந்து எதிர்காலத்தில் அந்த நோய்க்கான, மருத்துவ வசதி வரும் போது மீண்டும் உயிப்பிக்கும் கண்டுபிடிப்பில் 14 வயது பெண்ணை, அந்தக் குழந்தையின் விருப்பில், மரணதின் பின்னும் பேணிவருவதை அறியத்தந்தார்.

அது போல் இந்தக் குழந்தைக்கும் வாய்ப்புக் கொடுக்கச் சொல்ல, நீதிபதியும் உற்சாகமாக உடனடியாக தொண்டு நிறுவனங்களை நாட, சில தொழிலதிபர்களின் உதவியோடு, அந்தக் குழந்தை நம்பிக்கைத்தூக்கத்தில் இன்றும் காத்துக்கொண்டுள்ளது....

# 2026 இல் கணினி உலகம் எப்படி இருக்கப்போகின்றது?

இதுவரை காலமும் மனிதன் கணினியை உருவாக்கி அதன் மூலம் பல அறிவியலை உலகிற்கு தந்தமையால் நாம் தரமான தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக் கொண்டோம். ஆனால் இனி வருங்காலங்களில் மனி தனால் உருவாக்கப்பட்ட யுஐ செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) என்பது மனிதர்களைப் போல சிந்திக்கவும், கற்றுக்கொள்ளவும், முடிவெடுக்கவும் கணினி அமைப்புகளைப் பயிற்றுவிக்கும் தொழில்நுட்பமாகும், தமிழில் இதை "செயற்கை நுண்ணறிவு" அல்லது "செயற்கை அறிதிறன்" என்று அழைக்கப்படுகிறது, இது இயந்திரக் கற்றல், இயற்கை மொழி செயலாக்கம் போன்ற பல பிரிவுகளை உள்ளடக்கியது. இனிவருங்காலங்களில் HAI என்ற தொழில்நுட்பம் எம்மை வழிநடத்துவதனை நாம் உணரமுடிகின்றது. அந்த வகையில் இன்று செயற்கை நுண்ணறிவு என்ற தொழில்நுட்ப வளர்ச்சி மாபெரும் சாதனைபடைத்து வருவதனை அவதானிக்கப்பட்டமையால் இதனைப் பற்றியதான சில தரவுகளை மண் சஞ்சிகையுடாக உங்களின் அறிவுக்குக் கொண்டு வருகின்றேன்.

2026-ஆம் ஆண்டில் இருந்து நவீன கணினி உலகம் பெரும் மாற்றங்களைச்சந்திக்க இருப்பதாகத் தகவல்கள் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன அந்த வகையில். இப்போது நாம் வெறும் மென்பொருட்களைத் தாண்டி, இயந்திரங்களும் மனித அறிவாற்றலும் ஒன்றிணையும் ஒரு காலகட்டத்தில் இருக்கிறோம். மனிதனால் உருவாக்கப்பட்ட இயந்திரங்களை மனித சக்திக்கு அதிகமான தொழிற்பாட்டினை செய்யும் ஒரு சத்தி படைத்த உலகமாகக் கணினி உலகம் மாறுவதற்கான காரணிகள் கண்டறியப்பட்டள்ளது. இதனை நாம் பொறுத்திருந்ததான் அவதானிக்க முடியும். அந்த வகையில் கணினியின் ஆரம்பம் நீண்ட காலமாக இருந்தாலும் இந்த ஆண்டான 2026 இன் ஆரம்பப் பகுதியே அதன் தொடக்கமாக அமைவதனை அவதானிக்க முடிகின்றது. இதனை ஆய்வு செய்யும் நோக்கமாகவும் கணினி உலகம் 2026 இல் எப்படி இருக்கப் போகின்றது என்பதனை அறிய இத்தகவல்கள் மண் சஞ்சிகை வாசகர்களுக்கு உறுதுணையாக அமையலாம்.

## 2026-ல் கணினித் துறையை ஆளப்போகும் முக்கிய மாற்றங்கள் இதோ..

1. செயற்கை நுண்ணறிவின் அடுத்த கட்டம் (Agentic AI)கணினிகள் இதுவரை நாம் கேட்ட கேள்விகளுக்கு AI பதில் அளித்து வந்தது. ஆனால் 2026-ல் இருந்து "Agentic AI" எனப்படும் தன்னாட்சி கொண்ட AI ஏஜெண்டுகள் பிரபலமாகியுள்ளன. இவை வெறும் பதில்களைத் தருவதோடு நிறுத்தாமல், உங்களுக்காக மின்னஞ்சல் அனுப்புவது, பயணங்களை முன்பதிவு செய்வது அல்லது மென்பொருள் குறியீடுகளை (Coding) சுயமாக எழுதி இயக்குவது போன்ற செயல்களைச் செய்கின்றன.

## Generative AI

Generative AI (உருவாக்கமுறை செயற்கை நுண்ணறிவு) என்பது தரவு-களைப் புரிந்துகொள்வதோடு மட்டுமல்லாமல், புதிய தரவுகளை (உரை, படங்கள், இசை போன்றவை) உருவாக்கும் திறன் கொண்டது. இது எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதை எளிமையாகக் கீழே காணலாம்:

### 1. தரவு சேகரிப்பு மற்றும் பயிற்சி (Training Data)

Generative AI-ன் அடிப்படை அதன் பெரிய அளவிலான தரவுத்தொகுப்பு (Datasets) ஆகும். உதாரணமாக, ஒரு AI மொழியைக் கற்க வேண்டுமென்றால், இணையத்தில் உள்ள கோடிக்கணக்கான புத்தகங்கள், கட்டுரைகள் மற்றும் உரையாடல்கள் அதற்குப் பயிற்சியாக அளிக்கப்படுகின்றன.

### 2. கோலங்களைக் கண்டறிதல் (Pattern Recognition)

பயிற்சியின் போது, இந்தத் தொழில்நுட்பம் தரவுகளுக்கு இடையே உள்ள தொடர்புகளைக் கண்டறியும்.

- உரை (Text): ஒரு வார்த்தைக்குப் பிறகு அடுத்த வார்த்தை என்ன வரும் என்பதற்கான நிகழ்தகவைக் கணக்கிடும். (உதாரணமாக: "வானம்..."என்று தொடங்கினால் "நீல நிறமாக உள்ளது" என்று முடிப்பதற்கான வாய்ப்பு அதிகம் என்பதை அது அறியும்).

- படங்கள் (Images): பிக்சல்களுக்கு இடையே உள்ள தொடர்புகளைக் கொண்டு ஒரு மனித முகம் அல்லது இயற்கைக்காட்சி எப்படி இருக்கும் என்பதைக் கற்றுக்கொள்ளும்.

### 3. நியூரல் நெட்வொர்க்குகள் (Neural Networks)

மனித மூளையின் செயல்பாட்டைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட Neural Networks மூலம் இது இயங்குகிறது. குறிப்பாக, Transformer எனப்படும் தொழில்நுட்பம் இதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இது ஒரு வாக்கியத்தில் உள்ள வார்த்தைகளுக்கு இடையிலான முக்கியத்துவத்தை (Attention Mechanism) உணர்ந்து கொள்கிறது.

### 4. பயனர் உள்ளீடு மற்றும் உருவாக்கம் (Prompt and Output)

நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்கும்போது (Prompt) AI தான் ஏற்கனவே கற்றுக்கொண்ட அறிவைக் கொண்டு, அந்தத் தருணத்தில் மிகவும் பொருத்தமான பதிலை வார்த்தை வாரியாக அல்லது பிக்சர் வாரி யாக உருவாக்குகிறது. இது ஏற்கனவே உள்ள தகவலை அப்படியே பிரதிபலிக்காமல், புதிய வடிவில் கோர்த்து வழங்குகிறது.

சுருக்கமாகச் சொன்னால்: Generative AI என்பது ஒரு மிகப் பெரிய நூலகத்தைப் படித்து முடித்த ஒரு மாணவரைப் போன்றது. அவரிடம் நீங்கள் ஒரு தலைப்பைக் கொடுத்தால், அவர் படித்த விஷயங்களை வைத்துப் புதியதொரு கட்டுரையை உருவாக்குவார்.

## 2. குவாண்டம் கம்ப்யூட்டிங்கின் வருகை (Quantum Computing)

குவாண்டம் கணினிகள் இப்போது ஆய்வகங்களைத் தாண்டி நிதித்துறை, மருத்துவம் மற்றும் விநியோகச் சங்கிலி (டுழபளைவஉைள) போன்ற நிஜ உலகப் பயன்பாடுகளுக்கு வரத் தொடங்கியுள்ளன. இவை சிக்கலான கணக்குகளை நொடிப்பொழுதில் தீர்க்க உதவுகின்றன.

## 3. ஸ்பேஷியல் கம்ப்யூட்டிங் (Spatial Computing)

ஆப்பிள் விஷன் ப்ரோ (யீடந ஏளைழை ீசழ) போன்ற சாதனங்கள் மூலம், கணினித் திரை என்பது உங்கள் கண்களுக்கு முன்னால் இருக்கும் காற்றிலேயே விரிவடைகிறது. மெய்நிகர் உலகம் (ஏசு) மற்றும் நிஜ உலகம் (யுசு) இரண்டும் இணைந்து, நாம் வேலை செய்யும் முறையை மாற்றியமைக்கின்றன.

## 2026-ன் முக்கிய தொழில்நுட்பப் பட்டியல்கள்

**தொழில்நுட்பம் தாக்கம்** (Impact)


Edge AI தரவுகள் கிளவுடுக்குச் செல்லாமல் உங்கள் கைபேசியிலேயே நேரடியாகப் பதப்படுத்தப்படும்.


Cybersecurity AI மூலமாகவே சைபர் தாக்குதல்கள் நடப்பதாலும், அவற்றைத் தடுக்க 'AI-driven defense' கட்டாயமாகிறது.

Sustainable IT கணினிகள் அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துவதால், குறைந்த ஆற்றலில் இயங்கும் 'Green Computing' முறைக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

Physical AI ரோபோக்கள் மற்றும் ட்ரோன்கள் AI மூலம் சுயமாகச் சிந்தித்து வேலை செய்கின்றன.

இதன் காரணமாக உலகளாவிய தொழில்நட்பம் மாபொரும் வளர்ச்சியை அடையப் போவதனை நாம் இங்கு வலியுறுத்தி வைக்கின்றோம். தரவு அறிவியல் (Data Science) கற்றுக் கொண்ட மாணவர்களுக்கா எதிர்காலம் மிகவும் சிறந்ததாக அமையப் போவதாகக் கணினித்தரவுகள் எமக்குத் தெரிவிக்கின்றன. அந்த வகையில் இப்படியாகக் கணினிக் கல்வி முறையை நாம் ஒவ்வொருவரும் கற்றிந்து கொள்வதன் மூலம் எமது எதிர்கால தொழில்நுட்பவியலை நாமே தீர்மானிக்கும் சக்தியாக அமையலாம்.



இந்த வருடத்திலிருந்து தகவல் தொழில்நுட்பம் மிகவும் பிரமாண்டமான ஒரு ஆண்டாக அமையும் என தெரிவிக்கப்பட்டள்ளது. இதுவரைகாலமும் கணினித்தொழில்நுட்பங்களைக் கண்டுபிக்கும் காலமாக அமைந்தது அனால் இனிவரும் காலங்களில் இதனைப் பரவலாக்கி இதனை அனைத்துத் தரப்பினருக்கும் பயன்படுத்தும் ஒரு தொழில்நுட்ப ஆண்டாக அமையலாம் எனக் கணினித் தகவல்கள் எமக்குத் தெரிவிக்கின்றன. கணினி உலகில் முக்கிய திருப்பு முனையாக அமையும்.

இனி வாருங்காலங்களில் நீங்கள் என்ன என்ன கல்வியைக் கற்றாலும் அல்லது என்ன என்ன வேலை செய்தாலும் உங்களுடன் ( AI Technology) AI தான் நின்று செயற்படப்போகும் ஒரு உலகமாக அமையப் போகின்றது. அல்லது அந்தக் கல்வியை உங்களுக்கு கற்பிக்கப் போகும் ஒரு ஆசானாக அமையப் போகிறது அல்லது உங்கள் வேலையை ஒரு நொடிக்குள் செய்து முடிக்கப் புதிய தொழில்நுட்ப காலமாக அமையப் போகிறது. இதன் விளைவு எப்படி அமையும் என்பதனை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள?

இதன் காரணமாகவே உங்களை இந்தத் தொழில்நுட்பம் பற்றி முன்னதாகவே கற்றறிந்து கொள்ளச் சொல்கின்றோம். ai technology என்றால் என்ன என்பதனை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். இப்படியான கணினிக் கற்கைநெறிகளைக் கற்றுக் கொள்ள ஐரோப்பியக் கணினிக் கல்வி நிலையம் உங்களுக்கு உதவியும் வசதியும் செய்து கொடுக்கின்றது. எங்கள் அறிவாலயத்தில் கணினி பற்றியதான உங்கள் பதிவுகளைப் பதிவிடலாம். மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள மண் சஞ்சிகை பத்திராதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

கணினிக் கல்வி இதழ்

**ஆசிரியர் தி.லம்பேட்ஐரோப்பியக் கணினிக் கல்வி நிலையம**

Email - alxlambrtt@aol.com


**அறிவாலயம்** - Frankfurt

# மனதுக்கு இன்பம்தருவது சுற்றுலா...

## பயணக்கட்டுரை தொடர்ச்சி...

- கலைவாணி ஏகானந்தராசா - யேர்மனி





அவுச்திரேலியாவின் - கன்பரா (Canberra) மானிலம் தான் தலைநகரம் ஆகும். சிட்னி மானிலத்திலிருந்து கன்பரா மானிலம் 285 கிலோமீற்றர் துாரமாகும். நாம் சிட்னியிலிருந்து ஓர் வாகனத்தில் புறப்பட்டு 3 மணி நேரம் பயணித்து அவுஸ்திரேலிய பார்லிமன்ற்( Parliament House) போய் சேர்ந்தோம். வெளித்தோற்றம் மிக பிரமாண்டமாக அழகாக இருந்தது. சுற்றுப்புறம் நீர் தேக்கங்களுடனும் பச்சைப் பசேல்லென்ற
புல் வெளியுடன் காணப்பட்டது.

ஆவுஸ்திரேலியாவின் தெற்கு பிராந்தியத்தில் மிகப் பெரிய கட்டடம் இதுவே. 250.000 சதுரமீற்ரர் பரப்பளவில் 300மீற்றர் நீளம் 300 மீற்றர் அகலமான கட்டிடத்தில் 4.500 அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. பிரமாண்டமான இரண்டு சபைகளை சென்று பார்த்தோம். ஒன்று செனட்சபை(மேற்சபை) சிவப்பு நிறத்தில் நிறைந்த இருக்கைகளுடன் காணப்பட்டது. மற்றையது பிரதிநிதிகள்சபை (கீழ்ச்சபை) பச்சை நிற இருக்கைகளுடன் காணப்பட்டது. இதனை பார்வையிட்டபின் அவுஸ்திரேலிய போர்வீரர் நினைவு மண்டபத்தை பார்வையிட்டோம்.

லட்சக்கணக்கான போர் வீரர்களின் பெயர்கள் விபரங்கள் பொறிக்கப்பட்ட சுவர்களில் பூமாலைகள் தொங்கவிடப்பட்டிருந்ததை பார்க்கும்போது உணர்வுபூர்வமாக நாமும் கை எடுத்து கும்பிட்டோம். அந்த கட்டிடத்துக்கு பக்கத்தில் ஓர் பெரிய கட்டிடம் (Australian War Memorial) ஆஸ்திரேலிய போர் நினைவாலயம் காணப்பட்டது. போர்க் காலத்தில் பாவித்த உபகரணங்கள் வாகனங்கள் போர் நேரத்தில் எடுத்த படங்கள் எல்லாம் மிகவும் மனதை உருக்கும் காட்சிகளாக அமைந்திருந்தன. அடுத்து நாம் (Melbourne) மெல்போன் நகரத்துக்கு பயணமானோம். ஒரு மணிநேரம் விமானத்தில் பயணம் செய்து மெல்போன் நகரத்துள் ஒரு (Hotel) விடுதியில் தங்கினோம்.

அந்த விடுதியின் பக்கத்திலேயே சரவணபவன் உணவு விடுதி இருந்தது எமக்கு சாதகமாக அமைந்தது. நாம் முன்கூட்டியே சுற்றுலா பயணிகளுக்கான வாகனத்தை பதிவு செய்துவிட்டு சென்றமையால் சரியாக காலை 8 மணிக்கு விடுதி வாசலில் வாகனம் வந்து நின்றது. வாகன சாரதியே வழிகாட்டியாக செயல்பட்டார். வெளிக்கிட்ட நேரத்திலிருந்து திரும்பி வரும்வரை இடங்களைக் காட்டி விளக்கம் கொடுத்ததுடன் பல சரித்திரக் கதைகளையும் கூறினார். அவுஸ்திரேலிய வரலாற்றையே மிக சுவாரசியமாக கூறிக்கொண்டு வந்தார். இடை இடையே நசைச்சுவையாக பேசி எம் மகிழ்வான பயணத்துக்கு உதவினார்.

240 கிலோ மீற்றர் தூரத்தைக்கொண்ட புகழ்பெற்ற பாதையான நீண்ட கடற்கரைப் பாதையில் (Great Ocean Road) பயணித்தபோது அழகான கடற்கரை இயற்கை அழகையும் கண்கவர் மலைகளின் அழகையும் பசுமையான காடுகளையும் ரசித்தவண்ணம் பயணித்தோம். இடை இடையே கடற்கரையில் இறக்கிவிட்டு எமக்கு வேண்டிய உதவிகளை செய்து மிக கவனமாக பார்த்துக்கொண்டமை எமக்கு மறக்கமுடியாத அனுபவம். நீண்ட பயணத்தின்பின் ( Phillip Island)பிலிப் கடலோரத்தில் இறங்கினோம். மக்கள் கூட்டம் அலைமோதியது. இரவு 9 மணிக்கு ஓர் அதிசயம் நிகழ இருப்பதாக கூறினார்கள்.

மக்களை சத்தம் போடாதிருக்க பணித்தார்கள். கடற்கரையோரத்தில் படிக்கட்டுகளில் நிரையாக அமரவைத்தார்கள். சரியாக 9 மணிக்கு (Penquin Parade) கடலிலிருந்து ஒருவரொருவராக சிறிய இன பென்குயின்கள் நூற்றுக்கணக்கான பறவைகள் வெளியே வந்தன. அவை ஆடிஆடி நடந்த அழகும் வரிசையாக வெளியேறி பின் பிரிந்து பிரிந்து தத்தமது கூடுகளை நோக்கி சென்றமையும் எம்மை பிரமிக்கவைத்தது.

இவை ஒவ்வொருநாளும் நடைபெறும் காட்சியானாலும் ஒரே பறவை தினமும் செல்வதில்லை. இவை மீன்பிடிக்கச்சென்று இரண்டு மூன்று நாட்களுக்குப் பின்னரே திரும்புகின்றனவாம். கூட்டில் அதன் ஆண் பறவையோ பெண் பறவையோ குஞ்சை பாதுகாத்திருக்கும். மிக விநோதமான சுவாரசியமான காட்சியை பார்த்த மகிழ்வுடன் திரும்பினோம். அடுத்த சுற்றுலா நியூசிலாந்தில்

தொடரும்...

# நான்தான்!... மதவடி மயிலன்!...

நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன் வணக்கம்!...வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்கிறன்.. புதுவருசமும் பிறந்துவிட்டது. இனி புதுப்புது ஐடியாக்கள் ஏதும் திட்டமிட்டிருப்பியள். என்று இந்த மயிலன் எண்ணுகின்றான்... நல்லதை நினைப்பம் எல்லாம் நல்லபடி நடக்கட்டும். இந்தமுறை மயிலன் இணையத்தில் சுட்டஒரு விடயத்தை உங்களோடு பகிர்ந்துகொள்கிறான். அளவுள்ளவர்கள் தொப்பியைப் போட்டுக்கொள்ளுங்கோ..ராசாக்கள் ராசாத்திகள்.. இக்கட்டுரையை எழுதிய பெண்மணிக்கு நன்றிகள்...

## "நேரமில்லை, நேரமில்லை"

நேரமில்லை, நேரமில்லை" இப்போதெல்லாம் "எனக்கு நேரமில்லை" என்று சொல்வது ஒரு fashion. அது ஒரு எழுதப்படாதச் சமூக ஒப்பந்தம். எல்லோரும் சொல்ல வேண்டும்! செய்யாமைக்கு ஒரு கவர்ச்சி. பொறுப்பைத் தள்ளிவைக்கும் ஒரு மென்மையானப் போர்வை. காரணம் கேட்காத ஒரு பாதுகாப்பு வார்த்தை.

"நான் busy-யாக இருக்கிறேன்." என்று உலகத்துக்குக் காட்டும் ஒரு மரியாதைச் சின்னம். ஆனால், எமக்கு நேரமில்லை என்பதில்லை உண்மை. நாம் அதை எதற்குக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிப்பதில்லை, என்பதே உண்மை.



வீட்டிலேயே உட்கார்ந்திருப்போம். வேலை இல்லை.வெளியில் போகவும் இல்லை. ஆனாலும் கேட்டால், உடனே பதில் தயாராக இருக்கும்: "நான் ஒரே busy, நேரமில்லை..."

நமக்கு"episode episode-ஆக வாழ்க்கையைக் கரைக்கும்" Serial பார்க்க, நேரம் இருக்கின்றது! "அர்த்தமற்றபொழுதுப்போக்கு" TikTok-இல் மூழ்க, நேரம் இருக் கின்றது! "நினைவுகளை விற்கும் சந்தை" Facebook-யை அலச, நேரம் இருகின்றது! "போலிப் புன்னகை ஆல்பம்" Instagram-இல் வித விதமான படங்கள் போட,நேரம் இருக்கின்றது!

ஆனால் எமக்கு, பெற்றோரை அழைக்க நேரமில்லை, நண்பர்களைச் சந்திக்க நேரமில்லை, புத்தகம் படிக்க நேரமில்லை, ஏதேனும் புதிதாகக் கற்றுக் கொள்ளவும் நேரமில்லை. ஏனென்றால், "நான் ஒரே டிரளல!" தூரத்திலுள்ள ஒருவரின் முகத்தைப் பார்க்க முன்பு வருடங்கள் ஆயின, இப்போது வினாடிகளில் தெரிகின்றது. ஆனாலும் நட்புகளைப் பாராட்ட எமக்கு நேரமில்லை. ஏனென்றால், "நான் ஒரே டிரளல!" உலகம் வேகமாகிவிட்டது, தொழில்நுட்பம் கைக்குள் விண்ணைத் தொடுகின்றது. ஆனாலும், எனக்கு நேரமில்லை. ஏனென்றால், "நான் ஒரே busy!"

அம்மா கையால் அரைத்தாள். அம்மா கையால் அரிசி வடித்தாள் அம்மா கையால் கூட்டினாள் அம்மா கையால் கழுவினாள். இடித்தாள், அரைத்தாள் அம்மா கையால் துவைத்தாள் ஆனால் அவளிடம் எப்படியோ நேரம் இருந்தது. இப்போது சமையலறை இயந்திரங்களால் நிரம்பியுள்ளது.

Mixer அரைக்கின்றது.
Cooker சமைக்கின்றது.
Vacuum கூட்டுகின்றது.
Dish Washer கழுவுகின்றது.
Washing Machine துவைக்கின்றது.

ஆனாலும், எமக்கு நேரமில்லை. ஏனென்றால், "நான் ஒரே busy!" காலை, மதியம், மாலை என்று உணவு. எல்லாவற்றுக்கும் அம்மா நேரம் கண்டுபிடித்தாள். ஆனால், எம்மால் ஒரு நேரம் தான் சமைக்க முடியும். எமக்கு நேரமில்லை. ஏனென்றால், "நான் ஒரே busy!"

அம்மா சிரித்தாள். அவளுக்கு இந்த வார்த்தைத் தெரியாது.அவள் உலகில் நேரம் ஒரு எதிரி இல்லை. வேலை நடுவில் கூட ஒரு உரையாடல், ஒரு சிரிப்பு, ஒரு நிமிடம் இருந்தது. ஆனால், நமக்கு உதுக்கெல்லாம் நேரமில்லை. ஏனென்றால், "நான் ஒரே busy!" ஒரு நாள், நேரமே நழுவிப் போகும். அப்போது உணர்வோம், நேரம் இருந்தது...

ஆனால் நேரமில்லை என்று சொல்லிக்கொண்டே வாழ்வதை மறந்து விட்டோமென்று. "நேரமில்லை. நான் busy!" இது தான் இன்றைய மிகப் பரவலான ஒரு பொய்.

என்றென்றும் நட்புடன்...

**சிபோ சிவகுமாரன்**
**திரைப்பட இயக்குநர் - யேர்மனி**

# நேரம் இருக்கு!..

- ரிவி, கணனி, கைத்தொலைபேசி, டிக்டொக், இன்ரகிராம், வட்சப், வைபர் பார்க்க நேம் இருக்கு!..

- சமூக ஊடகங்களில் வரும் அடிபிடிகள், ஆபாசங்கள், அலம்பல்கள், அறுவைகள், ஒன்றுக்கும் உதவாதவற்றைப் பார்த்து மகிழ நேரம் இருக்கு!..

-சினிமாவையும் சின்னத்திரையையும் மணிக்கணக்கில் பார்த்து கண்ணீர் வடிப்பதுடன் மற்றவர்களையும் குழப்பிவிட நேரம் இருக்கு!..

-ஆட்டம் பாட்டம் குத்தாட்டம், குமரி ஆட்டம். அரைகுறை ஆட்டம். சினிமா நடடிகர்களின் தனிப்பட்ட அலங்கோலங்களையும் பார்த்து ரசிக்க நேரம் இருக்கு!..

-தனிப்பட்ட முறையில் மற்றவர் களை இணையங்களில் தாக்கி எழுதுவதற்கும், பழிவாங்குவதற்கும் நேரம் இருக்கு!..

-யூரியூப்பர்களின் குறை நிறை களையும் அவர்களின் தேவையற்ற செயற்பாடுகளையும் பார்த்து ஆனந்தமடைய நேரம் இருக்கு!...

-தேலைபேசி, கைத்தொலைபேசி களில் அடுத்தவர் விண்ணாணங் களையும் தேவையற்ற விடயங்களையும் மணிக்கணக்கில் அடுத்தவரோடு கதைத்து அரட்டை அடிக்க நிறைய நேரம் இருக்கு!..

-காசு, பண வருவாய் என்றால் எந்த நேரத்திலும் எங்கேயும் , எப்படியும் கதைக்க மட்டும் நேரம் இருக்கு!..

இப்படி அடுக்கலாம் பாருங்கோ!.. அடுக்கினால் தாங்கமாட்டீர்கள். எனவே நிறுத்தி...எல்லாரும் நலமாய் இருங்கோ..அடுத்த பதிவோடு இந்த மயிலன் வருவான்...

**இ.கு....மயிலன்**

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு..

| | | | |
|---|---|---|---|
| கா | த | ல | ர் |
| க | ட | ல் | த |
| ம் | ல | ப | த் |
| பி | றை | லி | பு |

## குறுக்கழுத்துப்போட்டி முடிவு..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | ழை | வெ | ள் | ள | ம் | ம் |
| ம | க | ள் | ம் | ட | க | ட |
| க | ள் | ளி | ள் | உ | ல | ட் |
| ற் | க | வி | க | ட | க | வி |
| க | ண் | டி | ட் | ப | ட் | டி |
| ண் | ணீ | ட் | டு | ட் | ல | ட் |
| டு | ர் | ச | ரை | லா | ல் | வ |

## சுடோக்கோ போட்டி முடிவு...

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 2 | 8 | 3 | 1 | 7 | 9 | 6 |
| 1 | 9 | 8 | 6 | 7 | 4 | 3 | 5 | 2 |
| 6 | 3 | 7 | 5 | 2 | 9 | 8 | 4 | 1 |
| 7 | 1 | 4 | 3 | 9 | 6 | 5 | 2 | 8 |
| 2 | 5 | 3 | 4 | 8 | 7 | 6 | 1 | 9 |
| 8 | 6 | 9 | 1 | 5 | 2 | 4 | 3 | 7 |
| 4 | 2 | 5 | 7 | 1 | 8 | 9 | 6 | 3 |
| 9 | 8 | 6 | 2 | 4 | 3 | 1 | 7 | 5 |
| 3 | 7 | 1 | 9 | 6 | 5 | 2 | 8 | 4 |

# சர்க்கரை நோயை உடனே விரட்டியடிக்க இதை சாப்பிடலாம் !...



தற்போதைய காலக்கட்டத்தில் வயது வித்தியாசம் இன்றி பலரையும் சர்க்கரை நோய் தாக்குகிறது. இதற்கு காரணமாக தவறான வாழ்க்கைமுறை மற்றும் உணவு முறைதான். சர்க்கரை வியாதி முழுமையாக குணப்படுத்த முடியாது என்று கூறுவார்கள்.

இதனால் வாழ்க்கை முழுவதும் அதற்கான ஆங்கில மருந்துகளை உட்கொண்டு இருப்பார்கள். மருந்தை நிறுத்தியவுடன் மீண்டும் சர்க்கரை வியாதி தலைதூக்க ஆரம்பித்து விடும்.

எனவே அந்த மருந்தை வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து எடுத்துக்கொண்டே வருகிறார்கள் பலரும். அதே நேரத்தில் உங்களது சர்க்கரை வியாதி நிரந்தரமாக குணப்படுத்திவிட முடியும் என்று பலரும் கூறுகின்றனர். அப்படி சர்க்கரை வியாதி முழுவதுமாக குணப்படுத்த சில எளிய இயற்கை பொருட்கள் உண்டு.

லவங்கப்பட்டை:
லவங்கப்பட்டை பொதுவாக நமது சமையல் முறைகள் பலவிதமான உணவுப் பொருட்களிலும் நாம் சேர்ப்பது உண்டு. லவங்கப் பட்டையில் சர்க்கரை வியாதிக்கு எதிராக போராடக்கூடிய பலவிதமான இயற்கை காரணிகள் உள்ளது. உடலில் உருவாகும் குளுக்கோசின் அளவை இந்த லவங்கப்பட்டை பெரிதும் தடுக்கிறது. இதை தொடர்ந்து நாம் உண்டுவந்தால் உடலில் உள்ள சர்க்கரை வியாதியின் அளவு குறைவதற்கு பெறும் வாய்ப்பு உள்ளதாக கூறுகின்றனர்.

மஞ்சள் :
மஞ்சளில் இயற்கையாகவே anti-inflammatory என்ற வேதிப்பொருள் உள்ளது இது அலர்ஜி போன்ற விஷயங்களை தடுத்து நிறுத்தும் என்பதை நாம் பெரும்பாலும் அனைவரும் அறிந்ததே. ஆனால் இது போக இன்னும் மஞ்சளில் ஒரு சில குண நலன்கள் உள்ளது. மஞ்சள் அண்டிகேன்சர் தன்மை கொண்டது. அதுமட்டுமல்லாமல் மஞ்சள் ஒரு சிறந்த இயற்கையான ஆன்ட்டி டயாபட்டிக் பொருளாக செயல்படுகிறது.




இதுவும் மேலே குறிப்பிட்ட மூலிகையை போல இன்சுலின் பாதுகாப்பை அதிகரிக்கிறது. மேலும் அதிக அளவு குளுக்கோஸ் நம் உடலில் செல்வதையும் தடுக்கிறது.சர்க்கரை வியாதி உள்ளவர்கள் தினமும் இரண்டு கப் மஞ்சள் டீ குடித்து வந்தால் மிகவும் நல்லது. அல்லது ஒரு கப் தண்ணீரில் சிறிதளவு மஞ்சள் தூளைக் கலக்கி அதை சுட வைத்து தினமும் குடித்து வருவது மிகவும் நல்லது என்று குறிப்பிடுகின்றனர்.

நாவல் பழங்கள்: நாவல் பழங்கள் மற்றும் அதனுடைய கொட்டைகளுக்கும் சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்தக்கூடிய அபரிமிதமான சக்திகள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை நம் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை பெரிதளவு குறைத்து, சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்த உதவுகிறது. நாவல் பழ விதைகளை நிழலில் நன்கு உலர்த்திப் பொடி செய்து வைத்துக் கொண்டு, அதை பாலில் கலந்து குடித்து வரலாம்.

வெந்தயம் :
வெந்தயத்தில் உள்ள வேதிப்பொருள்கள் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைக்க உதவுகிறது.

## மனித உடல் பற்றி....

1- மனித உடலில் தினமும் 50-70 பில்லியன் செல்கள் புதிதாக உருவாகின்றன.
2- மனிதன் பிறக்கும் போது 300 எலும்புகள். வளர்ந்த பிறகு 206 எலும்புகள் காணப்படும்.
3- மனிதக் கண்ணால் ஒரே நேரத்தில் சுமார் 2 கோடி நிறங்களை வேறுபடுத்த முடியும்.
4- மனித உடலில் நாக்குதான் விரைவாகக் குணமாகும் உறுப்பு.
5- ஒரு நாளைக்கு மனிதன் சராசரியாக 60.000 எண்ணங்களை நினைக்கிறான்.

# சுகாதாரக் குறிப்புகள்...

**மொழிபெயர்ப்பு......**




**செல்வி சாமினா
சிவதாசன்**

1963 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையலிருந்து இன்று வைர ஜேர்மனியல் 100 000 சிறுநீரகங்கள் மாற்று செய்யப்பட்டுள்ளன.
100 000 Nieren wurden seit der ersten Übertragung 1963 in Deutschland transplantiert

ஜேர்மனியில் 2040 ஆம் ஆண்டுக்குள் பார்கின்சன் நோயாளிகள் 50% அதிகரிப்பு ஏற்படலாம். இதற்கான ஒரு காரணம் ஆயுள் எதிர்பார்ப்பு உயர்ந்து வருவதாகும்.

50% der Parkinson Erkrankungen könnte es bis 2040 in Deutschland geben- auch weil die Lebenserwartung steigt

நோய் எதிர்ப்பு செயல்முறைகளில் 80% குடலில் நடைபெறுகின்றன.
80% der Abwehrprozesse laufen im Darm ab

சாதாராரண ஒரு மனிதன் தனது வாழ்நாளில் சுமார் 120 000 கிலோமீட்டர் நடந்து செல்கிறான்
120 000 Km geht ein Mensch im Schritt im Laufe seines Lebens

ஜேர்மனியர்களில் 50% க்கும் மேற்பட்டவர்கள் பல் தூரிகையன் செயல்திறனை மிகைப்படுத்திக் கணக்கிடுகிறார்கள். அவர்கள் 70 முதல் 80% வைர பற்களின் மேற்பரப்பை அது சுத்தம் செய்கிறது என்று நினைக்கிறார்கள். ஆனால் அது உண்மையில் சுமாராக 60% மட்டுமே சுத்தம் செய்கறது. மீதமுள்ள பகுதிக்கு,உதாரணமாகப் பல்நார் (Zahnseide)

Über 50% der Deutschen überschätzen die Leistung der Zahnbürste. Statt vermuteten 70 bis 80%der Zahnoberflächen reinigt sie nur rund 60%. Für den Rest braucht es z.B. Zahnseide.

2024ஆம் ஆண்டில் ஜேர்மனியல் 637 537 குடல் முன்னெச்சரிக்கை எண்டோஸ்கோப்பகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது ஒரு புதய சாதைன
637 537 Vorsorge Darmspiegelungen wurden 2024 in Deutschland in Anspruch genommen- neuer Rekord.

நீரிழிவு நோயுடன் வாழும் மக்களில் 10% பேருக்கு மன அழுத்தம் உள்ளது

10% der Menschen mit Diabete

s haben eine Depression.

இளம் வயது மனிதர்களில் 86% மற்றும் முதியோர்களில் 88% பேர் ஆண்டுக்கு ஒரு முறை பல் மருத்துவரிடம் பரிசோதைனக்குச் செல்வார்கள்.

86% der jüngeren Erwachsenen und 88% der Senioren nehmen einmal jährlich eine zahnärztliche Untersuchung wahr.

ஆரோக்கியமான உணவுமுறை நோய்களைத் தடுக்க உதவும் என்று 85% ஜேர்மனியர்கள் உறுதியாக நம்புகிறார்கள்

85% der Deutschen sind überzeugt , dass eine gesunde Ernährung dazu beitragen kann, Krankheiten vorzubeugen.

ஒஸ்டியோபேராசஸ் நோயாளிகளில் 80% பேர் பெண்கள்.மடுடூ2 1

80% der Osteoporose Patienten sind Frauen.

தொடை எலும்பு முறவு கொண்ட நோயாளிகளில் 90%-க்கும் மேற்பட்டோருக்கு எலும்பு அடர்த்தி குறைவாக உள்ளது

Über 90% der Patienten mit Oberschenkelhalsbruch haben eine vermind-erte Knochendichte.

ஜேர்மனியல் 6 மில்லியன் மக்கள் ஒஸ்டியோபேராசஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்

D6 Millionen Menschen in Deutschland leiden an Osteoporose.

ஜேர்மனியல் 18 முதல் 69 வயதுக்குள் உள்ள பெண்களில் 27% மற்றும் ஆண்களல் 32% பேர் ஒற்றையாக வாழ்கின்றார்கள்.

27% der Frauen und 32% der Männer zwischen 18 und 69 Jahren in Deutsch-land sind Single

2023ஆம் ஆண்டில் ஜேர்மனியல் 43 839 பேர் மாரடைப்பின் விளைவாக உயிரிழந்துள்ளனர்

43 839 Menschen starben 2023 in Deutschland infolge eines Herzinfarktes.

ஜேர்மனியிலுள்ள வயதுவந்தோரில் 53,7% பேருக்கு நீண்டகால நோய் அல்லது நீண்ட நேரம் நீடிக்கும் ஒரு உடல்நலப் பிரச்சனை உள்ளது இது மேலும் அதிகரிக்கும்.

53,7% der Erwachsenen in Deutschland haben eine chronische Krankheit oder ein lang andauerndes Gesundheitsproblem- Tendenz steigend.

ஜேர்மனியர்களில் 66% பேர் தினமும் இரண்டு முறை பற்களை துலக்குகிறார்கள், 8% பேர் தினமும் மூன்று முறை துலக்குகிறார்கள்.

66% der Deutschen putzen sich zweimal täglich die Zähne, 8% dreimal.

ஜேர்மனியில் 37 000 குழந்தைகளும் இளைஞர்களும் வகை 1 நீரிழிவு நோயுடன் வாழ்கிறார்கள். அவர்களின் குடல்பக்கக் சுரந்த இன்சுலின் உற்பத்தியை நிறுத்திக் கொண்டுள்ளது.

37 000 Kinder und Jugendliche leben in Deutschland mit Typ.1 Diabetes-ihre Bauchspeicheldrüse produziert kein Insulin mehr.

இளம் வயது மக்களில் 86% மற்றும் முதியோர்களில் 88% பேர் ஆண்டிற்கு ஒருமுறை பல் மருத்துவரிடம் பரிசோதைன செய்து கொள்கிறார்கள்

86% der jüngeren Erwachsenen und 88% der Senioren machen einmal jährlich eine zahnärztliche Untersuchung wahr.

## காரணம் யார்?...

1- சீனி இல்லா காலத்தில் சர்க்கரை நோய் வரவில்லை.
2- ஷாம்போ இல்லாத காலத்தில் தலைமுடி கொட்வில்லை.
3- வாகனங்கள் இல்லா காலத்தில் நோய்களே வருவதில்லை..
4- பொலித்தீன் பைகள் இல்லாத காலத்தில் புற்றுநோய் வரவில்லை.
5- சன்ப்ஃளவர் எண்ணெய் இல்லாத காலத்தில் மாரடைப்பு வரவில்லை.
6- மினரல் வாட்டர் இல்லாத காலத்தில் சிறுநீரகத்தில் கல் வரவில்லை.
7- அயேடின் உப்பு இல்லா காலத்தில் உடம்பில் தைராய்டு வரவில்லை.
8- டிவி, மொபைல் கணனி இல்லாத காலத்தில் எந்தக் குழந்தையும் கண்ணாடி போட்டதில்லை.
9- மிக்ஸர், கிரைன்டர் இல்லாத காலத்தில் சிசேரியன் மூலம் குழந்தை பிறக்கவில்லை.
10- குளிர்சாதனப் பெட்டி, பாஸ்ற் வூட் இல்லாத காலத்தில் எந்தக் குழந்தையும் குண்டாகவில்லை...

# சிறீலங்காவில் மழைவெள்ளம், மண்சரிவு புயல் அனர்த்தம் - 2025

உலகெங்கும் வருடாவருடம் இயற்கைப் பேரனத்தத்தால் லட்சக்கணக்கான மக்கள் பலியாகி வருவது இயற்கை மனிதனுக்குக் கொடுத்த தண்டனை என்றே கருதலாம். இயற்கையைப் பாழடிக்கும் மனிதருக்கு இப்படியான பேரழிவுகள் ஒரு படிப்பினையாகவே அமைகின்றது. மனித உயிர்கள் மட்டுமல்ல ஏனைய உயிரினங்களும் பெரும் அழிவைச் சந்தித்து வருகின்றன. பொருட் சேதங்கள் கோடிக்கணக்கில் அழிந்துபோக வருடாவருடம் கோடிக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம்பெயர்வையும் சந்தித்து வருகின்றனர்.2025 நவம்பர் இறுதி மற்றும் டிசம்பர் முற்பகுதியில் நமது இலங்கைத் திருநாட்டில் பாரிய அனர்த்தம் ஏற்பட்டு பெரும் அழிவைச் சந்தித்தது. இந்த அனர்த்தத்தால் உயிரிழந்த அத்தனை சொந்தங்களுக்கும் முதற்கண் அஞ்சலிகள். இன்னும் பலர் மண்ணில் புதையுண்டு காணா-மல் போயுள்ளனர். கோடிக்கணக்கான சொத்து, நில இழப்புக்கள் . பல ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்திருக்கிறார்கள் இன்னும் பல ஆயிரம் பேர் அகதிமுகாம்களில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். இப்படியாக இந்த வருட இறுதியில் இலங்கைவாழ் அனைத்து மக்களும் பெரும் துன்பத்தை சந்தித்திருப்பது அனைவரையும் கவலைகொள்ள வைத்துவிட்டது.

31.12.2025 வரை சில தகவல்களைப் பார்த்தால்....

- வீசிய புயலின் பெயர் ” டித்வா ”

- இலங்கை வரலாற்றில் இதுவரை காணாத பேரழிவு மொத்த நிலப்பரப்பில் 20 வீதம் மழைவெள்ளத்தால் மூழ்கியது.

-25 மாவட்டங்களிலும் 644 பேர் உயிரிழப்பு 184 பேர் காணாமல் போயுள்ளனர்.3.91.401 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 23 லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்.

- 25 மாவட்டங்களிலும் கண்டி மாட்டத்தில் அதிக உயிரிழப்பு 240பேர். பதுளை 90பேர், நுவரெலியா 89 பேர், குருநாகல் 61பேர், மாத்தளை 34பேர். மிகுதிப்பேர் ஏனைய மாவட்டங்களில் உயிரிழந்துள்ளனர்.

- குருநாகல் முதியோர் இல்லம் ஒன்றில் வசித்த 11 முதியவர்கள் பலி 14 பேர் மீட்கப்பட்டனர்.

- 690 முகாம்களில் 27.145 குடும்பங்களைச் சேர்ந்த 86.040 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

- மழை, வெள்ளம் மண்சரிவால் நாட்டின் வரைபடத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இனிப் புதிய வரைபடம் தயாரிக்கப்படவேண்டும்.

- 410 வைத்தியசாலைகள் பாதிப்பு 500 அதிகமான சுகாதார நிலையங்கள் சேதம்.

- நாடுமுழுவதும் 2.75.000 சிறுவர்கள் குழந்தைகள் பாதிப்பு.

- 13.700 வணிக நிறுவனங்கள் பாதிப்பு. பெரிய வாணிப நிலையங்கள் 437 பாதிப்பு

- மின்சாரசபைக்கு 20.000 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

- 6.164 வீடுகள் முழுமையாக அழிந்துள்ளன. 1.12.110 வீடுகள் பகுதிஅ-ளவில் சேதம் ஏற்பட்டிருக்கின்றன.

- கண்டிமாவட்டத்தில் ஒரு சிறிய கிராமம் காணாமல் போயுள்ளது. ஒரு குடும்பத்தில் அனைவரும் காணாமல் போயுள்ளனர்.

- மண்சரிவால் மலையகம் மிகவும் பாதிக்கப்பட்டது. தெருக்கள் கட்டிடங்கள், வீடுகள் பல அழிந்துள்ளன. இதனால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மலையக ரயில்ப்பாதைகள் மிகவும் பாதிப்பு. நாட்டிலுள்ள 7.332 பஸ்வண்டிச்சேவையில் 153 பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டன. புகை-யிரத திணைக்களத்துக்கு 400 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

- நாட்டின் அத்தனை குளங்களும் நிறைந்து வழிந்தன. சில குளங்கள் உடைப்பெடுத்துப் பல அனர்த்தம்.

- 30 லட்சம் கோழிகள் ஆயிரக்கணக்கான வீட்டு மிருகங்கள் மற்றும் கால்நடைகள் உயிரிழந்திருக்கின்றன.

- 40 பெரிய பாலங்கள் உடைந்தன. நூற்றுக்கணக்கான சிறிய பாலங்கள் அழிந்துள்ளன. இவற்றில் சில புனரமைக்க இன்னும் 1 □ 2 வருடங்கள் ஆகும்.

- 1500 வரையிலான பாடசாலைகள் பாதிப்பு 200 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. 35 மாணவர்கள் 10 ஆசிரியர்கள் இறந்தனர்.

- நாடுமுழுவதும் 38 எரிபொருள் நிலையங்கள் சேதம்.

- 2.73.000 ஏக்கர் நெல்வயல்கள் அழிந்துள்ளன. மீன்பிடித்தொழிலாளர்கள் லட்சக்கணக்கானோர் பாதிப்பு

- நாடுமுழுவதும் 30.000 படையினர் நிவாரணம் மற்றும் பாதுகாப்புப் பண-ிகளை மேற்கொண்டனர். அவசர காலத்தில் மின்சாரசபை ஊழியர்களின் சேவை பரராட்டப்பட்டது. அனைத்து மீட்புப் பணியாளர்களின் பெரும் பணி கள் பெரிதும் பாராட்டப்பட்டது.

- நாடுமுழுவதும் 379 விகாரைகள், 165 கோவில்கள், 63 தேவாலயங்கள், 157 மசூதிகளுக்குச் சேதம் ஏற்பட்டன.

- பேரழிவால் 25.000 மெட்ரிக் தொன் உப்பு உற்பத்தி முழுமையன அழிவு.

- நீர் வழங்கல் சபைக்கு 5 பில்லியன் ரூப நட்டம்.

- தொழில், நுண்தொழில், சிறுதொழில், நடுத்தரத்தொழில், பெரியதொழில் என 18.000 தொழில்கள் பாதிப்பு.

- 5 லட்சம் இளம்பெண்கள் பாதிப்பு 22.500 கர்ப்பவதிகளும் பாதிக்கப்பட்டனர்.

- 2.10.000 கோடி ரூபா பெறுமதியான சொத்து இழப்பு 2004ல் ஏற்பட்ட சுனாமிப் பேரலையைவிட 3 மடங்கு சொத்து இழப்பு அதிகம்.

- 700 கோடி ரூபா பொருளாதார இழப்பு. 340 மீள்கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- சுமார் 70 நாடுகள் இலங்கைக்கு உதவிபுரிந்துள்ளன. இதில் இந்தியாதான் முன்னிலை. விமானம், மீட்புப்பணி, நிவராணப்

பொருள், பாலங்கள் கட்டுதல் சுகாதார சேவை, ஆளணி என அனைத்திலும் முன்னின்று உழைத்தது. ஏனைய பல நாடுகள் நிதி பொருள் ஆளணி உதவிகள் செய்தன.

- உலக வங்கி, ஆசியவங்கி, ஐரோப்பிய யூனியன், ஐக்கியநாடுகள்சபை, உலகநாணயநிதியம் உட்பட உலகின் பல சபைகள், கம்பனிகள் நிதி, பொருளுதவிகளை வழங்கியுள்ளன. எதிர்காலத்திலும் வழங்கும்.

- உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள இலங்கையர்கள், தனவந்தர்கள் நிறுவனங்கள் தனியார்கள் பெரும் நிதி உதவிகளையும் பொருள் உதவிகளையும் வழங்கி வருகிறார்கள்.

- புலம்பெயர் இலங்கையர்கள் இந்தப் பேரவலத்திற்கு கோடி..கோடியாய் அள்ளிக்கொடுத்திருக்கிறார்கள் மிகவும் நல்ல மனிதநேயப் பணி. வாழ்த்துகள்!..

- குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தமது அறக்கட்டளை நிதியத்திலிருந்து 250 மில்லியன் ரூபாவை இலங்கை அரசுக்கு வழங்கித் தனது முன்மாதிரியைக் காட்டியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். வாழ்த்துகள் அம்மையாரே..

- இந்தப் பெரும் அனர்த்தங்களால் பல லட்சம் பேர் தொழில்களை இழந்திருக்கிறார்கள். இதனால் எதிர்காலத்தில் குடும்பங்களில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும்.

- இதைவிட தற்போது இப்பேரிடரால் பாதிக்கப்பட்ட பல ஆயிரம்பேர் மனநிலை பாதிக்கப்பட்டதால் இருதய நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அரசு அறிவித்தது.

- நாட்டின் உற்பத்தி, ஏற்றுமதி பெரிதும் பாதிப்பு இறக்குமதியில்தான் மக்கள் வாழவேண்டிய சூழல். வெளிநாடுகளை நம்பி எதிர்பார்த்து வாழவேண்டிய நிலை இதனால் பொருளாதார கஸ்டங்கள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

- 1மில்லியன் அதிகமான பிறப்பு, இறப்பு, திருமண பத்திரங்கள் மழை வெள்ளத்தால் அழிந்திருக்கின்றன.

- வீதி அதிகாரசபைக்கு 75 பில்லியன், மின்சாரசபைக்கு 20 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளன. சேதமடைந்த வீதிகளைத் திருத்த 6.900 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- பாதிக்கப்பட்ட குடும்பங்களில் 3லட்சம் குடும்பங்களுக்கு வீடுகள் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவாக 25.000-00 ரூபா சூறாவளியால் பாதிக்கப்பட்ட 4.95.000 குடும்பங்களுக்கு 25.000-00 ரூபா அரசால் வழங்கப்பட்டது

- 75 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர். கண்டி, பதுளையில் அதிகம்பேர்.

- மண்சரிவு வெள்ளப்பெருக்கால் 200 கிலோமீடர் கடற்கரைப் பிரதேசங்கள் கழிவுகளால் சூழல் மாசுபாடு ஏற்பட்டுள்ளது.

- நாட்டின் மொத்த விவசாய நிலப்பரப்பில் 76 வீதம் சுமார் 1.75.000ஹெட்டேயர் நிலம் முற்றாக அழிந்துள்ளன.

- நாட்டைக் கட்டியெழுப்பும் (Rebuilding) நிதியத்துக்கு 18.12.25வரை 4.263 மில்லியன் ரூபா கிடைத்ததாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

- 20.12.2025வரை 1362 பாடசாலைக்கள் மூடப்பட்டது. பல பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டாலும் இன்னும் 666 பாடசாலைகள் திறக்கப்படவில்லை.

- ”டித்வா” புயலால் இலங்கைக்கு சுமார் 4.000 மில்லியன் டொலர் நட்டம் என உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது.

- ஐக்கியநாடுகள் சபையின் தொழிலாளர் நிறுவனம் (I.L.O) 3.75.000 தொழிலாளர்கள் பாதித்தனர் என கணித்துள்ளது.

- தற்போதய ஆய்வின்படி நாட்டில் 5.000 அதிகமான வீடுகள் அதி பயங்கர வலயங்களில் காணப்படுவதாக கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

- புயல் மண்சரிவு நாடுமுழுவதும் 1.200 மேற்பட்ட பாரிய நிலச்சரிவுகள் பதிவாகியுள்ளன. கண்டி, நுவரெலியா, பதுளை, மாத்தளையில் மிக அதிகம்.

- இந்தப் பேரவலத்தால் சுகாதார கட்டமைப்புக்கு 21 பில் ரூபா நட்டம்.

- நாட்டின் ஜனாதிபதியின் அணுகுமுறைகள் வழிநடத்தல்கள் தற்போது சிறப்பாக இருப்பதாக பலரும் கணிப்புத்தெரிவிக்கின்றனர். ஒரு நாட்டு அரசனின் சிறந்த ஆட்சிதான் அந்த நாட்டுமக்களைச் செழிப்பாக வாழவைக்கும். ஆகவே நமது நாட்டிற்கும் தற்போது நல்லதோர் தலைவன் கிடைத்திருக்கிறான். சகல இன மக்களுக்கும் எதிர்காலம் நல்லதாய் அமையும் என நம்புவோம். நாமும் எம்மாலான உதவிகளைச் செய்திடுவோம்!..

# உலகவலம்....

(ஊடகவியலாளர்.... Shan Thavarajah - Swiss)

## வல்லவன் வகுத்ததே வாய்க்கால்...

இந்த வருடப் புத்தாண்டை அதிரடி ஆட்டத்துடன் தொடங்கி வைத்திருக்கிறது அமெரிக்கா. இப்படியும் நடக்குமா என்று உலகமே ஆச்சரியப்படும் வகையில் மத்திய அமெரிக்க நாடான வெனிசுவேலாவுக்குப் படைகளை அனுப்பி அந்த நாட்டின் ஜனாதிபதி மற்றும் அவரது துணைவியார் ஆகியோரைக் கடத்திச் சென்று சாதனை(?) புரிந்துள்ளார் டொனால்ட் ட்ரம்ப். நேற்று வரை நோபல் சமாதான விருதுக்கு ஆசைப்பட்டுக் கொண்டிருந்த, அந்த விருதைத் தனக்கு வழங்குமாறு வாய்விட்டுக் கேட்ட ட்ரம்ப், அந்த விருதைத் தனக்கு வழங்காமல் விட்ட நோபல் விருதுக் குழாமின் செயற்பாட்டுக்கு தனது நடவடிக்கை மூலம் நியாயம் சேர்த்திருக்கிறார். தனது சாகசச் செயற்பாடு தொடர்பில் தன்னைத்தானே புகழ்ந்து தள்ளும் ட்ரம்ப், தன்னை மற்றவர்களும் பாராட்டுவார்கள் என நினைத்திருந்த வேளை அது நடைபெறாமல் போ-னமை கண்டு சற்று மனம் சலிப்படையவே செய்திருப்பார் என நம்பலாம். விரல்விட்டு எண்ணத்தக்க அளவிலேயே அவரது நடவடிக்கைக்கு வரவேற்புக் கிடைத்துள்ளது. மறுபுறம், கிடைத்துள்ள கண்டனங்களோ ஏராளம்.

உலகில் அதிக வல்லமை மிக்க நாடுகளில் முதன்மையான இடத்தில் இருப்பது அமெரிக்கா என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பொருண்மிய அடிப்படையில் மாத்திரமன்றி படைத்துறை அடிப்படையிலும் அமெரிக்காவே முதன்மை இடத்தில் இருக்கிறது. ஆகையால் தனது சொல் கேட்டே உலக நாடுகள் அனைத்தும் - குறிப்பாக சிறிய நாடுகள் - நடந்து கொள்ள வேண்டும் என்று ட்ரம்ப் நினைப்பது சரியல்ல. ஒரு நாடு எத்தகைய பாதையில், எத்தகைய கொள்கையில் பயணிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கும் இடத்தில் அந்த நாட்டின் குடிமக்களும், ஆட்சியாளர்களுமே இருக்க முடியும். அயல் நாடுகள், முன்னேறிய நாடுகள் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை மாத்திரமே வழங்க முடியும்.

ஆனால், தனது கொல்லைப்புறம் என அமெரிக்கா கருதும் தென்னமெரிக்க நாடுகளில் தனது மனம் போன போக்கில் செயற்படும் ஒரு அயலுறவுக் கொள்கையையே அமெரிக்க நிர்வாகம் கடைப்பிடித்து வந்திருக்கிறது என்பது கடந்தகால வரலாறாக உள்ளது. எத்தனை தலையீடுகள், எத்தனை ஆட்சி மாற்றங்கள்? மக்களுக்கு எதிரான எத்தனை வன்முறைகள்? உலகின் சட்ட திட்டங்களைத் துச்சமென மதித்து, ஜனநாயக விழுமியங்களைக் காலடியில் போட்டு மிதித்து, ஐ.நா. உள்ளிட்ட உலகப் பொது மன்றங்களின் ஆலோசனைகளையும், கண்டனங்களையும் புறந்தள்ளி அமெரிக்கா மேற்கொண்ட அத்துமீறல்கள் எண்ணிலடங்கா. அந்த வரிசையில் இறுதிப் பலியாக வெனிசுவேலா உள்ளது. இந்த வரிசை இத்துடன் முடிந்துபோய் விடப் போவதில்லை என்பதை ட்ரம்பின் வார்த்தைகள் நிரூபித்து நிற்கின்றன. கொலம்பியா, கியூபா, மெக்சிகோ, கிறீன்லாந்து, ஈரான், நிக்கரகுவா என அவரது பட்டியல் நீளமாக உள்ளதை அவரே வெளிப்படையாகத் தெரிவித்து நிற்கிறார்.

வெனிசுவேலாவின் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தெரிவுகளே உள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாடுகளுக்கு இணங்கி நடப்பது அதிலொன்று. வார்த்தைகளில் கண்டனங்களை வெளியிட்டுக் கொண்டாலும், களச் சூழல் பெரும்பாலும் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டிய தெரிவு ஒன்றையே வெனிசுவேலா ஆட்சியாளர்களுக்கு விட்டு வைத்திருக்கின்றது. தமது நேச நாடுகள் தமது சார்பில் களமிறங்கும் என எதிர்பார்ப்பது சாத்தியமற்ற ஒன்று. வலிமையான கண்டனங்களைத் தெரிவிப்பதைத் தவிர அத்தகைய நாடுகளால் வேறு எதனையும் செய்ய முடியாது என்பதே யதார்த்தம்.

அமெரிக்க நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ள மடுரோ தம்பதியினர் தாங்கள் குற்றமற்றவர்கள் எனத் தெரிவித்துள்ள நிலையில் அவர்களது வழக்கு மார்ச் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நிக்கலஸ் மடுரோ தான் கடத்தி வரப்பட்ட வெனிசுவேலா ஜனாதிபதி எனவும், தான் ஒரு போர்க் குற்றவாளி எனவும் நீதிபதியிடம் தெரிவித்து உள்ளார். விக்கிலீக்ஸ் நிறுவனர் யூலியஸ் அஸாஞ்ஞே சார்பாக வாதாடிய பிரபல வழக்கறிஞர் பரி பொல்லக் அவர்களே மடுரோ சார்பில் முன்னிலையாகி உள்ளார். ஒரு நாட்டின் தலைவரான மடுரோ அதற்கேற்ற கௌரவத்துடன் நடத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளதையும் பார்க்க முடிந்தது.

அமெரிக்காவின் பாதுகாப்பு என்ற ஒற்றை அம்சத்தின் கீழ் தனது அடாவடித் தனங்களை நியாயப்படுத்திவிட அமெரிக்கா முயல்கின்றது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் செயல்களுக்கு மறைமுக ஆதரவை நல்கி நிற்கின்றன. இதுவே இனிவரும் உலகின் செல்நெறியா என்ற கேள்வியை எழுப்பி நிற்கிறது வெனிசுவேலாச் சம்பவம்.தனது அதிரடி நடவடிக்கைக்கான காரணத்தை ட்ரம்ப் ஒளித்து வைக்கவில்லை. வெனிசுவே லாவின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையிடுவதே தனது இலக்கு என்பதை அவர் வெளிப்படையாகவே ஏற்றுக் கொண்டுள்ளார்.

வெனிசுவேலா மீதான தாக்குதலுக்கு முன்பாகவே அமெரிக்காவின் எண்ணெய் நிறுவனங்களுடன் அவர் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியிருந்தார் எனச் செய்திகள் வெளியாகி இருந்தன. வெனிசுலோவுடன் நெருங்கிய உறவில் உள்ள ரஸ்யா, சீனா, கியூபா, ஈரான் உள்ளிட்ட நாடுக-ளுடனான உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை ட்ரம்ப் முன்வைத்துள்ளதாக மேலும் ஒரு செய்தி வெளியாகி உள்ளது. மடுரோவின் வெற்றிடத்தைத் தொடர்ந்து நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள துணை ஜனாதிபதி டெல்சி ரொட்ரிகஸ் தன்னுடைய சொல் கேட்டு நடந்து கொள்ளாதுவிட்டால் மதுரோவை விடவும் அதிக விலையைச் செலுத்தவேண்டி இருக்கும் எனவும் ட்ரம்ப் அவரை எச்சரித்து உள்ளதையும் பார்க்க முடிகிறது.

போதைப் பொருள்களுக்கு எதிரான நடவடிக்கை என ஆரம்பம் முதலே தெரிவித்து வந்த அமெரிக்கா, மடுரோ தம்பதியினரை அடாவடியாகக் கடத்தி வந்ததன் பின்னர் அது பற்றிப் பேசவே இல்லை என்பது நோக்கத்தக்கது. போதைப் பொருள் என்பதை தனது நடவடிக்கைகளுக்கு ஒரு போலிக் காரணமாகவே அமெரிக்கா பயன்படுத்தி வந்துள்ளது என்பது இதனால் வெளிச்சமாகி உள்ளது.




அமெரிக்க நடவடிக்கைக்கு உலகின் பெரும்பாலான நாடுகளும், பொது மக்களும் கண்டனத்தைத் தெரிவித்து இருந்தாலும் அமெரிக்காவில் இருந்து வெளிவந்த கண்டனங்கள் குறைவாகவே உள்ளன. ஒருசில அமெரிக்க அரசியல்வாதிகளைத் தவிர பெரிதாகக் கண்டனங்கள் எழவில்லை. அதேவேளை, அமெரிக்காவின் பெரும்பாலான ஊடகங்கள் அமெரிக்காவின் செயற்பாட்டை வரவேற்றும், நியாயப்படுத்தியும் உள்ளதைப் பார்க்க முடிகின்றது.

ஒரு நாட்டின் சட்டதிட்டங்களை மதிக்காமல், அந்த நாட்டின் இறைமையைத் துச்சமென மதித்து வல்லரசு நாடொன்று அத்துமீறி நடந்துள்ளதைப் பார்க்கும் போது, வல்லமை மிக்க ஏனைய நாடுகளும் இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கினால் உலகின் எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்வி எழுகின்றது.

கடந்த வருடத்தில் மாத்திரம் ஈரான், சிரியா, பலஸ்தீனம், லெபனான், யேமன், நைஜீரியா எனப் பல நாடுகளின் மீது அமெரிக்கா தாக்குதல்களைத் தொடுத்திருக்கிறது. ஐ.நா. சபையின் எந்தவித அங்கீகாரமும் இன்றி, உலகின் பொதுவான சட்டதிட்டங்களுக்கு முரணாகவே இந்தத் தாக்குதல்களை அமெரிக்கா மேற்கொண்டிருந்தது. தனது தாக்குதல்களை தேசத்தின் பாதுகாப்பு என்ற கோசத்தின் கீழ் மறைத்துக் கொண்டது. இதே போன்ற தாக்குதல்கள் நடப்பு வருடத்திலும் தொடரும் என்பதை மறைமுகமாகக் கூறியும் வருகின்றது.

உலக மாந்தர் விழித்துக் கொள்ள வேண்டிய தருணம் இது. இன்றில்லாது விட்டால் என்றுமே இல்லை என்பதைப் போன்று முற்போக்குச் சக்திகளும், சமாதான சகவாழ்வை விரும்பும் மக்களும் அணி திரள வேண்டிய தருணம் இது. அத்தகைய ஒரு அணி திரள்தல் நடைபெறாது விட்டால் மீண்டும் ஒரு இருண்ட யுகத்துக்குள் மனித குலம் செல்வதைத் தடுத்துவிட முடியாது என்பதே யதார்த்தம்.

மறுபுறம், ஐக்கிய நாடுகள் சபையின் வகிபாகம் தொடர்பில் மறு பரிசீலனை செய்வதற்கான அவசியம் எழுந்துள்ளது. இரண்டாம் உலகப் போரின் பின்னான சூழலில், உலகில் அமைதியை ஏற்படுத்த ஆரம்பிக்கப்பட்ட அந்த அமைப்பு இன்று பெரும்பாலும் செயலிழந்த ஒன்றாக மாறியிருக்கிறது. இன்றைய காலச் சூழலுக்கு ஏற்ப அந்த அமைப்பு வலுவூட்டப்பட வேண்டியது அவசியம். எண்ணம் நல்லதாக இருந்தாலும், அதை அடைவதற்கான வழி என்ன என்பதே தற்போது எம் முன் உள்ள பெறுமதியான கேள்வி?....

# Top - 10 - Sports News... விளையாட்டுச் செய்திகள்

**21ம் நூற்றாண்டின் உலக உதை பந்தாட்ட வரலாற்றில் சிறந்த வீரர்கள் 10 பேர்...**

01- Lionel Messi - ஆர்ஜன்தீனா
02- Cristiano Ronaldo - போத்துக்கல்
03- Thierry Henry - பிரான்ஸ்
04- Zinedine Zidane - பிரான்ஸ்
05- Luka Modric - குரோசியா
06- Kylian Mbappe - பிரான்ஸ்
07- Andres Iniesta - ஸ்பெயின்
08- Xavi Hernandez - ஸ்பெயின்
09- Ronaldo Nazario - பிரேசில்
10- Ronaldinho - பிரேசில்

**உலக உதைபந்தாட்ட வரலாற்றில் சிறந்த வீரர்கள் 10 பேர்...**

01- Lionel Messi - ஆஜர்ன்தீனா
02- Mesut Ozil - ஜேர்மனி
03- Diego Maradona- ஆஜர்ன்தீனா
04- Kevin de Bruyne - பெல்ஜியம்
05 - Kaka - பிரேசில்
06- Andres Iniesta - ஸ்பெயின்
07- June Roman - ஆஜர்ன்தீனா
08- David Silva - ஸ்பெயின்
09- Zico - பிரேசில்
10- Michel Platini - பிரான்ஸ்

## Top Goal Scorers in History

**உலக உதைபந்தாட்ட வரலாற்றில் 31.12.2025வரை அதிக கோல்களை அடித்துச் சாதனைபடைத்தவர்கள்**

01. Cristiano Ronaldo - போத்துக்கல் - 954 Goals
02. Lionel Messi - ஆஜர்ன்தீனா - 896
03. Pele - பிரேசில் - 762
04. Romario - பிரேசில் - 756
05. Ferenc Puskas - கங்கேரி - 725
06. Josef Bican - ஒஸ்திரியா - 722
07. Robert Lewandowski- போலந்து - 706
08. Jimmy Jones - வடஅயர்லாந்து - 673
09. Gerd Müller - ஜேர்மனி - 634
10. Jeo Bambrick - வடஅயர்லாந்து - 626








# ஈழத்து இசை மன்னருக்கு பிறந்தநாள் (16 டிசம்பர்) எம் பி பரமேஸ் மெல்லிசை மன்னன் - யேர்மனி இலங்கையின் முதல் இசைத்தட்டுக்கு முதலானவர்..

உலகில் எத்தனையோ கலைஞர்கள், அவதரிக்கிறார்கள். இவர்களில் பலர் இசைத்துறைக்கு அளப்பரிய சேவைகளைச் செய்து புகழ்படைக்கின்றனர். இந்த இசையால் மயங்காத உலகமே இல்லை என்றே கூறலாம். இந்த இசைகள் மூலம் எத்தனை ஆயிரம் நோயாளிகள்கூட மீண்டெழுந்து நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தார்கள் என்ற வரலாறுகளும் பல உண்டு.நமது இலங்கை தமிழிசையில் எத்தனையோ மேதாவிகள் இருந்திருக்கிறார்கள். இப்பொழுதும் இத்துறைக்கு அளப்பெரிய பணிகளைச் செய்துவருபவர்களையும் நாம் காண்கின்றோம். நம் சமூகத்துக்குத் தன்னாலான நற்பணிகளைச் செய்து மக்கள் மத்தியில் பெருமதிப்புப் பெறுபவர்களை அவர்கள் வாழும் பொழு-துகளில் அவர்களை வாழ்த்திப் பாராட்டி வாழவைப்பதுதான் சிறப்பு.

ஈழத்து மெல்லிசை மன்னன் என்று அறியப்பட்டவரும் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக தமிழ் இசைத்துறையில் தன்னை அர்ப்பணித்தவரும் இலங்கையில் முதல் இசைத்தட்டை அறிமுகம்செய்து வெளியிட்டவருமான திரு பீதாம்பரம் பரமேஸ் அவர்களுக்கு 16 டிசம்பர் அன்று பிறந்தநாள். நோய்நொடிகள் இல்லாமல் இன்னும் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துவோம். இவர்பற்றிய சிறுகுறிப்பைப் பார்ப்போம்..

கவிஞர், பாடகர், பாடலாசிரியர்,இசையமைப்பாளர், தமிழார்வலர் எனப் பல்துறை வல்லவர். தனது 16 வயதில் பாடசாலைக் காலத்திலேயே பாட-கராக அறிமுகமானவர்.பரமேஸ்- கோணேஸ் என்னும் இசைக்குழுவை தனது சகோதரன் கோணேஸ் அவர்களுடன் ஆரம்பித்தார். சகோதரன் கோணேஸ் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக கனடாவில் தமிழ்வானொலி ஒன்றை நடாத்திக் கொண்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.இவர் சாவகச்சேரியில் பிறந்தாலும் சிறுவயது தொடக்கம் யேர்மனிக்கு (1985ம் ஆண்டு) வரும்வரை திருகோணமலையில்தான் வாழ்ந்திருக்கிறார்.தந்தையார் ஆசிரியர், கல்லூரி வித்தியாதிகாரி, பிள்ளைப்பாட்டுக் கவி ஞர் எழுத்தாளர் எனப்பல்துறை வித்தகர் அமரர் விபுல பீதாம்பரன். தாயார் பொற்கொடிநாயகி. பெரிய குடும்பம்.

1968ம் ஆண்டுமுதல் இற்றைவரை தாயகத்திலும் வெளிநாடுக-ளிலும் சுமார் 2.000க்கும் மேற்பட்ட தொடர் இசைத்தென்றல் நிகழ்வுகளை இலங்கை எங்கும் நடாத்தியவர். தான், மனைவி, பிள்ளைகள் என அனை-வரும் தமிழ்க்கலைக்கு, இசைக்கும் ஆற்றிய பங்கு தமிழர் வரலாற்றில் பதியப்படுகின்றது. இலங்கை இசைத்தட்டு வரலாற்றில் முதன்முதலாக இசைத்தட்டு ஒன்றை வெளியீடு செய்த சாதனைக்குச் சொந்தக்காரன்.

யேர்மனிக்கு வந்தகாலம் முதல் (1985) இற்றைவரை நூற்றுக்கணக்கான மேடை நிகழ்ச்சிகளைச் செய்திருப்பதுடன் தனது வாரிசுகளையும் இசைத்துறையில் புகழ்படைக்க வைத்திருக்கிறார் இவரது அன்பு மனைவி யும் பிரபல பாடகி. இலங்கையில் இசைமேடைகளில் பாடகியாக அறிமுகமாகி பின்னர் காதலாகி கலியாணத்தில் முடிந்து ஆறு பிள்ளைகளுக்கும் அம்மாவாகியவர்.இப்போது எம்மோடு இல்லை என்பது ஒருபுறும் பெரும் கவலை.இவரது மகளான திருமதி பிரபாலினி பிரபா-கரன் அவர்களும் ஒரு பாடகர், இசையமைப்பாளராக இன்று உலகெங்கும் வலம்வருகின்றார். உலகத்தமிழர் வரலாற்றில் முதல் பெண் இசையமைப்பாளர் என்ற விருதுக்கும் இவர்தான் சொந்தக்காரர். தந்தை மகற்காற்றும் பணி மிகச்சிறப்பாகச் செய்திருக்கிறார் நண்பர் திரு பரமேஸ் அவர்கள். (பிரபால-ினி அவர்களின் கலை, இசைத்துறை பற்றிய விபரங்கள் ஏற்கனவே எமது முகநூலில் பதிவாகிவிட்டது)

"உனக்குத் தெரியுமா நான் உன்னை அழைப்பது" என்ற முதலாவது தனது பாடல் மூலம் தனக்குத் தெரியாத தமிழ்-சிங்களக் கிராமங்கள் எங்கும் கலைஞர்கள், மக்களைக் கவர்ந்த கலைஞனாகப் பவனிவந்த காலம் பொன்னான நாட்களாகும். தமிழர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களையும் தனது இசையால் கவர்ந்து தமிழ்-சிங்கள நல்லுறவுக்கும் இந்த இசையால் வழிவகுத்தவர் என்ற பெருமைக்குமுரியவர் இவர் என்றால் சிறப்புத்தான்.இவரின் திறமையை அன்று கண்டுகொண்ட கலைரசு சொர்ணலிங்கம் அவர்களால் 1972 ஆண்டில்"ஈழத்து மெல்லிசை மன்னன்" என்றும் பண்டிதமணி திருநெல்வேலி கணபதிப்பிள்ளை அவர்களால்"இயலிசைக் கலைஞன்" என்றும் பட்டங்கள் சூட்டி அன்றைய நாட்களில் கௌரவம் பெற்றார்.

தமிழ்நாட்டில் மாபெரும் இசையமைப்பாளர் இளையராஜா முதல்கொண்டு ஈழத்து புகழ் அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் உள்ளிட்ட இலங்கை, இந்திய வானொலிகள், தொலைக்காட்சிகளில் இவரது நேர்காணல்களும் இவரது இசைப் படைப்புகளும் இன்றும் வெளிவந்துகொண்டிருப்பது மேலும் இவரது சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன.சென்றமாதம் கூட தமிழ்நாட்டுக் கவிஞர் சிநேகன் இவரைச் சென்னைக்கு அழைத்து "இசைமாமணி"பட்டம் வழங்கிக் கௌரவித்ததுடன் இவரது மகள் பிரபாலினிக்கும்"இசைமாமணி"பட்டம் வழங்கிக் கௌரவித்துச் சிறப்பித்தார்கள்.

இசையுலகின் மாமேதையான நண்பர் பரமேஸ் அவர்களின் பல இசை நிகழ்வுகளை அன்றைய காலங்களில் (1968 - 1970) நான் படிக்கும் காலம் இளைஞன். அப்போது எமது வாலிப வட்டத்தினருடன் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம், திறந்தவெளி அரங்கு, அரியாலை விளையாட்டரங்கு போன்ற பல இடங்களில்"பரமேஸ் கோணேஸ்" இசைநிகழ்வுகளை ரசித்து துள்ளிக்குதித்து நடனமாடி மகிழ்ந்த சம்பவங்கள் இன்று நினைத்தால் இளமைக்கால நினைவுகள் என்றும் பசுமையானவையே.மிக நீண்ட காலமா எமது மண் சஞ்சிகையுடனும் தொடர்பில் இருந்து வந்திருக்கிறார். ஒரு வாசகராக, ஆலோசகராக எமது சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உற்ற நட்போடு வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த ஒப்பற்ற கலைஞன் நோய் நொடிகள் இல்லாமல் நீடுழிவாழ இன்றைய அவரது பிறந்தநாளில் மண் சஞ்சிகையின் வாசகர்கள், எழுத்தாளர்களோடு வாழ்த்தி மகிழ்கின்றோம்!.. **-ஆசிரியர்-**

# முன்னாள் அமைச்சர் மறைந்தார்...
# செல்லையா இராசதுரை



27.09.1927 - 02.12.2025

இலங்கைத் தமிழருசுக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்தவர். இலங்கையின் முன்னாள் அமைச்சர். மட்டக்களப்பு மாநகர-சபையின் முதலாவது மேஜர்,(1967) மட்டக்களப்பின் முதலாவது பாராளுமன்ற உறப்பினர். (1956 - 1989) சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர், ”சுதந்திரன் ”பத்திரிகையின் ஆசிரியர்குழு உறுப்பினர், சமூகச்செயற்பாட்டாளர் என அறியப்பட்ட செல்லையா இராசதுரை அவர்கள் தனது 98 வயதில் காலமான செய்தி தமிழுலகத்திற்குப் பேரிழப்பாகப் பதிவாகியுள்ளது.

இவர்பற்றிய சிறு குறிப்பைப் பார்ப்போம்..

பிறப்பு- மட்டக்களப்பு 27.09.1927 இறப்பு 02.12.2025

அரசியல்- 1967 - 1979 தமிழரசுக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர்.1979ம் ஆண்டு ஜே.ஆர் ஜெயவர்தனா அரசில் இணைந்தார்.

- 1967 மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வராகத் தெரிவானார். 1956 - 1989வரை 6 தடகைள் மட்டக்களப்பு எம் பியாகப் பதவி வகித்தார்.(36 வருடங்கள்)

- 1979 ம்ஆண்டு ஜே.ஆர்.அரசில் இவர் இந்துசமய, பண்பாடு, தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சு பதவி வகித்தார்.

- 1989 மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பதவி வகித்தார். 5 வருடங்களின் பின் ஓய்வுபெற்று மலேசியாவிலும் தமிழ்நாட்டிலும் நீண்டகாலம் வாழ்தார்.

- சிறந்த பேச்சாற்றலின் திறமையால் ”சொல்லின் செல்வர்” என்று விழிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

செல்லையா இராசதுரை: தமிழரசுக்கட்சியின் "நிராகரிக்கப்பட்ட" மகுடமும் வரலாற்றுத் தவறுகளும்

ஈழத்து தமிழ் அரசியலில் மட்டக்களப்பு மண் ஈன்றெடுத்த தனித்துவமான ஆளுமைகளில் செல்லையா இராசதுரை முக்கியமானவர். தந்தை செல்வநாயகத்தின் நம்பிக்கைக்குரிய தளபதியாகவும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் (ITAK) அசைக்க முடியாத தூணாகவும் விளங்கியவர் அவர். ஆனால், தமிழ் மிதவாத அரசியலின் தலைமைத்துவம் கைமாறிய காலகட்டத்தில், தகுதியும் தியாகமும் இருந்தும் அவர் ஓரங்கட்டப்பட்ட விதம் ஈழத் தமிழ் அரசியலின் திசையையே மாற்றிய ஒரு வரலாற்றுத் துயரமாகும்.

செல்லையா இராசதுரை அவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே தமிழரசுக்கட்சியின் கொள்கைகளுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். 1956 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட அவர், கிழக்கின் குரலாக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தமிழினத்தின் உரி மைக் குரலாகவும் ஒலித்தார்.

தந்தை செல்வா உயிருடன் இருந்த காலத்தில், அவருக்கு மிக நெருக்கமானவராக இராசதுரை விளங்கினார். வடக்கிற்கு அப்பால், கிழக்கிலும் தமிழ்த் தேசிய உணர்வை ஆழமாக விதைத்ததில் இராசதுரையின் பங்கு அளப்பரியது. அவர் வெறும் அரசியல்வாதி மட்டுமல்ல, சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் மற்றும் சிந்தனையாளர்.

தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின்னர் (1977), இயல்பாகவே அந்தத் தலைமைத்துவ இடத்தை நிரப்பக்கூடிய தகுதியும், சிரேஷ்டத்துவமும் (Seniority) செல்லையா இராசதுரைக்கு இருந்தது. செல்வாவிற்குப் பின்னர் கட்சியின் மூத்த தலைவராக அவரே விளங்கினார்.

இருப்பினும், அக்காலகட்டத்தில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மேற்கொண்ட அரசியல் காய்நகர்த்தல்கள், இராசதுரையைத் தலைமைத்துவப் போட்டியிலிருந்து வெளியேற்றியது. யாழ்ப்பாண மையவாதத் தலைமைத்துவம் (Jaffna-centric leadership)கிழக்கின் தலைவரைத் தமது தேசியத் தலைவராக ஏற்கத் தயங்கியது என்ற விமர்சனம் இன்றும் உண்டு. அமிர்தலிங்கம் உள்ளிட்ட வடபுலத் தலைவர்கள், இராசதுரையின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தி, அவரை இரண்டாம் நிலைக்குத் தள்ளினர்.(அஸ்ரப்புக்கும் இதுவே நடந்தது ) இது தனிப்பட்ட ஒருவருக்கு இழைக்கப்பட்ட அநீதியாக அல்லாமல், கிழக்கு மாகாணத்தின் அரசியல் முக்கியத்துவத்தைச் சிறுமைப்படுத்தும் செயலாகவே பார்க்கப்பட்டது.

செல்லையா இராசதுரை ஓரங்கட்டப்பட்டமை, தமிழரசுக்கட்சி செய்த மிகப்பெரிய வரலாற்றுத் தவறுகளில் (Historical Blunder) ஒன்றாகும். அவரது பிற்கால அரசியல் விமர்சனத்துக்குரியது என்றாலும் அவர் இளைஞர்களை உசுப்பேத்தி தனது எதிரிகளை கொலை செய்யும்படி தூ ண்டவில்லை.இந்திய அரசுடன் நெருங்கிய தொடர்பு இருந்த போதிலும் ,இயக்கங்களை வளரவிடாதீர்கள் ,பிரித்தாளுங்கள் மோத விடுங்கள் என்று இந்திய உளவு துறையினருக்கு வேண்டுகோள் விடுக்கவில்லை. (இது இராசதுரை அவர்களின் இறப்பை முன்னிட்டு எழுதும் குறிப்பு . தமிழரசு கட்சி தந்தை செல்வாவின் மறைவோடு மரணித்து விட்டது)



# இளைஞர்களிடையே பரவி வரும் சோம்பேறித்தனம்,...

ஈழத்தமிழர்களின் கல்வி மற்றும் கலாச்சார மையமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம், இன்று ஒரு பாரிய சமூகச் சரிவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, யாழ் இளைஞர்களிடையே பரவி வரும் சோம்பேறித்தனமும், அதற்குத் தீனி போடும் புலம்பெயர் உறவுகளின் "முட்டாள்தனமான" பண உதவியும் ஒரு தலைமுறையையே அழிவின் விளிம்பிற்குத் தள்ளிக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தின் வீதிகளில் இன்று வேலைக்கு ஆட்கள் தேவை என்ற விளம்பரப் பலகைகளை சாதாரணமாகக் காணலாம். ஆனால், எங்கு பார்த்தாலும் இளைஞர்கள் "வேலை இல்லை" என்று புலம்பிக் கொண்டு வெட்டியாகத் திரிவதே யதார்த்தமாக உள்ளது.

இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகங்களில் சிங்கள இளைஞர்களும், சூப்பர் மார்க்கெட்கள் மற்றும் புடவைக்கடைகளில் மலையக இளைஞர் யுவதிகளும் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்கள்.வெளிமாவட்ட இளைஞர்கள் வந்து யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உள்ளூர் இளைஞர்களோ, படித்து முடித்துவிட்டு எவ்வித இலக்கும் இன்றித் திரிகிறார்கள்.

ஆட்டோ ஓட்டலாமே? துணிக்கடையில் வேலை செய்யலாமே?" என்று கேட்டால், "அது எங்கள் தகுதிக்குக் குறைவானது" என்ற பதில் வருகிறது. வெளிநாட்டில் இருக்கும் உறவினர்களின் கௌரவம் பாதிக்கப்படுமாம்!

வெளிநாடுகளில் கௌரவம் பார்க்கும் இந்த உறவினர்களில் சிலர், அங்குள்ள அரசுகளை ஏமாற்றி, உடல் உழைப்பை வருத்தி, இரவு பகலாகக் கஷ்டப்பட்டுத்தான் பணம் சம்பாதிக்கிறார்கள்.

சிலர் மதுக்கடைகளிலும், சிகரெட் விற்பனை நிலையங்களிலும் வேலை செய்து, அடுத்தவர் உடல்நலனைச் சீரழிக்கும் தொழில்கள் மூலம் பணம் சம்பாதித்து இங்கே அனுப்புகிறார்கள்.

அங்கே அவர்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணத்தைப் பெற்றுக்கொண்டு, இங்கே கையில் லேட்டஸ்ட் iPhone பல இலட்சம் ரூபாய் பெறுமதியான KTM மோட்டார் சைக்கிள் என ஆடம்பரமாகத் திரியும் இளைஞர்கள், உண்மையில் உழைக்கத் தயங்கும் கோழைகளாகவே இருக்கிறார்கள்.

உழைக்காமல் கைக்கு வரும் பணம், இயல்பாகவே இளைஞர்களை போதை மற்றும் மதுப் பழக்கத்திற்கு அடிமையாக்குகிறது.அதிகப்படியான பணப்புழக்கம், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் பயன்பாட்டை அதிகரித்துள்ளது.

வெளிநாட்டிலிருந்து வரும் பணம் இவர்களை அறிவார்ந்தவர்களாக மாற்றாமல், சமூகத்திற்குப் பாரமான “காவாலிகளாக“ மாற்றிக் கொண்டிருக்கிறது.

யாழ் இளைஞர்களை வேலைக்கு அமர்த்தினால், அவர்கள் சரியாக வேலை செய்வதில்லை, சம்பளம் அதிகமாகக் கேட்கிறார்கள், சிறு வேலைகளைச் சொன்னால் முறைக்கிறார்கள் போன்ற காரணங்களால், யாழ்ப்பாணத்து முதலாளிகளே இன்று பிற மாவட்ட இளைஞர்களையே விரும்புகின்றனர்.

வெளிநாட்டு உறவினர்களின் இந்த பண உதவி என்பது நிரந்தரமானது அல்ல. இந்தப் பரம்பரையுடன் இது முடிந்துவிடும். அடுத்த தலைமுறைப் புலம்பெயர் தமிழர்கள் தங்களின் சொந்தப் பிள்ளைகளுக்கே பணம் சேமிப்பார்களே தவிர, இங்கே இருக்கும் தம்பிக்கோ, மச்சானுக்கோ ஒரு சதம் கூடத் தரமாட்டார்கள்.

அப்பொழுது, இன்று கஷ்டப்பட்டு வேலை செய்யும் வெளிமாவட்ட இளைஞர்கள், யாழ்ப்பாணத்தின் அனைத்து வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்களாக மாறியிருப்பார்கள்.

இன்று ”கௌரவம்” பார்த்த யாழ் இளைஞர்கள், அன்று பிற இனத்தவர்களிடம் கையேந்தி நிற்கும் அல்லது கூலி வேலை செய்யும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

இளைஞர்களே, வேலை என்பது இழிவு அல்ல. உழைக்காமல் உண்பதுதான் பேரிழிவு. எந்த வேலையாயினும் அதனை அர்ப்பணிப்புடன் செய்யுங்கள்.

புலம்பெயர் உறவுகளே! பணத்தை அனுப்பி உங்கள் உறவுகளைச் சோம்பேறிகளாக மாற்றாதீர்கள். அவர்களுக்குத் தூண்டிலைத் தந்து மீன்பிடிக்கக் கற்றுக் கொடுங்கள் , மாறாகத் தினமும் மீனைத் தந்து அவர்களை முடமாக்காதீர்கள்.

நமது பொருளாதாரம் நமது கைகளை விட்டுப் போய்க்கொண்டிருக்கிறது. விழித்துக் கொள்ளாவிட்டால், வரலாறு நம்மைச் சோம்பேறிகள் என்றுதான் பதிவு செய்யும்!.....

# இயற்கை அதன் இறுதி முடிவை எடுக்கும்...

யோகா - யேர்மனி

பிரபல சீன எழுத்தாளரான Daxin Zhou எழுதிய *Night Falls Slowly* எனும் அவரது நூலிலிருந்து அவர் முதுமையை நோக்கி செல்பவர்களுக்கு எழுதிய அவரது அரிய கருத்துக்களை இங்கு ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொ ழியாகம் செய்துள்ளேன்.

நமது வாழ்க்கையின் இறுதி ஆண்டுகளில், நாம் அமைதியாக எம் இருண்ட பகுதிக்கு நுழைவதற்கு நமது வாழ்க்கைப் பயணத்தில் ஆறு "உண்மைகளை நாம் நன்கு அறிந்துகொண்டு ஏற்றுக்கொள்வது அவசியம். இரவு மிக மெதுவாகவே இருளாகிறது

60 வயதிலிருந்து, வாழ்க்கையின் பின் பகுதி ஆரம்பிக்கிறது. இரவு முழுமை யாக இருளாவதற்கு முன், நாங்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய சில உண்மைகள் உள்ளன. இவற்றை ஏற்று ஞாபகத்தில் வைத்திருந்தால் எம்மை நாமே மனதளவில் இறுதி யாத்திரைக்கு ஆயத்தப்படுத்தி இறப்பின் பயத்திலிருந்து மீள உதவியாக இருக்கும்.

1வது உண்மை

உங்களுக்கு உண்மையில் நெருக்கமானவர்களாக இப்போது ஒருசிலர் மட்டுமே இருப்பார்கள். உங்களைவிட வயதான பலர் (பெற்றோர், பேரன்-பேத்தி போன்றோர்) ஏற்கெனவே இறந்திருப்பார்கள். உங்கள் வயதினர் தங்கள் சொந்த பிரச்சினைகளில் மூழ்கியிருப்பார்கள். இளைய தலைமுறையினர் தங்கள் சொந்த எதிர்கால நினைவு-களில் மும்முரமாக ஈடுபட்டிருப்பார்கள். உங்கள் மனைவி கூட உங்களுக்கு முன்பே காலமாகியிருக்கலாம். மிச்சமாக இருக்கப் போவது நீண்ட, வெறுமையான நாட்களே. தனியாக வாழவும் தனி மையைத் தாங்கவும் நீங்கள் எப்படியாவது பழகிக்கொள்ள வேண்டும்.

2வது உண்மை:

உங்கள் சமூகம் உங்கள்மேல் வைத்திருக்கும் கவனம் குறையும்.நீங்கள் ஒரு காலத்தில் எவ்வளவு பெயர்போன தொழிலதிபராகவோ பதவி வகுத்தவராகவோ இருந்தாலும், நாம் எல்லோரும் கிழவர்-கிழவிகளாகவே பார்க்கப் படுவோம். எல்லாரும் கவனிக்கும் ஆள் இனி நீங்கள் இல்லை. நீங்கள் மூலையில் அமைதியாக நின்று இளைய தலைமுறையின் உற்சாகத்தையும் வெற்றியையும் பாராட்டக் கற்றுக்கொள்ள வேணும் (பொறாமை அல்லது வெறுப்பு கொஞ்சங்கூட இருக்கக்கக்கூடாது)

3வது உண்மை:

இப்போது உங்கள் வாழ்க்கையில் எதிர்பாராமல் கவலையை தரும் விடயங்கள் அதிகரிக்கும்.எலும்புகள் உடையலாம் வலுவிழக்கலாம், இருதய நோய், மூளை மாறாட்டம், புற்றுநோய் - நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இவை எல்லாம் திடீரென்று உங்களை அரவணைக்கலாம். நோய்களுடன் வாழ அல்லது அவற்றை தவிர்க்க முடியாதவையாக ஏற்றுக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். முதுமையில் நோயற்ற வாழ்வு என்பது அரிதிலும் அரிதானது என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். சந்தோசமான விடயங்களை சிந்திப்பதும் முடியுமென்றால் உடற்பயிற்சி செய்வதும்

4வது உண்மை

உங்கள் குழந்தைப் பருவத்தைப் போலவே, நீங்கள் மீண்டும் படுக்கையிலேயே இருக்க நேரிடும். நாங்கள் பிறந்தபோது, எம் தாய்மார்கள் படுக்கையிலேயே நம்மைப் பராமரித்தனர். வாழ்நாள் முழுவதும் போராடி பல கஷ்டங்களை அனுபவித்தபிறகு, நாங்கள் எல்லாம் தொடங்கிய இடத்திற்கே திரும்புகிறோம் - அதாவது படுக்கையிலேயே - மற்றவர்களின் பராமரிப்பிற்காகக் காத்திருக்கிறோம். ஆனால் பிறக்கும் போது போலில்லாமல், எம் தாய்மார்கள் செய்தது போல் நம்மைப் பராமரிக்க அன்புக்குரியவர்கள் இனி நமக்கு இல்லாமல் போய்விடலாம். அப்படி எவராவது இருந்தாலும், அவர்கள் எம்மை அவ்வளவு நெருக்கமாக தாயன்புடன் கவனிப்பார்களோ என்பது கேள்விக்குறியே. அநேகமாக, வெளிப்புறமாக சிரித்து பழகினா லும், எப்படியும் கடமையை செய்து முடிந்ததும் எப்போது வீடுபோய் சேரு வோம் என்னும் எண்ணத்தில் இருக்கும் ஒரு பராமரிப்பாளரே (elderly person care) எமதருகில் இருப்பவராக இருப்பார். எப்படி இருப்பினும் அவருடன் அன்பாகவும் நன்றியுணர்வுடனும் பழகுங்கள்.

5வது உண்மை

உங்களை ஏமாற்ற முயற்சிப்பவர்களே அதிகம் இருப்பர்.மோசடி பேர்வழிகள் வயதானவர்களிடம் பெரும்பாலும் சேமிப்பு இருப்பதை அறிவார்கள், அத்துடன் அவர்கள் உங்கள் சொத்தை பெறுவதற்காக எல்லாவகை தந்திரத்தையும் பயன்படுத்துவார்கள் - தொலைபேசி (telephone) அழைப்புகள், குறுஞ்செய்திகள் (SMS), மின்னஞ்சல்கள் (email), இலவச மாதிரிகள், அதிசய சிகிச்சைகள், ”ஆசீர்வதிக்கப்பட்ட” பொருட்கள், நீண்ட ஆயுள் மாத்திரைகள். என்பவை மிக சாதாரணமாக முதியவரை வந்தடைபவை. விழிப்புடனும் ஆற்றலுடனும் விடயங்களை கையாளவேண்டியது அவசியம்.

6வது உண்மை

உங்களுக்கு நெருங்கிய நம்பிக்கைக்குரியவர் இருந்தால் அவருடன் உண்மை அன்புடன் பழகுங்கள்.அவர்களுடன் ஆறுதலாகவும் அன்பாகவும் பேசுங்கள். குறிப்பாக உங்களை முற்றிலும் அறிந்தவர்கள உங்கள் கடைசி காலத்தின் கடை-சி ஆதாரம். 60 வயதிற்குப் பிறகு, குழந்தைகளின் ஆதரவு இனி நம்பகமானது அல்ல - அவர்களுக்கும் சொந்த குடும்பங்கள் இருக்கும். கடைசி யில், ஒரு-வரையொருவர் சார்ந்திருப்பது வயதான கணவன்.'.மனைவி மட்டுமே. அதி கூடிய வயதில், துரோகம் செய்ய விரும்புவது மிக குறைவு - நாங்கள் ஒருவரையொருவர் இழந்துவிடப்போகிறோம் என்ற பயமே அதிகம் இருக்கும்.உங்கள் சமூகத்தை ஆதிக்கம் செலுத்தவோ அல்லது உங்கள் குழந்தைகளின் விவகாரங்களைக் கட்டுப்படுத்தவோ முயற்சிக்காதீர்கள். ஆணவமாக இருக்காதீர்கள் அல்லது மற்றவர்களை இழிவு படுத்தி பேசாதீர்கள் - இதுபோன்ற நடத்தை உங்களை மட்டுமே பாதிக்கும். முதுமை யில், நாங்கள் மற்றவர்களை மரியாதையாக நடத்த கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கையின் இந்த இறுதிக் கட்டத்தை புரிந்துணர்வு, அமைதி, ஆன்மீகம் ஆகியவற்றுடன் வாழ ஆயத்தப்படுத்த வேண்டும்.அன்பான நண்பர்களே!..

இயற்கை அதன் இறுதி முடிவை எடுக்கட்டும், அமைதியாக இருங்கள்...

## 2025 நவம்பர், டிசம்பர் மாதங்களில் இலங்கையில் ஏற்பட்ட மழைவெள்ளம் புயல், மண்சரிவு அனர்த்தங்களுக்கு நிதி உதவி வழங்கிய மனிதநேய உள்ளங்களுக்குப் பெரு நன்றிகள்... இதோ விபரம்....

வரவுகள்:-

500-00 -திரு ஜெயம் தங்கராசா-ஜெயமலர் குடும்பம் - Nietherland
500-00 -திரு சிவராசா-இராஜேஸ்வரி +பிள்ளைகள்+பேரப்பிள்ளைகள்- Duisburg
400-00 -திரு இரத்தினசிங்கம்-றோகினி குடும்பம் - Duisburg
400-00 -திரு சின்னையா வேலும்மயிலும் குடும்பம் - Westendorf
330-00 -திரு ஏகானந்தராசா-கலைவாணி குடும்பம் - 130-00 - Weeze
-மகள் பிரிந்தாவனி – Frankfurt - 100-00
-பேரப்பிள்ளை சந்தனா தினுஜன் Göttinger - 100-00
200-00 -திரு சி சிவகாந்த் + திரு வி கீர்த்திக் + திரு Orkan - Krefeld Company – Kollektiv
200-00 -திருஞானசம்பந்தர்-வசந்தராணி குடும்பம் - Everswinkel
200-00 -திரு மகாலிங்கம் - டொறின் குடும்பம் - Oberhausen
164-39 -திரு ப நிசாகரன் (109-60) + ப பாஸ்கரன்(54-79)குடும்பம் - London
150-00 -திரு பத்மன் பசுபதிராசா குடும்பம் - Wuppertal
100-00 -திரு பொன்னையா பகீர்தரன் குடும்பம் - Duisburg
100-00 -திரு எஸ் கோபால் குடும்பம் - Soest
100-00 -திரு விஜயசிங்கம் கீதன் குடும்பம் - Oberhausen
100-00 -திரு அன்பழகள் சந்திரா குடும்பம் - Denmark
100-00 -திரு மூர்த்தி பிரியா குடும்பம் - Swissland
100-00 -திரு மன்மதன் பிரியா குடும்பம் - Essen
100-00 -திரு பசுபதி சௌந்தரராசா குடும்பம் - Duisburg
100-00 -திரு றஞ்சன் ராஜ்மோகன் குடும்பம் - Oberhausen
100-00 -திரு குட்டியர் இராமசாமி குடும்பம் - Haltern
100-00 -திரு சு விக்னேஸ்வரன் குடும்பம் - Essen
55-87 -திரு பன்னீர்ச்செல்வன் - யூலியாகுடும்பம் - London
55-00 -செல்வி சாமினா சிவதாசன் குடும்பம் Essen

50-00 -திரு கிருஸ்ணன் அற்புதராசா குடும்பம் - Soest
50-00 -திரு இரா ஞானசம்பந்தன் குடும்பம் - Ratingen
50-00 -திரு செ. சிவஞானம் குடும்பம் - Goch
50-00 -திரு சி சிவவினோபன் குடும்பம் - Borken
50.00 -திரு சி சிவானந்தன் குடும்பம் - Dortmund
50-00 -திரு எஸ் சிவஞானம் குடும்பம் - London
50-00 -திருமதி ஜெயா நடேசன் குடும்பம் - Königswinter
50-00 -திருமதி கெங்கா ஸ்ரான்லி குடும்பம் - Erfstadt
50-00 -திருமதி கலாதேவி மகேந்திரம் - Oberhausen
50-00 -திருமதி மேனகா நேசராசா - Oberhausen
50-00 -திருமதி அஜந்தா தர்மானந்தன் - Oberhausen
50-00 -ஓர் அன்பர் - Köln
30-00 -திரு அன்ரனி வரதராசன் குடும்பம் - Düsseldorf
25-00 -திருமதி இந்திரா மகாலிங்கம் - Werne
20-00 -திரு தி தேவானந்தா குடும்பம் - Mönchgladbach

---

4.830-26 **மொத்த வரவுகள்**









## அனுப்பிய விபரம்.. (மழைவெள்ளம், புயல், மண்சரிவு)

ரூபா - யூரோ - திகதி - அனுப்பிய இடங்கள்

1.00.000-00 - 288-23 - 02.12.2025 - வேவண்டன் தோட்டம் - றம்பொட
1.00.000-00 - 283-21 - 27.12.2025 - வேவண்டன் தோட்டம் - றம்பொட

1.00.000-00 - 285-23 - 02.12.2025- போகவந்தலாவ தோட்டம் - கொத்மலை
50.000-00 - 142-15 - 15.12.2025- போகவந்தலாவ தோட்டம் - கொத்மலை
50.000-00 - 145-33 - 29.12.2025- போகவந்தலாவ தோட்டம் - கொத்மலை

1.00.000-00 - 286-88 - 05.12.2025 - புனிததிருச்சபை தேவாலயம் - ஹற்றன்

1.00.000-00- 283-16 - 29.12.2025 - கண்டிப் பிரதேச தோட்டங்கள்
சமூகச்செயற்பாட்டாளர் - திருமதி தா செல்விநடராசா

1.00.000-00 - 288-10 - 02.12.2025- ஹரிரிதாஸ்(கத்தோலிக்கஅமைப்பு- மன்னார்
1.00.000-00 - 282-73 - 23.12.2025- ஞானப்பிரகாசம் மரியசீலன் - மன்னார்
46.719-96 - 167-22 - 08.01.2026- சாந்தோம் முதியோர் இல்லம் - மன்னார்

1.00.000-00 - 288-10 - 02.12.2025-அட்சயம் தொண்டு நிறுவனம் - வவுனியா

1.00.000-00 - 288-10 - 02.12.2025 - உதவுங்கரங்கள் அமைப்பு - மட்டக்களப்பு
80.000.00 - 229-62 - 08.01.2026- உதவுங்கரங்கள் அமைப்பு - மட்டக்களப்பு

1.00.000-00 - 286-88 - 05.12.2025 - ஒளிரும் வாழ்வகம் - புதுக்குடியிருப்பு
50.000-00 - 145-33 - 29.12.2025 - ஒளிரும் வாழ்வகம் - புதுக்குடியிருப்பு

1.00.000-00 - 285-24 - 02.12.2025- ஒளிரும் வாழ்வு அமைப்பு - துணுக்காய்
50.000-00 - 142-16 - 15.12.2025- ஒளிரும் வாழ்வு அமைப்பு - துணுக்காய்

1.00.000-00 - 284-13 - 15.12.2025 - தமிழ் சமூக அமைப்பு -திருகோணமலை
1.00.000-00 - 284-37 - 22..12.2025 - தமிழ் சமூக அமைப்பு - திருகோணமலை
60.000-00 - 174-09 - 08.01.2026 - சதீஸ் சமூகசெயற்பாட்டாளர் ”

----------------------------------------------------------------------------------------------------

16.86.719-96 -4.830-26 யூரோ

**மொத்த வரவுகள் - 4.830-26 யூரோ**

**மொத்த செலவுகள் - 4.830-26 யூரோ**

--------------------

**மீதி கையிருப்பு - 00-00 யூரோ......31.12.2025**

# யேர்மனி - கனகசபை நடன கலாலயம்...

## 20ஆவது ஆண்டு விழா – ஆடல் அரங்கம்

யேர்மனி எசன் நகரத்தில் அமைந்துள்ள கனகசபை கலாலயத்தின் 20ஆவது ஆண்டு நிறைவுவிழா ஆடல் - அரங்கம் 10.01.2026ஆம் திகதி ி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கனகசபை கலாலயம் பாடசாலையின் நிறுவனர் நடன ஆசிரியர், பல்துறைச் செயற்பாட்டாளர், யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவி, நாட்டியநுண்கலைமாணி திருமதி. சாந்தினி துரையரங்கன் அவர்களின் நெறிப்படுத்தலுடன் நேர்த்தியான ஒழுங்கமைப்பில், ஆடல் அரங்க நிகழ்ச்சிகள் யாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. நிகழ்ச்சிகளை செல்வன்.நகுல் துரையரங்கன், யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் திரு.சிவகிருஷ்ணநாதன் சிவவினோபன் இருவரும் சிறப்பாகத் தொகுத்து வழங்கினர்.

பக்கவாத்தியக் கலைஞர்கள் நட்டுவாங்கம்: நாட்டியநுண்கலைமாணி திருமதி.சாந்தினி துரையரங்கன், மிருதங்கம்: மிருதங்கக் கலாஜோதி, இசைக்கலாஜோதி திரு.கஜன் சிவபாலன், பாடலிசை: இசைக்கலாஜோதி, நாட்டியக் கலாஜோதி செல்வி.கார்த்திகா சிவபாலன், வயலின்: எசன் நுண்கலைக் கல்லூரி வயலின் ஆசிரியை, இசைக்கலாஜோதி செல்வி.சயனி நயினைவிஜயன், சுரத்தட்டு: ஆசிரியர் பல்துறைக்கலைஞன் திரு.அன்ரன் ஆகியோரின் சிறப்பான இசை அமைப்புடன் கலாலயத்தின் மாணவர்கள், பழைய மாணவர்கள் என நடனங்களை மிகச் சிறப்பாக ஆடினர். தொடர்ந்து நடைபெற்ற நடனங்களைச் சபையினர் மிகவும் இரசனையுடன் ஆர்வமாக பார்த்துப் பரவசமடைந்திருந்தனர்.

மாணவர்கள் யாவரும் சேர்ந்தாடிய புஸ்பாஞ்சலி, மற்றும் கீர்த்தனை, தில்லானா, தசாவதரா நாட்டிய நாடகம், போன்ற நடனங்கள், நடன ஆசிரியர்களையும், இசையாசிரியர்களையும், பார்வையாளர்களையும் மிகவும் சிறப்பாகக் கவர்ந்தன. வேற்று நாட்டில், வேற்றுமொழி மூலம் கல்வி கற்றுவரும் நேரகாலத் தடுமாற்றங்கள் நிறைந்த செயற்பாடுகள் கொண்ட பிள்ளைகளை ஒன்றிணைத்து இந்நடனங்களைப் ஒழுங்கமைத்து நெறிப்படுத்தியமை, நடன ஆசிரியர் திருமதி.சாந்தினி துரையரங்கன் அவர்களின் ஆசிரியத்தகைமைகளையும், அவரது பல்துறைச் செயற்பாட்டுத் தன்மைகளையும் வெளிகாட்டியதாக அமைந்தன.

ஆசிரியரால் தொகுக்கப்பட்ட ”மாணவர்களுக்கான பரதக்குறிப்புகள் தொகுப்பு - 1” என்ற நூல், இவ்வரங்கில் வெளியீடு செய்யப்பட்டமை சிறப்பாகப் போற்றப்பட்டது. நூலின் அறிமுக உரையை ஆடற்கலாலய இளம் ஆசிரியர் நடனக் கலாஜோதி நிமலன் சத்தியகுமார் அவர்கநிகழ்த்தினார்.. நூலின் முதல் மூன்று பிரதிகளை ஆடற் கலாலய அதிபர் திருமதி. ரெஜினி சத்தியகுமார் வெளியிட, இராஜேஸ் நர்த்தனாலய அதிபர் திருமதி. துஸ்யந்தி ஜெகதீஸ்வரன் அவர்களும் பெற்றோர்கள் இருவரும் அரங்கில் பெற்றுக் கொண்டனர். இலண்டன் தமிழ் வானொலி,பாமுக இயக்குநர், திரு. நடாமோகன் அவர்களும் இன்னும் பல பிரமுகர்களும் ஆசிரியரைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர். விழா சிறப்பாக முடிவடைந்தது...

**ஜீவகன் - யேர்மனி**

வைரமுத்து சிவராஜா,
பிரதம ஆசிரியர்,
"மண்" சஞ்சிகை
ஜேர்மனி
31.12.2025

**இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நலச்செயற்றிட்ட தகவல்களும் நன்றி நவிலலும்**

எமது நாட்டில் கடந்த மாதம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் காரணமாக மலையக பகுதிகள் உட்பட நாட்டின் அனைத்து பாகங்களும் அதிகளவு பாதிப்பை எதிர்நோக்கியது. இந்நிலைமையை கருத்திற்கொண்டும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காகவும் உதவிக்கரம் நீட்டும் பொருட்டு கடந்த 05.12.2025 அன்று ரூபா.100000 எனது இலங்கை வங்கிக் கிளைக்கு வைப்புச் செய்யப்பட்டது. குறிப்பிட்ட பணத்தொகைக்கு பெரிதும் பாதிக்கப்பட்ட நுவரெலியா மாவட்டத்தின் தலாவாக்கலை, கொட்டகலை மற்றும் பத்தனை ஆகிய தோட்டப்பகுதிகளை சார்ந்த 24 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

மேலும் 18.12.2025 அன்று ரூபா.50000 எனது வங்கிக் கிளைக்கு வைப்பிலிடப்பட்டது. அத்தொகையில் நுவரெலியா மாவட்டத்தின் மஸ்கெலியா மற்றும் நோர்வூட் ஆகிய பகுதிகளில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு, பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் 17 குடும்பங்களை சார்ந்த 24 பாடசாலை மாணவர்களுக்கான கொப்பிகள் மற்றும் கணித கருவிப்பெட்டி ஆகியன வழங்கப்பட்டன.

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு தற்போதும் அதன் தாக்கத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு உதவிக்கரம் நீட்டிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை மலையக மக்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி,


Dr. Rameshkumar Subramaniyam
GENERAL PHYSICIAN
SLAMC Reg No. 16761
Dr. ரமேஸ்குமார்

# லெவண்டன் தோட்டம் - இறம்பொடை நுவரெலியா மாவட்டம்..

மதிப்பிற்குரிய மண் சஞ்சிகை ஆசிரியர்..அவர்களுக்கு,எதிர்பாராத பெரும் அனர்த்தமான இயற்கை சூழலால் கொத்மலை பிரதேசபகுதியில் பெரிதும் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்து நிர்க்கதியாகி அப்பிரதேச பாடசாலையில் தஞ்சம் புகுந்திருக்கும் எங்களுக்கு, ஜேர்மன் நாட்டில் இயங்கிவரும் மண்சஞ்சிகை மூலமாக தங்களால் அனுப்பப்பட்ட ஒரு இலட்சம் ரூபா பணம் பெரிதும் உதவியாக அமைந்திருந்தது என்பதை மகிழ்வோடு அறியத்தருகின்றோம்.

ஈடுசெய்ய முடியாத அளவுக்கு பாதிப்புக்குள்ளாகி இருக்கும் எங்களுக்கு தக்க சமயத்தில் உதவிக்கரம் நீட்டிய தங்களையும் தங்கள் குழுசார்ந்தவர்களையும் நன்றிக்கடனோடு வணங்கிக் கொள்கிறோம். இப்படியான தங்களது அரிய பல சேவைகளால் அவ்வப்போது நாமும் பயனடைகிறோம் என்பதை எமது பிரதேச மக்கள் சார்பாகவும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இங்ஙனம் தாழ்மையோடு - 12.12.2025
நிவாரண செயற்பாட்டாளர்
**திரு மாயவன் ஜெயசீலன்...**


Grama Niladari,
474J,
Helbodde,
Katukithula.
Through Divisional Secretary

M. Jeyaseelan,
Chairman,
Welfare Society.

**Supporting for the Ditwa Cyclone Disaster**

This is to certify that the M. Jeyaseelan, who is supporting us for the above disaster situation by helping dry ration packs and gather equipment's to the Grama Niladari Divisions of the Kothmale Divisional Secretary. , 474/J Hellbodde
This Letter is Issuing Under Request of M. Jeyaseelan
197228004058

Thanking You,

474/J Hellbodde

ॐ

# SRI SHANMUGA GIRLS' HOME

## ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம்

Owned By Sri Shanmuga Trust

76(54) Vidyalayam Road,
Trincomalee,
srilanka,
026-2222521

Reg.No-NEP|PCC|CH|31
[1998.05.18]

76(54) வித்யாலயம் வீதி,
திருகோணமலை

Date 2025-11-24.

Founder Trustee
Late N. Krishnadasan
Retd Commissioner of Assizes

Managing Trustee
V. Krishnadasan
B.A,LL.B,LLM
Barrister At-Law

Actg. Managing Trustee
Mr. B. Janaranjan JP

Secretary & Custodian Trustee
Miss. V. Nadarajah B.Sc

Committee Members
(Board of Management)
Mrs. T. Hariharan B.A(Hons)
(Deputy Principal SSHLC)
Dr. T. Mayurathi
Mrs. T. Sivarajah B.A
Mrs. S. Puvaneswaran B.A
Mrs. D. Shantharupan
Miss. V. Nadarajah B.SC

Manager-GIRLS'HOME
Mrs. P. Vanisri

Bankers:-
BOC-Trincomalee
A|C No-2366400
N.S.B-Trincomalee
A|C No-100890163465

Auditors:-
Sambamoorthy & Co
Trincomalee Branch.

திரு. கை. சிவராஜா,
பிரதம ஆசிரியர்
மண் சஞ்சிகை
ஜேர்மனி

ஐயா

<u>480 யூரோ நிதி உதவி பெற்றுக்கொண்டமை 2025</u>

நீங்கள் இலங்கை வங்கிக்கு அனுப்பிய 480 யூரோ (ரூ 167 213.02) கிடைத்துள்ளது. இவ் நிதியுதவியை அனுப்பிய நீங்கள் மண் சஞ்சிகை வாசகர் திருமதி சாந்தினி துரையரங்கன் அவர்களுக்கும். எமது மனமார்ந்த நன்றியை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். செல்வி நிக்கா யாழ் பல்கலைக்கழகத்தில் முதலாம் வருட கல்வியை நிறைவு செய்துவிட்டார். பல்கலைக்கழக ஆரம்பத்தில் நிதியிலிருந்து முதல் வருட படிப்பை பெற்றுக்கொண்டார். இன்னமும் வருடங்களில் வெளியில் நிதியிலிருந்து கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. இந்நிலையில் அவரது செலவுகள் அதிகரிக்கும். நீண்ட விடுமுறையில் இல்லத்திற்கு வந்துள்ளார். 2026ம் ஆண்டிலிருந்து வாடகை அறையில் ஏனைய சில பிள்ளைகளுடன் சேர்ந்து இருப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு வந்துள்ளார். இத் தருணத்தில்

Mrs. T. Hariharan.B.A(Hons)
President
Board of Management
0754247935

Mrs. Sivaraja B.A
Secretary
Board of Management
0776531826

Miss V. Nadarajah.B.SC
Treasurer
Board of Management
0771360012

நாங்கள் அனுப்பிய பணம் நிதியுதவி பெரிதும் உதவியாகவுள்ளது.
இந்த நிதியுதவியினை அவரது பட்டப்படிப்பு முடியும் வரை
வழங்கி வந்தால் மிகவும் உதவியாக இருக்கும் என்பதனையும்
அறியத்தருகின்றேன். தற்பொழுது இவ் இல்லத்தில் 19 பிள்ளைகள்
உள்ளனர். அவர்கள் தரம் 3 இலிருந்து க.பொ.த. உயர்தரம் வரை
கல்வி கற்கின்றனர். இவர்கள் யாவரும் பாதிக்கப்பட்ட குடும்பத்தில்
இருந்து வந்தவர்கள். நிர்வாக அனுமதியுடன் மேலும் பிள்ளைகள்
வந்துள்ளனர். இவர்கள் பெற்றோருடன் இணைய சந்தர்ப்பம்
கிடைப்பது கடினமாகும். இவர்கள் தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர்
கல்லூரியிலும் மற்றும் தி/விக்னேஸ்வரா மகா வித்தி
யாலயத்திலும் கல்வி கற்று வருகின்றனர்.
இப்பிள்ளைகள் மேம்பாட்டுக்கு உதவி செய்கின்ற தங்கள் மகத்
சேவைக்கு என்றும் நான் கடமைப்பட்டுள்ளேன்: எனது உடல்நிலை
பலவீனமடைந்து வருகின்றது. இவ் இல்லப் பொறுப்பிலிருந்து
ஓய்வு பெற்றுக்கொள்ள விரும்புவதனை ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள்
முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் உறுதியாகக் கூறியுள்ளேன், ஸ்ரீ சண்முக
தர்ம ஸ்தாபனத்திற்கும் தெரிவித்துள்ளேன்: இருப்பினும் ஸ்ரீ சண்முக
தர்ம ஸ்தாபன உறுப்பினராக தொடர்ந்து இல்லத்துடன் இணைந்து
இவ் இல்லத்தில் சுமார் 37 வருடங்களாக இல்ல முகாமையாளராக
சேவை செய்துள்ளேன். "மக்கள் சேவையே மகேசன் சேவை" எனும்
மகானான ஸ்ரீ சத்யசாயி பாபாவின் போதனையை இவ் இல்லத்தில்
ஊதியம் பெறாமல் சேவை செய்ய சந்தர்ப்பம் அமைந்து தந்த
எமது தர்மஸ்தாபனத்திற்கும் இறைவனுக்கும் எனது மனமார்ந்த
நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். தாங்களும் தங்கள் குடும்
பத்தவர்களும் ஆரோக்கியமாக இருக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்
இன்று 24/11/2025ம் திகதி இப் புதிய கட்டடம் கட்டப்பட்டு
35 வருடங்கள் நிறைவடைந்துள்ளது.

Treasurer
Sri Shanmuga Girls' Home

## மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1-3 திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு

உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலினிசா (பி.தி 10.04.2014)
செல்வகுமார் சதுமிகா (பி.தி 12.11.2010)
றொனி டிலக்சனா

(பி.தி 28.10.2015)

.......................................................................................................................

4-5 திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- மகேஸ்வரன் அர்ச்சனா(பி.தி 19.05.2009)

.......................................................................................................................

6- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சுரேஸ்குமார் மனோறஞ்சனி (30.08.2004)

.......................................................................................................................

7- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சிவகுமார் சிரோமி (பி தி 30.08.2014)

.......................................................................................................................

8-9 திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Frankfurt - 480-00 யூரோ
அமுதசுரபி அறக்கட்டளை - வவுனியா
உதவி பெறுவோர்..செல்வி சிற்பவானந்தராசா டேன்சிகா பிதி

10- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா

உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 ) ..

.................................................................................................................................

11- Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)

.................................................................................................................................

12- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

.................................................................................................................................

13 திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம் - தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - சுரேஸ் சுஜந்தினி (பிதி 23.10.2013)

.................................................................................................................................

14- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நல்லரெட்ணம் துர்க்கா பிதி 25.11.2003

.................................................................................................................................

15- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நிசாந்தன் லதுமிக்கா பிதி 23.02.2015

.................................................................................................................................

16- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim - 2.400-00யூரோ
நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்(1200-00 +1200-00)
உதவி பெறுபவர் இல்லப் பிள்ளைகள் அனைவரும்

---------------------------------------------------------------------------------------------------------------.

**பொறுப்பெடுத்தவர்கள் 13 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)**

**உதவி பெறுவோர் 15 பிள்ளைகள் + மாங்குளம் நல்லாயன் சிறுவர் இல்லம் (தாயகம் - சிறீலங்கா)**

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-11-2025 - 71-98

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
03. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Frankfurt + 40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
04. திரு. Johannas Gruendler - Köln + 40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
05. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen + 50-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு-
06- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen + 40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen + 40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
08- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg + 40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
09- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim + 200-00
(நல்லாயன் சிறுவர் இல்லம் கல்வி மேம்பாட்டு மாதாந்த உதவி)

------------------

\+ 530-00 + 530-00

---------------

\+ 601-98

10- திரு வை துரையரங்கன் - Essen - + 211-07
(பிறந்தநாள்அன்பளிப்பு)
11- செல்வி நித்தியா இரத்தினசிங்கம் - Duisburg + 250-00
(கணனி அன்பளிப்பு))

12- செல்வி லாவண்யா அற்புதராசா - Soest + 30-00

---------------

491-07 + 491-07

----------------

\+ 1.093-05

முற்பக்கப்படி + 1.093-05

**அனுப்பியது...**

| | ரூபா | யூரோ |
|---|---|---|
| 1) ஒளிரும் இல்லம்"மல்லாவி-துணுக்காய் -. | 35.000-00 | - 105-57 |
| (11.12.2025 வை.துரையரங்கன் பிறந்தநாள் அன்பளிப்பு-Essen) | | |
| 17.11.2025 நித்தியா இரத்தினசிங்கம் | | |
| கணனி கொள்வனவு - Duisburg - | 92.990-00 | - 250-00 |
| 08-01-2026வருடாந்தஉதவி(மாணவர்கள்)- | 1.70.175-60 | - 480-00 |
| 2) நல்லாயன் சிறுவர் இல்லம்-மாங்குளம் | -35.000-00 | - 105-50 |
| (11.12.2025 வை.துரையரங்கன் பிறந்தநாள் அன்பளிப்பு-Essen) | | |

- 941-07 - 941-07

+ 151-98

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.11.2025 - 30.11.2025 - 21-89
01.12.2025 - 31.12.2025 - 43-59.................................... - 65-48

31.12.2025 மீதி கையிருப்பு + 86-50

## மழைவெள்ளம், புயல், மண்சரிவு கணக்கு...

2025 நவம்பர், டிசம்பர் மாதங்களில் இலங்கையில் இடம்பெற்ற பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணிகளுக்காக நமது சஞ்சிகையின் வாசகர்கள், மனிதநேயம் மிக்கவர்கள், மற்றும் நலன்விரும்பிகள் பெரும் நிதிப்பங்களிப்பைச் செய்தார்கள். அனைத்து நல்லுள்ளங்களுக்கும் பெரு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- அன்பளிப்பாகக் கிடைத்த பணம் (40 பேர்) - 4.830-26 யூரோ

- வடக்கு, கிழக்கு, மலையகம் அனுப்பியது (14 இடங்கள்) - 4830-26 யூரோ
  ( இலங்கைப் பெறுமதி 16.86.719-96 ரூபா )

**( 64, 65, 66ம் பக்கங்களில் அன்பளிப்பு வழங்கியவர்கள் விபரங்கள் பணம் அனுப்பிய விபரங்களைக் காணலாம் )**

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාල්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai
Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 T.P:- 0212060620 Fax:-0774868085 FarmNo:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085
திகதி: 10 /12 /2025

திரு வை.சிவராசா,

மண்சஞ்சிகை,

யேர்மனி.

**வெள்ள அனர்த்த நிதி பெற்றுக்கொண்டமை தொடர்பானது**

03.12.2025

அன்றைய தினம் எமது ஒளிரும் வாழ்வு அமைப்பின் வங்கிக் கணக்கிற்கு ரூபாய் இரண்டு இலட்சம் (200000.00) வைப்பிலிட்டிருந்தீர்கள். நிதி கிடைத்தமையிட்டு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு இந் நிதியில் ஒரு இலட்சம்(100000.00) ரூபாவினை **செல்வகந்தை தோட்டம் போகவந்தலாவ பிரதேசத்தில்** வசிக்கும் மக்களுக்கு வெள்ள நிவாரண பொதியினை வழங்குவதற்காக பாண்டியன்குளம் பிரதேச செயலக உத்தியோகத்தர் **திருமதி இ.றுஜினா** அவர்களிற்கும், **துணுக்காய்** பிரதேசத்தில் வெள்ளப்பேரிடரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான அத்தியவசிய பொருட்கள் அடங்கிய பொதியினை வழங்குவதற்காக பயன்படுத்தியிருந்தோம். இந் நிதி அன்பளிப்பை வழங்கிய **"மண் சஞ்சிகை" பிரதம ஆசிரியர் திரு வை.சிவராசா** அவர்களுக்கு நன்றியை கூறிக்கொள்வதோடு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

**குறிப்பு:-**

5000.00 ஐயாயிரம் ரூபாய் வீதம் இருபது குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணபொதி வழங்கப்பட்டது.

**"தங்களின் உதவிக்கும் ஆதரவிற்கும் என்றும் எமது நன்றிகள்"**

..............................

**தலைவர்,** ஒளிரும்வாழ்வு அமைப்பு
துணுக்காய்

**ஒளிரும்வாழ்வு அமைப்பு,**

**துணுக்காய்,**

**Good Shepherd Child Development center,**
**Mullai Road, Mankulam,**
**Srilanka.**
E-mail – mankulamcdc@gmail.com
Tel. No. – 0212060077/+94 775924582
Date: 11.12.2025


அன்பின் மண் சஞ்சிகை உறுப்பினர்களுக்கு இறையாசீர் நிறைந்த உள்ளத்துடன் நன்றிகளை கூறி வரைவது

திரு வைத்தியலிங்கம் துரையரங்கன் அவர்களின் பிறந்தநாள் மகிழ்வை 11.12.2025 அன்று எம் நல்லாயன் இல்ல சிறுவர்களுடன் பகிர்ந்து மகிழ வேண்டும் என்ற நோக்குடன் மண் சஞ்சிகை அமைப்பின் ஊடாக அனுப்பிவைத்த ரூபா 35000.00 எம் கரம் கிடைத்தது. இன்று இல்லத்தின் சிறார்களுக்கு சுவையான மதிய உணவளித்ததுடன் திரு வைத்தியலிங்கம் துரையரங்கன் அவர்களுக்காக சிறப்பாக செபித்து நின்றோம். உங்களது மகிழ்வில் எம் பிள்ளைகளையும் இணைத்த உங்களின் தாராள உள்ளத்திற்கு நன்றி கூறுகின்றோம் .

நேரிலே எம்மால் அவரை வாழ்த்த முடியவில்லை என்றாலும் எமது வாழ்த்துக்களையும் இறையாசீர்களையும் இம் மடல் சுமந்து வருகின்றது. புதிய அகவையில் தடம் பதிக்கும் இந்நாளில் இறைவன் தமது ஆசீரினால் நிரப்பி ஆரோக்கியமான வளமான வாழ்வு வாழ ஆசித்து இனிய பிறந்த நாள் வாழ்து கூறி நிற்கின்றோம். தொடர்ந்தும் உங்களின் பிறரன்புப் பணி பலர் வாழ்விற்கு புது விடியலை பெற்றுத்தர அயராது உழைக்கும் ஒவ்வொருவரையும் பாராட்டி நிற்கின்றோம்.

நன்றி.

இப்படிக்கு,
உங்களது அன்புப் பணியை மறவாத,
பிள்ளைகள் மற்றும் நிர்வாகத்தினர்.
Sr. Sumithra.



இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
Hindu Anpakam Children Development Center
හින්දු අන්පකම් ළමා සංවර්ධන මධ්‍යස්ථානය
இறந்தவர்களது குழந்தைகளை இரும்பவர்கள் காப்போம்
Parentless Children Pity Rescue, Protect Them

பதி.இல: NP/30/23/04/02
NEP/05/V/55/111
:No: HA/04/V/24

ail:
uanupakam@gmail.com

2ஆம் கட்டை, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா. தொ.இல: +94 024-2223683
2nd Mile post, Mannar Rd, Veppankulam, Vavuniya. T.P : +94 024-2223683

ident
yarany

President
hayakumar

tary
njana

rer
gy

ecretary
anth

reasurer
aran

f Members
ntharajah
arajiah
ndran
alar
kmi
yananthan
an
an
evi

letails
291
ional Bank

3
3

2025.12.11

பிரதம ஆசிரியர்
"மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை,
ஜேர்மனி.

நன்றி கூறுதல்

மேற்படி எமது இல்லச்சிறுமியான சிவராசா பவிதா என்பவரின் பராமரிப்புச் செலவிற்காக "மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை வாசகர்கள் ஊடாக 240 யூரே (ஒருலட்சத்து அறுபத்தையாயிரத்து இருநூற்று இருபத்து எட்டு ரூபா ஐம்பத்து இரண்டு சதம்) மட்டும் அனுப்பி வைத்தமைக்கு நாங்களும் எமது இல்லச்சிறார்களும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் உங்களின் சேவை மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல ஸ்ரீபத்திரகாளி அம்பாளை வேண்டுகின்றோம்.

மேலும் எமது சிறார்களின் உச்ச நலன் கருதி இதுபோன்ற உதவிகளை மென்மேலும் வழங்குவீர்கள் என நம்புகின்றோம்.

முகாமையாளர்
இந்து அன்பகம்
சிறுவர் அபிவிருத்தி நிலையம்
மன்னார் வீதி வேப்பங்குளம் வவுனியா.
பதிவு இல: NP/30/23/04/02

කොටගල ප්‍රාදේශීය සභාව
කොටගල
கொட்டகலை பிரதேச சபை
கொட்டகலை
**KOTAGALA PRADESHIYA SABAH**
**KOTAGALA**

| | | | | |
|---|---|---|---|---|
| කාර්යාලය<br>பணிமனை<br>Office — 0514932140 | සභාපති<br>தலைவர்<br>Chairman — 051 2244438<br>051 4932141 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax — 051 2244212 | ලේකම්<br>செயலாளர்<br>Secretary — 051 4932142 | විද්‍යුත් තැපෑල<br>மின் அஞ்சல்<br>E-Mail — kotagalaps@gmail.com |

මගේ අංකය / எனது இல. / My Ref — CPC/KGPS/E/03/2025
ඔබේ අංකය / உமது இல. / Your Ref —
දිනය / திகதி / Date — 2025.12.08

வைரமுத்து சிவராஜா
பிரதம ஆசிரியர்
'மண்' சஞ்சிகை
ஜெர்மனி

**நன்றி நவிலல் கடிதம்**

நுவரெலியா மாவட்டத்தின் கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட தலவாக்கலை மற்றும் பத்தனை தோட்டப் பகுதிகளில் சமீபத்தில் நாட்டில் ஏற்பட்ட பாரிய அனர்த்தங்களின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட எமது வேண்டுகோளுக்கு இணங்க, தங்களின் அமைப்பினூடாக திருமதி இ.றுஜினா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், மாந்தை கிழக்கு பிரதேச சபை) அவர்களின் ஒத்துழைப்பின் மூலம், வைத்தியர் சு. ரமேஸ்குமார் அவர்களால் எமது பிரதேச சபைக்குட்பட்ட பெயாவெல் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 4000.00 பெறுமதியான 08 உலர் உணவுப் பொதிகளும் பத்தனை மவுண்ட்வேனன் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 16 உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

குறித்த பொதிகள் பிரதேச சபையின் மூலம் தேவையுடைய மக்களிடம் ஒழுங்குபடுத்தி கையளிக்கப்பட்டது. இந்த உலர் உணவுப் பொதிகளை தக்க சமயத்தில் வழங்கி மக்களுக்கு பெரும் துணையாக இருந்ததற்காக கொட்டகலை பிரதேச சபையின் நிர்வாகம் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இராஜமணி பிரசாந்த் ([illegible])
தலைவர்
கொட்டகலை பிரதேச சபை

தலைவர்
கொட்டகலை பிரதேச சபை

**பிரதி** : ஒளிரும் வாழ்வு அமைப்பு, துனுக்காய்

**Caritas -Valvuthayam**
**Diocese of Mannar**
(Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament No.17 of 1983)

30.12.2025

பணிப்பாளர்.
மண் சஞ்சிகை,

**இறையேசுவின் இனியநாமத்தில் நல்வாழ்த்துக்கள்!**

**பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக உளமார நன்றி கூறுகின்றோம்**

அண்மையில் எமது நாட்டில் கோரத்தாண்டவமாடிய (Ditwah) சூறாவளியினால் பாதிக்கபட்டு மக்கள் உணவின்றி, இருப்பிடமின்றி, உறக்கமின்றி, சொல்லணா துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்துக்கொண்டிருந்த வேளையில், மக்கள் சார்பான எமது உதவிசார் கோரிக்கையினை தாங்கள் கவனத்திலெடுத்து, உடன்டியாக தக்க நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு தங்களது தாராள உள்ளத்தால் பல வழிகளிலும் உதவிக்கரம் நீட்டியுள்ளீர்கள். எனவே இவ் உதவிகளிற்காக நாம் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக எமது உளம் கனிந்த நன்றிகளை பேருவகையோடு தெரிவிக்கின்றோம்.

தங்களது உதவி கிடைத்த அடுத்த கணமே நாம் இரவு பகல் பாராது எமது பணியாளர்களுடன் இணைந்து, மக்களின் தேவைகளை அறிந்து, அதற்கேற்ப நாம் தங்களின் உதவிகளை வழங்கியுள்ளோம். எனவே உதவி பெற்ற மக்கள் தங்களின் தாராள உள்ளத்திற்கும் விசேடமாக தக்கநேரத்தில் கரம்கொடுத்து தாங்கிய தங்களின் உதவிக்காகவும் நன்றி கூறுகின்றார்கள்.

எனவே இந்நேரத்தில் மண் சஞ்சிகை மூலமாக நாம் பெற்ற உதவிகளிற்கு வாழ்வுதயம் சார்பாக உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம். அத்துடன் உதவிக்கரம் நீட்டிய எமது புலம்பெயர் உறவுகளையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

பிறந்திருக்கும் பாலக இயேசுவின் அன்பும், அரவணைப்பும் வழிநடத்துதலும் தங்கள் ஊடக சேவைக்கு நிறைவாகக் கிடைக்க ஆசித்து நிற்பதோடு, புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

நன்றி

..............................
**இயக்குநர்,**
**கறிற்ராஸ்-வாழ்வுதயம்,**
**மன்னார்**

CARITAS - VALVUTHAYAM
REV.FR.G.ARULRAJ CROOS
Director
No: 180, Main Street, Mannar, Sri Lanka.

**Caritas Valvuthayam, No.180, Main Street, Mannar.**
**Telephone: 023-22 22 140**

# மண் சஞ்சிகையினரின் நிவாரணப் பணிகள்



திருகோணமலை மாவட்டம் - மூதூர் - கங்குவேலி பிரதேசம்



முல்லைத்தீவு மாவட்டம் - புதுக்குடியிருப்பு பிரதேசம் - ஒளிரும் அமைப்பு



வவுனியா மாவட்டம் - வவுனியா "அட்சயம்" தொண்டு நிறுவனம்

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

ERDE

MANN
Germany / Ausgabe 235




# அனைவருக்கும் இனிதான தைப்பொங்கல் நல் வாழ்த்துகள் 2026

வருட சந்தா ஜேர்மனி 20€
ஏனைய நாடுகள் 25€